இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 220 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 20 செவ்வாய்க்கிழமை 04.07.2017

## நீண்டகாலக் கனவு நிறைவேறியது

# மயிலிட்டித்துறை 27 ஆண்டுகளின் பின் நேற்று மீட்பு

### மகிழ்ச்சிப் பிரவாகத்தில் நேற்று மக்கள் ஆலயங்களில் பக்திபூர்வமாக வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூலை 4
இரண்டரை தசாப்தங்களின் பின்னர் மயிலிட்டித் துறைமுகம் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மகிழ்ச்சிப் பிரவாகத்துடன் மக்கள் தமது சொந்த மண்ணில் கால் பதித்தனர். நீண்டகாலக் கனவு நனவாகியதாக அவர்கள் >> 25



## ஐ.நா. செயலருக்கு தமிழர்கள் மனு

கொழும்பு, ஜூலை 4
இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான மனு ஒன்று ஐ.நா பொதுசெயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டரெஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
நாடுகடந்த தமிழீழ அரச தரப்பி >> 25

## மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியில் 4 சதவீதம் மட்டுமே மே வரையில் செலவு

யாழ்ப்பாணம், ஜூலை 4
நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையில் 4 சதவீதம் மாத்திரமே மே மாதம் முடிவு வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது. >> 25

## மருத்துவர்கள் நாளை முதல் தொடர் போராட்டம்

கொழும்பு, ஜூலை 4
சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை முதல் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்தது. >> 25

## கடந்த காலச் சூழல் மீண்டும் வேண்டாம்

*மக்கள் கோரிக்கையை நிறைவேற்ற இராணுவம் தயார் என்கிறார் தளபதி*

யாழ்ப்பாணம், ஜூலை 4
கடந்த காலத்தில் நிலவிய விரக்தியான சூழ்நிலைக்கு நாம் மீண்டும் செல்லக்கூடாது. தேசியப் பாதுகாப்புக்கு >> 25

### வித்தியா படுகொலை வழக்கு:

## மரபணு அறிக்கை உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் நேற்று தீர்ப்பாயத்திடம் முன்வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மரபணுப் பரிசோதனை அறிக்கை, மொறட்டுவப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தால் ஆய்வு செய்யப்பட்ட சான்றுப்பொருள்களின் அறிக்கை உள்ளிட்ட ஆவணங்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் மன்றால் தீர்ப்பாயத்திடம் (ட்ரயல் அட் பார்) பாரப்படுத்தப்பட்டன. >> 06

## மாவீரர் குடும்பங்கள், போராளிகளுக்கு நிதியைப் பெற்றுத்தர மறுத்தவர்கள் இன்று தமிழ்த் தேசியம் பேசுகிறார்கள்

### வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் சாட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 4
"முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்க நிதியைப் பெற்றுத்தராதவர்கள் இப்போது தமிழ்த் தேசியம் பேசிக் >> 23

## உமாஓயா பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் போராட்டம் வெடிக்கும்

### அரசுக்கு ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 4
உமாஓயா பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் அமைச்சரவை உபகுழு தனது >> 04

## இவ்வருடம் நடக்காது உள்ளூராட்சித் தேர்தல்

### வர்த்தமானி அறிவித்தலை பின்தள்ளியது மைத்திரி அரசு

கொழும்பு, ஜூலை 4
உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் தொடர்பான அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் மைத்திரி அரசால் மேலும் >> 04

## விடுவிக்கப்படாது எனக் கூறிய மயிலிட்டித்துறை எம் கைகளில்

### இது ஒரு படி மட்டுமே என்கிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
விடுவிக்கப்படவே மாட்டாது என்று சொல்லப்பட்டு வந்த, மயிலிட்டித் துறைமுகம் இன்று விடுவிக்கப்பட்டு எமது >> 25

## நான்கு சாலைகளை இராணுவம் விரைவில் விடுவிக்கும் சாத்தியம்



யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தின் வசமுள்ள 4 சாலைகள், 3 பாடசாலைகளை முதற்கட்டமாக விடுவிக்க வேண்டும் என்று இராணுவத்தினரிடம் கோரப்பட்டுள்ளது. அந்தக் கோரிக்கை சாதகமான முறையில் பரிசீலிக்கப்பட்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத் தரப்பு கூறியுள்ளது என அறிய முடிகின்றது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தின் வசமுள்ள காணிகளை விடுவிப்பது >> 04

## தனிநாட்டை உருவாக்கும் வகையில் வடக்கு-கிழக்குக்கு காணி அதிகாரம்

### புதிய அரசமைப்பின் ஊடாக அதுவே நடக்கின்றது என்கிறார் வீரவன்ச எம்.பி.

கண்டி, ஜூலை 4
"தனிநாட்டுக்கான அடித்தளத்தை இடுவதற்காகவே வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் பொலிஸ், காணி அதிகாரங்களைக் கோருகின்றன. அரசமைப்பில் அதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன"
இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.
கண்டி தபாலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற 'சல்லாபிக்கும் அரசும் துர்நடத்தைக்குள்ளாகும் இலங்கை மாதாவும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் >> 25

## டெங்கினால் மாணவர்கள் இருவர் சாவு

கொழும்பு, ஜூலை 4
டெங்கு நோய் காரணமாகப் பதுளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பாட >> 25

## திருமலையில் மகிந்தவை காணத் திரண்டது கூட்டம்



கொழும்பு, ஜூலை 4
சீனன்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் திட்டத்தை எதிர்த்தும், ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைக் கண்டித்தும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் பொது எதிரணி திருகோணமலையில் நேற்று மாபெரும் எதிர்ப்புப் பேரணியை நடத்தியது.
மகிந்தவின் சகாக்களும், பொது எதிரணிக்கு ஆதரவு வழங்கும் தொழிற்சங் >> 23

### மன்னாரில் புதிய நுளம்பு தொடர்பில்

## தொற்றுத் தடுப்பு பிரிவினர் நேற்றிலிருந்து களஆய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 4
தலைமன்னாரில் இனங்காணப்பட்டிருக்கும் புதிய வகை நுளம்பினால் இது வரை தொற்று எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. எனினும் புதியவகை நுளம்பு தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சின் மலேரியா தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மன்னாரில் நேற்று ஆய்வில் ஈடுபட்டனர். >> 25

## ரூ.24 லட்சத்துடன் சென்ற பணியாளரைக் காணவில்லை

### அவரது மோட்டார் சைக்கிள் மீட்பு

### முறைப்பாட்டை ஏற்க பொலிஸ் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4
வங்கியில் வைப்புச் செய்ய வழங்கப்பட்ட 24 லட்சம் ரூபா பணம் வங்கியில் வைப்பிலிடப்படவில்லை. பணத்துடன் சென்றவரையும் பணத்துடன் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் உள்ள காட்வெயார் ஒன்றில் 5 வருடங்களாக >> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மீண்டது மயிலிட்டித் துறைமுகம்







## ரோகிதவழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 4
முன்னாள் பிரதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமானரோகித அபேகுணவர்தனவுக்கு எதிரான வழக்கு விசாரணை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம்2ஆம்3ஆம்திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்தவழக்குகொழும்புமேல்நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது, கணினிச்சாட்சியங்கள்தொடர்பில்ஆராய்வதற்கு தனியார் வங்கியொன்று எமக்கு அனுமதி வழங்கவில்லை. அதனால் வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறும் பிரதிவாதி தரப்பில்முன்னிலையானசட்டத்தரணி, மன்றில் கோரினார்.

கணினிச்சாட்சியங்களைஆராய்வது தொடர்பில் வங்கிக்கு உத்தரவு பிறப்பிப்பதாக அறிவித்த நீதிபதி வழக்கு விசாரணையை எதிர்வரும்ஓகஸ்ட்மாதம்2ஆம் 3ஆம் திகதிகளுக்கு ஒத்திவைத்தார். 41.2மில்லியன்ரூபாசொத்துக்களைச் சட்ட விரோதமாகச் சேர்த்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர்ரோகிதவுக்கு எதிராக, இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் புலனாய்வு செய்யும்ஆணைக்குழுவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(ஐ-10)

# சைட்டம் பிரச்சினைக்கு மகிந்தவே முழுப்பொறுப்பு

## அமைச்சர் சம்பிக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 4
இலங்கையில் சைட்டம் பிரச்சினை சமூகப் பிரச்சினையாக உருவெடுப்பதற்குமுன்னாள்அரச தலைவர் மகிந்த ராஜபக்சவே பொறுப்பு கூற வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், மேல்மாகாணஅபிவிருத்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில்கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள சைட்டம் தனியார் பல்கலைக்கழகத்தை இழுத்து மூட வேண்டும். அந்த பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்களுக்கு மாற்றுவழிகளை ஏற்பாடு செய்து, அந்தப்பல்கலைக்கழகத்தைஅரசு ஏற்க வேண்டும்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் மாலபேபகுதியில்ஆரம்பிக்கப்பட்ட சைட்டம் தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்தை மூடும்படி அரச பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள்பெரும்ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப்பல்கலைக்கழகத்துக்கு எதிராக அரச மருத்துமனைகளில் உள்ள மருத்துவர்களும்வேலைநிறுத்தப் போராட்டங்களையும்நடத்தியிருந்தனர். சம்பந்தப்பட்ட உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, சைட்டம்தொடர்பில்தனதுமுடிவை மாற்றிக்கொள்ள முடியாது என்று தெரிவித்து வருகின்றார்.

சைட்டம் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் மருத்துவப் பட்டம் வழங்கும் நிறுவனத்தை உடனடியாக நீக்கம் செய்ய வேண்டும். உயர்நீதிமன்றின் தீர்ப்பு வரும் வரை காத்திருக்கத் தேவையில்லை. அதேபோன்று சைட்டம் பல்கலைக்கழகத்தில் கடந்த 8,9 வருடங்களாக மற்றும் கடந்த மாதத்தில்சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படும் நீதி வழங்கப்பட வேண்டும்.

மாணவர்களிடையே பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவர்களுக்கு இலங்கை மருத்துவப் பேரவையின் ஊடாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களையும் மருத்துவர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தளவுக்குத் தகுதியற்ற மாணவர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத்தைத்திருப்பிவழங்குவதோஅல்லதுமருத்துவத்துறை சார்ந்த தொழில்வாய்ப்புக்களை வழங்குவதோ மேற்கொள்ள முடியும்.

சில அரசியல்வாதிகள் குறிப்பாக மகிந்த ராஜபக்ச தனது அரசியல் நடவடிக்கைகளுக்காகஇந்தப்பிரச்சினையைப்பயன்படுத்தமுயற்சிக்கின்றார். சைட்டம்பிரச்சினையின் காரண கர்த்தா மகிந்த. சைட்டத்தை ஆரம்பித்த பின்னர் ஏற்படும் விளைவுகளைக் கொண்டு பசில்ராஜபக்ச, கோத்தபாய, நாமல் ராஜபக்ச ஆகியோருக்கும் தனியான 3 மருத்துவ பீடங்களை ஆரம்பிக்கவும் அவர் எண்ணியிருந்தார். இப்படிச் செய்தவரே இன்றுவீரர்போலமுன்வந்துசைட்டம் மூடப்பட வேண்டும் என்று குரல்கொடுக்கின்றார். - என்றார்.
(ஐ-10)



## வயோதிபர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூலை 4
வவுனியா திருநாவற்குளம் பாரஊர்தி தரிப்பிடத்தில் நேற்று மதியம் வயோதிபர் ஒருவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார்.

வவுனியா திருநாவற்குளம் பாரஊர்திதரிப்பிடத்தில்சிலகாலமாக தங்கியிருந்த இராசரட்ணம் அரியரட்ணம்(வயது53)என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டார்.

தண்ணீர் தொட்டிக்குள் விழுந்த நிலையில் அவரது உடல் மீட்கப்பட்டது. வவுனியா பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி சோமரத்தின விஜயமுனி தலைமையிலன பொலிஸ்குழுசடலத்தை மீட்டது. மேலதிக விசாரணைகளைப்பொலிஸார்மேற்கொண்டுள்ளனர்.
(ற)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு காஸ் அடுப்பு

கொழும்பு, ஜூலை 4
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மில்லனியப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 10 குடும்பங்களுக்கு லிட்ரோ நிறுவனத்தால் எரிவாயு அடுப்புக்களும்சிலிண்டர்களும் வழங்கப்பட்டன.

களுத்துறை மாவட்ட மில்லனிய பிரதேச செயலக பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு எரிவாயு அடுப்புகள் மற்றும் சிலிண்டர்களை வழங்க லிட்ரோ எரிவாயு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வாக பாதிக்கப்பட்ட பத்துக் குடும்பங்களுக்குகாஸ்அடுப்புமற்றும்சிலிண்டர்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அரச தலைவர் செயலகத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டது.

எரிவாயு அடுப்பு, சிலிண்டர், ரெகுலேற்றர் ஆகியவற்றைக்கொண்டஒருபொருள்தொகுதியின் பெறுமதி ஐந்தாயிரத்துக்கு கூடுதலானதாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் மலித் ஜயதிலக்க, லிட்ரோ கேஸ் நிறுவன தலைவர் சலீல முனசிங்க, பணிப்பாளர் சமிந்த எதிரிவிக்ரம, மில்லனிய பிரதேச செயலாளர் சமந்திகா லியனகே ஆகியோரும் நிகழ்வில் பங்குபற்றினர்.
(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள்; அரசே முழுப்பொறுப்பு

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

மட்டக்களப்பு, ஜுலை 4
மட்டக்களப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் இருவர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், அவர்களது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது. இதற்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும் என்று உயர் நீதிமன்று நேற்றுத் தீர்ப்பளித்தது.
2007ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி மட்டக்களப்புப் பொலிஸாரால் தமிழ் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில், அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் கூறி மட்டக்களப்பைச் சேர்ந்த செல்வராஜா புஸ்பராணி மற்றும் அண்ணாமலை செல்வராஜா ஆகியோர் உயர்நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.
மனுவை விசாரித்த தலைமை நீதியரசர் பிரசாத் டெப் தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம், மனுதாரர்களது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், அதற்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும்எனவும்தீர்ப்பளித்தனர்.
அதன்படி, பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசால் 10 இலட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்பட வேண்டும் என்று நீதியரசர்கள் தமது உத்தரவில் சுட்டிக்காட்டினர். அதற்கு மேலதிகமாக, அப்போதைய மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.எஸ்.விக்ரமரத்ன, தனது சொந்த நிதியில் இருந்து மனுதாரர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவை இழப்பீடாக வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டனர்.
(ஐ-10)

## மது அருந்திய நபருக்கு ரூ.3 ஆயிரம் அபராதம்

கொழும்பு,ஜுலை 4
பொது இடம் ஒன்றில் மதுபானம் அருந்திய குற்றச்சாட்டை ஒப்புக் கொண்ட நபருக்கு 3 ஆயிரம் அபராதம் காலி பலப்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் நேற்று விதிக்கப்பட்டது.
சந்தேகநபர், பிரசித்தமான இடமொன்றில் மது அருந்திக்கொண்டிருந்த போது, அவரை அம்பலாங்கொடப் பொலிஸார் கைது செய்தனர். அவரை நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்திய போது நீதிவான் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து உத்தரவிட்டார்.
(ஐ-10)

## வீட்டுத்திட்டப் பயனாளி தெரிவில் அநீதி; பாதிக்கப்பட்ட பெண்கள் கவனவீர்ப்பு

மன்னார், ஜுலை 4
மன்னாரில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து மன்னார் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நான்கு குடும்பப்பெண்கள் மன்னார் பிரதேச செயலகத்துக்கு முன்னால் நேற்று திங்கட்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
"மன்னார் பிரதேச செயலர் பிரிவில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் தொடர்ந்தும் பாரபட்சம் காட்டப்படுகிறது, வீட்டுத்திட்டம் தொடர்பில் மன்னார் பிரதேச செயலகத்துக்குச் சென்றால் அதிகாரிகள் அசமந்தப் போக்குடன் நடந்து கொள்கின்றனர், எமக்கு நீதியான முறையில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து மன்னார் பொலிஸாரின் அனுமதியைப் பெற்று பல்வேறு வாசகங்கள்



எழுதப்பட்ட பதாகைகளைக் கையில் ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
பள்ளிமுனை மேற்கு, உப்புக்குளம் வடக்கு, பள்ளிமுனை கிழக்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
"எமக்கு வீட்டுத்திட்டம் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணம் இது வரை கூறப்படவில்லை. வீட்டுத்திட்டத்தைப் பெற்றுக்கொள்ள 6 வருடங்கள் காத்திருந்தோம். 3 வருடங்கள் தொடர்ச்சியாக வீட்டுத்திட்டம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தோம். தற்போது உரிய புள்ளிகள் கிடைக்கப்பெற்றும் வீட்டுத்திட்டத்தைப் பெற்றுக்கொள்ள 3 மாதங்களுக்கு மேலாகப் போராடி வருகின்றோம். மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் பலருக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. பண வசதி படைத்தவர்கள், தொழில் ரீதியில் முன்னேறியவர்கள் எனப் பலருக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த, வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பலருக்கு வீட்டுத்திட்டத் தெரிவுகளில் தெரிவு செய்யப்பட்டு பின் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்பட்டுள்ளது " என்று போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தெரிவித்தனர்.
போராட்டம் இடம் பெற்ற இடத்துக்கு வருகை தந்த மன்னார் மாவட்ட மேலதிக செயலர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் , போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களுடன் கலந்துரையாடி, அவர்களைப் பிரதேச செயலரிடம் அழைத்துச் செல்ல முற்பட்டார்.
எனினும் போராட்டத்தை ஆரம்பித்த மன்னார் எமில்நகர் பகுதியைச் சேர்ந்த மேறி கிறிஸ்டபெல் அன்ரனி (வயது58) என்ற பெண்மணி பிரதேச செயலரைச் சந்திக்க மறுப்புத் தெரிவித்த நிலையில் ஏனைய மூவரையும் அழைத்துச் சென்று கலந்துரையாடினர்.
கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள் திருப்தி தராத காரணத்தால் அவர்கள் மீண்டும் போராட்டம் இடம் பெறும் இடத்துக்கு வந்து தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற பெண்களுக்கு மன்னார் பிரதேச செயலர் பிரிவில் வீட்டுத்திட்டம் கிடைக்காது ஏமாற்றப்பட்ட பலர் கலந்து கொண்டு தமது ஆதரவையும் வழங்கி வருகின்றனர்.
இந்தப் போராட்டம் தொடர்பாக மன்னார் பிரதேச செயலர் என்.பரமதாசன் தெரிவித்ததாவது,
"மன்னார் பிரதேச செயலர் பிரிவில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் உரிய முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அதிக புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் பிழைகள் காணப்பட்டால் என்னிடம் முறையிட வேண்டும்" என்றார். (ஐ-10, 56)

## ஆசிரியரின் இடமாற்றத்தைக் கண்டித்து மாணவர்கள் கறுப்புப் பட்டிப் போராட்டம்



வடமராட்சி, ஜுலை 4
வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் கறுப்புப் பட்டி அணிந்து பாடசாலையை மூடி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
பாடசாலையில் கல்வி கற்பிக்கும் உடற்கல்வி ஆசிரியருக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைக் கண்டித்தும் , ஏற்கனவே இந்தப் பாடசாலையில் கற்பிக்க விருப்பமின்றி மாற்றம் வாங்கிச் சென்றவரும் தற்போது உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கற்ப்பிக்கும் ஆசிரியர் மீண்டும் அந்தப் பாடசாலைக்கு மாற்றப்பட்டதைக் கண்டித்துமே பாடசாலை மாணவர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்தோடு பாடசாலை சமூகம் என உரிமை கோரப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் பாடசாலை வளாகத்தில் ஒட்டப்பட்டுள்ளன. "வரும் முன் காப்போம்" என்று தலைப்பிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில், "இன்று பாடசாலைக்குப் புதிதாக வருகை தரவிருக்கும் ஆசிரியரை நிராகரிப்போம், துடிப்பும் வேகமும் நிறைந்த ஆசிரியர் தேவை, தற்போது எமது பாடசாலை தேசிய மட்ட போட்டியில் கால்பதித்து வருகின்ற நிலையில் இடமாற்றம் மேற்கொள்வது விளையாட்டுத் துறையில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும்,
புதிதாகக் கடமையைப் பொறுப்பேற்கவுள்ள ஆசிரியர், கடந்த காலத்தில் எமது பாடசாலையில் கல்வி கற்பித்துப் பாடசாலைச் சமூகத்துடன் முரண்பட்டுச் சென்றவர் இந்நிலையில் எமது பாடசாலையில் மீண்டும் இடமாற்றம் வழங்குவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
சம்பவ இடத்துக்கு வடமராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் இது தொடர்பில் ஒரு வாரத்துக்குள் தீர்வு வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.
அதனை அடுத்து மாணவர்களின் போராட்டம் நிறைவுக்கு வந்தது. (ஐ-26)

## உதயனின் இணையத்தள அறிமுக நிகழ்வு நேற்று



யாழ்ப்பாணம், ஜுலை 4
உதயன் பத்திரிகையின் மேம்படுத்தப்பட்ட புதிய இணையத் தளத்தின் (www.newuthayan.com) அறிமுக விழா நேற்று உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
உதயன் பத்திரிகை நிறுவனத்தின் குழுமத் தலைவர் இணையத் தளத்தை அறிமுகம் செய்தார். இந்த நிகழ்வு உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
www.newuthayan.com என்ற இணைய முகவரியில் இணையத் தளம் இயங்க ஆரம்பித்துள்ளது. புது மெருகுடன் பல்வேறு புதிய அம்சங்களுடன் இயங்கும் இணையத் தளத்தில் உதயனின் வாசகர்கள் உடனுக்குடன் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளை அறிந்து கொள்ள முடியும். செய்திகள் தொடர்பான மேலதிக ஒளிப்படங்கள், காணொலிகளையும் உடனுக்குடன் பார்வையிட முடியும்.

## பொலிஸாரைக் கண்டு தப்பியோட்டம் சந்தேகநபருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜுலை 4
கொடிகாமம் பொலிஸாரின் வாகனத்தைக் கண்டு தப்பியோடியவர்களில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.
எழுதுமட்டுவாழ் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் 6 பேர் கூடி நிற்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து கொடிகாமம் பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்ற வேளையில் பொலிஸாரைக் கண்டதும் அவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். அவர்களில் ஒருவரைப் பொலிஸார் துரத்திப் பிடித்தனர்.
யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த நபரைக் கைது செய்த பொலிஸார் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி களவு செய்யும் நோக்குடன் நின்றார் என்ற குற்றச்சாட்டுடன் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
(ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுக் கடமைகளை பொறுப்பேற்றார் அனந்தி

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடக்குமாகாணசபையின்மகளிர் விவகாரமற்றும்சமூகசேவைகள், மறுவாழ்வு, கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
இந்த நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் ஏ-9 வீதியின் அரியாலையில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்றது.
நிகழ்வில், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.
வடக்குமாகாணவிவசாயஅமைச்சரான பொ.ஐங்கரநேசன், கல்வி அமைச்சரான த.குருகுலராசா ஆகியோர் பதவி விலகியதை அடுத்து புதிய கல்வி அமைச்சராக க.சர்வேஸ்வரனும், மகளிர் விவகார அமைச்சராக அனந்தி சசிதரனும் வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே முன்னிலையில் கடந்தமாதம்29ஆம்திகதிபதவிப் பிரமாணம் செய்தனர். அன்றே தனது கடமைகளை சர்வேஸ்வரன்பொறுப்பேற்றார். (ற-10)

# இரு விபத்துக்களில் முதியவர்கள் காயம்

இரு வெவ்வேறு சாலை விபத்துக்களில் சிக்கிப் படுகாயமடைந்த முதியவர்கள்இருவர்சாவகச்சேரிமருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டனர். அவர்களில்ஒருவர்யாழ். போதனாமருத்துவமனைக்குமேலதிகசிகிச்சைக்காகமாற்றப்பட்டுள்ளார்.
ஏ- 9 சாலையில் மீசாலை புத்தூர் சந்திக்குஅருகில்முன்னால்சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டி சமிக்ஞையின்றி பாடசாலைக்குள் செல்லமுற்பட்டதால்,பின்தொடர்ந்து சென்ற மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டியுடன் மோதியது. அதில் பயணித்தமீசாலைமேற்கைச்சேர்ந்த சங்கரப்பிள்ளை பரம்சோதி (வயது 62) என்பவர் காயமடைந்தார்.
கிளிநொச்சி இராமநாதபுரத்திலிருந்து சாவகச்சேரிக்கு மோட்டார் சைக்கிளில் மகனுடன் வந்த 62 வயது மூதாட்டி சாவகச்சேரியை அண்மித்த பகுதியில் சாலையைக் கடந்த மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானர். (ஐ-9)




புங்குடுதீவில்பசுக்கள்கடத்தப்பட்டுக்கொலைசெய்யப்படுவதைக்கண்டித்து நேற்று ஊரதீவு சனசமூக நிலையம் மற்றும் அமைப்புக்கள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். (ற)

# குடும்பத் தலைவர் படுக்கையில் சடலமாக மீட்பு

கைதடி பால அமைப்புப் பணியில் ஈடுபட்ட குடும்பத்தலைவர்ஒருவர்உயிரிழந்தநிலையில்படுக்கையில்இருந்துமீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலைஇடம்பெற்றது.
அவர் நேற்று முன்தினம் இரவு உணவருந்திய பின்னர் படுக்கைக்குச் சென்றதாகவும், காலையில் கடமைகளை ஆரம்பிப்பதற்காக அவரைச்சக பணியாளர்கள் எழுப்பிய போது அவர் சடலமாகக் காணப்பட்டார் எனவும் சக பணியாளர்கள் தெரிவித்தனர்.
மாத்தளை கந்தகெதரவைச்சேர்ந்தஆர்.ஏ.சரத் சந்திர (வயது-48) என்பவரே சாவடைந்தவர் எனத்தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார்சாவகச்சேரிநீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ஐ-9)

## கிந்துப்பிட்டி மயான விவகாரம்

# அரசியல் கட்சியின் செயற்பாட்டாளர் உள்ளிட்ட 6 பேர் நீதிமன்றில் சரண்

யாழ்ப்பாணம், ஜூன் 28
புத்தூர் மேற்கு, கிந்துப்பிட்டி மயான மதில் உடைத்தவர்கள் என்றகுற்றச்சாட்டில்தேடப்பட்டு வந்தஅரசியல்கட்சியின்செயற்பாட்டாளர் உள்ளிட்ட 6 பேர் மல்லாகம் நீதிவான் மன்றில் நேற்றுச்சரணடைந்தனர்.
புத்தூர்மேற்குசிறுப்பிட்டிகிந்துப்பிட்டிமயானத்தின்அமைவிடம் தொடர்பில் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். மற்றொரு தரப்பு அந்த மயானம் தொடர்ந்தும் அதில் இருக்க வேண்டும் என்றும்தமது பாவனைக்கு விடப்படவேண்டும் என்று கோருகின்றனர். அது தொடர்பான முரண்பாடுகளின் போது நீதிமன்ற அனுமதியுடன் அந்த மயானத்துக்கு அமைக்கப்பட்ட மதிலின் ஒருபகுதி உடைக்கப்பட்டது. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில்8பேர்கைதுசெய்யப்பட்டனர்.
மயானத்தின் மதில் உடைத்தனர் என்ற குற்றச்சாட்டில் 45 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியலைஅச்சுவேலிப்பொலிஸார் மல்லாகம் நீதிவான் மன்றில் சமர்ப்பித்தனர். அந்த 45 பேரையும் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். இந்த நிலையில் அரசியல் கட்சி ஒன்றின்செயற்பாட்டாளர்உள்ளிட்ட 6பேர்நேற்றுநீதிமன்றில்சரணடைந்தனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (வ4,37)

# பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம்.ஜூலை 4
ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நாளை புதன்கிழமை காலை 9மணியளவில் ஒறேற்றர் சுப்பிரமணியம் அரங்கில் இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
கல்லூரி முதல்வர் ஸ்கந்தவரோதயன் மு.செல்வஸ்தான் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கனடா பழைய மாணவர் சங்கப் போசகர் ஸ்கந்தவரோதயன் மருத்துவர் ஜி.நடராஜனும் சிறப்பு விருந்தினராக உடுவில்/சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜாவும் நிறுவுநர் பேருரையை ஸ்கந்தவரோதயன் கொழும்பு சங்க பழைய மாணவருமான எஸ்.பி.சிவஞானமும் கலந்து கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டது. (21)

## நான்கு...

தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று நடைபெற்றது.
உயர் பாதுகாப்பு வலயம் தவிர்ந்த ஏனைய தனியார் காணிகளில் உள்ள இராணுவ முகாம்களை முதற்கட்டமாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் வலியுறுத்தினர். இராணுவ முகாம்களை இடமாற்றம் செய்வதற்கு அரச காணிகளை அடையாளம் காட்டவேண்டும் என்று இராணுவத் தரப்பினர் தெரிவித்தனர்.
இராணுவ முகாம்கள் பல சுருக்கப்பட்டுச் சிறிய முகாம்களாக மாற்றப்படுகின்றன. மக்களின்காணிகள்படிப்படியாகவிடுவிக்கப்படும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்றும் கலந்துரையாடலில் கலந்துகொண்ட இராணுவத் தரப்பினர் குறிப்பிட்டனர்.
"பாதுகாப்புப் படைத் தரப்பின் வசமுள்ள தனியார் காணிகளை தொடர்ந்தும் விடுவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இராணுவ முகாம்களை மாற்றுவதற்கான அரச காணிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன." என்று இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பாதுகாப்பு அமைச்சருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கலந்துரையாடி பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதுகாப்பு படைத் தரப்பினருடன் கலந்துரையாடல் மேற்கொண்டு வருகின்றோம்.
யாழ்.மாவட்டத்தில் பாதுகாப்புப் படைத்தரப்பினரிடம் இருக்கும் நிலங்களை விடுவிப்பது தொடர்பில் எவ்வாறான முன்னேற்றங்கள் காணப்படுகின்றன என்பது பற்றி ஆராய்ந்தோம்.
தனியார் காணிகளில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு. கடந்த காலங்களில் அரச காணிகள் என பல தனியார் காணிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். தனியார் காணிகளில் இருந்து இராணுவம் வெளியேறித் தமது முகாம்களை அமைப்பதற்கான சில இடங்களை பிரதேச செயலாளர்கள் அடையாளம் காட்டியுள்ளார்கள்.
மக்கள் செறிவாக வாழ்கின்ற பிரதேசங்களில் மீள்குடியமர்வு செய்ய முடியும். அந்த இடங்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன. இன்று (நேற்று) மயிலிட்டி துறைமுகம் விடுவிக்கப்பட்டுள்ளது. கடற்கரை சாலை மற்றும் பலாலி சாலை, டச்சாலை, இளவாலை சாலை உட்பட சாலைகளை விரைவில் மக்களின் பாவனைக்கு விடுவதாக உறுதியளித்துள்ளார்கள்.
தனியார் காணிகளில் இருந்து இராணுவம் வெளியேறும் செயற்பாடு துரித கதியில் நடைபெறுமென எதிர்பார்க்கின்றோம். அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு சங்க பிரதேசம் மற்றும் சில பிரதேசங்கள் விடுவிப்பதற்குத் தீர்மானித்துள்ளார்கள். அந்த விடுவிப்புக்கள் எப்போது நடக்கும் என்பது கேள்விக்குறியே.
சகல பகுதிகளையும் 3 மாத காலத்துக்குள் விடுவிப்போம் என்று கூறியுள்ளனர். அவற்றில் ஒரிரு இடங்களை சில நாள்களில் விடுப்போம் என்று தெரிவித்துள்ளனர்-என்றார்.
இந்த கலந்துரையாடலில், யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் உட்பட 15 பிரதேச செயலாளர்களும் கலந்துகொண்டனர். (ற-8,106)

## இவ் வருடம்....

மூன்று மாதங்களுக்கு பின்போடப்பட்டிருப்பதால் அந்தத் தேர்தல் இந்த வருடம் நடக்கும் சாத்தியம் தென்படவில்லை என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் தெரிவித்திருக்கும் ஏனைய விளக்கங்கள் வருமாறு:
பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறி இந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை அரசு இழுத்தடித்துக்கொண்டிருக்கின்றது. கடந்த ஏப்ரல் 7ஆம் திகதி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா வெளியிட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்தலின்படி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஜூலை முதலாம் திகதி முதல் கோரப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், 2017 ஜூன் 30ஆம் திகதி அவரால் வெளியிடப்பட்ட அதி சிறப்பு வர்த்தமானி அறிவித்தலின்படி 23 மாநகர சபைகள், 41 நகர சபைகள், 271 பிரதேச சபைகளுக்கான தேர்தல் வேட்புமனுக்கள் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் கோரப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் சட்டவரைவின் திருத்தங்கள் தொடர்பான சுருக்கப் பிரேரணை ஏற்கனவே நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும், நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் விரைவில் எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் முஸ்தபா இப்போது கூறிவருகின்றார்.
உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் கோரப்படுமெனத் தனக்கு தெரியவந்திருப்பதாகவும், அது தொடர்பில் தான் சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவிருப்பதாகவும் தேர்தல் ஆணையகத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
பல்வேறு தரப்புகளிலும் இவ்வாறான இழுபறி நிலை ஏற்பட்டிருப்பதால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் இந்த வருடத்தில் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் தென்படவில்லை என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (த)

## உமாஓயா...

தீர்வைத் தெரிவிக்காவிட்டால் இன்று முதல் மீண்டும் தங்களது போராட்டம் ஆரம்பமாகுமென மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.
உமாஓயா திட்டத்துக்கு எதிரான போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என வும், அரசு வழக்கம் போல தீர்வுகள் என்ற போர்வையில் இந்தப் பிரச்சினையை மூடிமறைக்கவோ அல்லது இழுத்தடிக்கவோ முயன்றால் அதற்கான பின்விளைவுகளை உடனடியாகச் சந்திக்க வேண்டி நேரிடும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்யா ரத்ன தெரிவித்துள்ளார்.
சரியான ஆராய்ச்சிகள் செய்யப்படாமல் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டத்தால் நூற்றுக்கணக்கான கிராமங்களும், தோட்டங்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.
அதேவேளை, அமைச்சர்களான மகிந்த அமரவீர, விஜித் விஜயமுனி சொய்சா, பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் அடங்கிய குழு இன்று பிற்பகல் 2 மணியளவில் பண்டாரவளை பிரதேச செயலாளர் காரியாலயத்தில் கூடி இந்தப்பிரச்சினை பற்றி ஆராயவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிபொருள்களால் அபாயம்

## வலி. வடக்கு மக்களுக்கு பிரதேச செயலர் அறிவுரை

### தெல்லிப்பழை பிரதேச செயலர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ஜூலை 4

"வலி.வடக்கில் மீளக் குடியமர்ந்த பகுதிகளில் உள்ள கிணறுகளைத் துப்புரவு செய்ய முன்னர் வலி.வடக்கு பிரதேச செயலகத்துக்கு அதனை அறியத் தருவதன் மூலம் வெடிபொருள்களின் அபாயத்தைக் குறைக்க முடியும்" என தெல்லிப்பழை பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தெல்லிப்பழைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இந்த அறிவித்தலை அனைத்துத் தரப்பினருக்கும் வழங்கினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வலி. வடக்கில் தற்போது காணிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் தமது காணிகளில் உள்ள கிணறுகளை தண்ணீர்த் தேவைக்காகச் சுத்தம் செய்து வருகின்றனர்.

இவ்வாறு சுத்தம் செய்யப்படும் கிணறுகளில் வெடிபொருள்கள் அண்மைக்காலமாக மீட்கப்பட்டு வருகின்றன. மீட்கப்பட்ட வெடிபொருள்களில் சில வெடிக்கும் தன்மை கொண்டவையாகவும் சில பழுத்தடைந்த நிலையிலும் காணப்படுகின்றன. ஆகவே இது தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

கிணறுகளைச் சுத்தப்படுத்தத் தொடங்க முன்னர் குடியிருப்பாளர்கள் கிணற்றின் நிலையை நன்கு அவதானித்து, அது தொடர்பாக பிரதேச யலகத்துக்கு அறியத் தருவதன் மூலம் கிணற்றில் உள்ள வெடிபொருள்கள் அகற்றும் நடவடிக்கையை நாம் செய்து தருவோம். ஆகவே இது தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் - என்றார். (21-ரி)

## ஈழத்தில் முதன்முறையாக ஏகோன்ன பஞ்சாசத் யாகம்

### சித்தங்கேணி விநாயகருக்கு நாளை குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 4

ஈழத்தில் முதன்முறையாக ஏகோன்ன பஞ்சாசத் (49) யாகங்கள் வளர்க்கப்பட்டு சித்தங்கேணி பெரியவளவு மகா கணபதிப் பிள்ளையாருக்கு நாளை திருக்குடமுழுக்கு இடம்பெறுகிறது. நாளை புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் 10.40 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் பல நூற்றுக்கணக்கான இந்துக் குருமார்களின் மந்திர ஆராதனையுடன் திருக்குடமுழுக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு 49 யாகங்கள் வளர்க்கப்பட்டு இதுவரையில் இந்தியாவிலேயே 2 ஆலயங்களில் திருக்குடமுழுக்கு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. முதன்முறையாக ஈழத்தில் சிவபூமி என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, சித்தங்கேணி பெரியவளவு மகா கணபதிப் பிள்ளையாருக்கு ஆயிரக் கணக்கான அந்தணர்களின் பங்குபற்றலுடன் ஏகோன்ன பஞ்சாசத் (49) யாகங்கள் வளர்க்கப்பட்டு திருக்குடமுழுக்கு இடம்பெறுகிறது.

ஈழத்து இந்துக் குருமார்களுடன் தமிழகத்திலிருந்து வருகை தந்த குருமார்களும் இணைந்து ஆராதனைகளை முன்னெடுக்கின்றனர். கண்டியிலிருந்து அழைத்துவரப்பட்ட யானையும் இந்த வழிபாடுகளில் பங்கேற்கிறது.

இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 6மணி தொடக்கம் மாலை 3 மணிவரை அடியவர்கள் எண்ணெய்க்காப்புச் சாந்தும் நிகழ்வு நடைபெறும். திருக்குடமுழுக்கு முதன்மைக் குரு சிவஸ்ரீ ச.ஸ்ரீ மதுசூதனக் குருக்கள், ஆலயக் குரு பிரம்மஸ்ரீ நா.கமலநாத சர்மாவும், சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள் ஆகியோர் கிரியைகளை நடத்துவர். (வ-12)

## ஏகாதசித் தீர்த்தம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை4

ஏகாதசித் தீர்த்தம் நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு ஸ்ரீநாக வரத நாராயணர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பக்தி பூர்வமாக நிகழவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 7மணிக்கு சிறப்பு அபிசேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். காலை 9 மணிக்கு சமய நிகழ்ச்சிகள் இடம்பெறும். மு.ப. 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும். 11மணியளவில் நாராயண சுவாமி பூமாதேவி ஸ்ரீதேவி சமேதரராக அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12 மணிக்கு அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (21,160)

## வலி. வடக்கு மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படும்

### தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 4

வலி. வடக்கில் மீளக் குடியமர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் விடுவிக்கப்பட வேண்டிய இடங்கள் தொடர்பான விடயங்களைப் பாது காப்புத் தரப்பினரிடமும், அது தொடர்பான ஏனைய அதிகாரிகாரிகளிடமும் பேசி சுமுகமான தீர்வு பெற்றுத்தரப்படும் என தெல்லிப்பளை பிரதேச ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவர்கள் உறுதியளித்தனர்.

தெல்லிப்பளைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அங்கஜன் இராமநாதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே இணைத்தலைவர்கள் மக்களுக்கு இவ்வாறு உறுதியளித்தனர்.

வலி.வடக்கில் தற்போது காணிகள் விடு விக்கப்பட்டு மக்கள் மெதுமெதுவாக குடியமர்ந்து வருகின்றனர். எனினும் அவர்கள் பல்வேறு பிரச்சினை களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். காணிகள் விடுவிக்கப்பட்டாலும் வீடுகள் அமைப்பதில் பிரச்சினைகள், வாழ்வாதாரத்தை மேற்கொள்ள துறைமுகங்கள் விடுவிக்கப்படாமை, பாதைகள் சீரின்மை, அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்ளுவதில் சிரமம், இன்னமும் காணிகள் விடுவிக்கப்படாமல் மக்கள் சொந்த நிலங்களை விட்டு வேறு இடத்தில் வாழ்ந்து வருகின்றனர், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களில் பெரும்பகுதியினருக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படாமை போன்ற பிரச்சினைகள் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களது அமைப்புக்களின் பிரதி நிதிகளால் முன்வைக்கப் பட்டன. குறித்த பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்கு ஒருங்கிணைப்பு குழு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரினர்.

இதற்குப் பதிலளித்த ஒருங்கிணைப்புகுழுவின் இணைத் தலைவரான மாவை சேனாதிராசா "நீண்டகாலமாக வலி .வடக்கிலே நிலங்கள் விடுவிக்கப்படாமலும், விடுவிக்கப்பட்ட நிலங்களில் மக்கள் அமைதியாக வாழ முடியாமலும் இருப்பதை நாம் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினைகளைப் பாதுகாப்புத் தரப்பினருடனும், உரிய அதிகாரிகளிடமும் சென்று கதைத்து மக்களுக்கான உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்வோம்" என்று தெரிவித்தார்.

அவருடைய கருத்தை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் மக்களுக்கான தீர்வைப் பெற்று கொடுப்பதற்கு உரிய தரப்பினருடன் பேச்சு நடத்துவதாகத் தெரிவித்தனர். (21-ரி)

## மானிப்பாய் இந்துவின் பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 4

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி முதல்வர் எம். இந்திரபாலா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் ஆஸ்திரேலிய மெல்பேனில் வசிக்கின்ற ஓய்வுநிலை மூத்த பொறியியல் முகாமையாளர் கே.சரநதன், சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் கனடா பல்கலைகழக விரிவுரையாளர் ரி.உதயகரன், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை ஓய்வு நிலை யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் ஆற்றவுள்ளார்.

நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

## பருத்தித்துறை வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

வடமராட்சி தெற்கு - மேற்குப் பிரதேச செயலர் ஆ.சிவசிறியின் பிரிவு பசார ஏற்பாட்டுக் குழுவினர் இந்த மருத்துவ உபகரணத் தொகுதியை வழங்கிவைத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

"வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் நலன்கருதி இவ்வாறான அமைப்புகள் தாமாக முன்வந்து மருத்துவ உபகரணங்களை வழங்கினால் நோயாளர்களுக்கு உடனுக்குடன் உரிய சிகிச்சைகளை வழங்கமுடியும். வைத்தியசாலைகளில் பணிபுரிவோர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றபோதிலும் சில மருத்துவ உபகரணங்களுக்காக அரசை நம்பியிருக்க வேண்டியுள்ளது" என்று வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மருத்துவ உபகரணங்களைக் கையேற்ற பின்னர் தெரிவித்தார். (4-9)

## இளவாலை கன்னியர் மடம் ம.வியின் பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 4

இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று மாலை 5 மணிக்குப் பாடசாலை அதிபர் அருட் சகோதரி ப.சகாய நாயகி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இதில் தலைமை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் என்.வேதநாயகன் கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினராகவடக்குமாகாண உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதிஏ.சி.வலன்ரைன் கலந்து கொள்வார். (த)

## வலி.தென்மேற்கு பிரதேசத்தில் இன்று நடமாடும் சேவை

யாழ்ப்பாணம் ஜூலை 4

வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ் வழங்கும் சிறப்பு நடமாடும் சேவை இன்று செய்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெறும் என்று பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமரன் தெரிவித்தார்.

காலம் கடந்த பிறப்புத் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ள வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் வருகை தரவுள்ளதால், விண்ணப்பதாரர் தாய் ,தந்தையின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் திருமணச் சான்றிதழ்,வைத்தியசாலைப் படிவம்,குடும்பஅட்டைமுதலான விவரங்களுடன் வருகை தந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (ரி)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் 9ஆவது குருபூசை தினம்

அளவெட்டி.ஜூலை4

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய முன்னாள் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 9ஆவது குருபூசை தினம் இன்று காலை 9 மணிக்கு துர்க்கா தேவி ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளுடன் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

காலை 9.40 மணிக்கு அன்னபூரணி மண்டபத்தில் தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் தலைமையில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறும். தொடர்ந்து இந்த நிகழ்வில் மூத்த சிவாச்சாரியார்கள் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும் கௌரவம் பெறும் சிவாச்சாரி யார்களான திருகோணமலை பத்திரகாளி கோயில் அறங்காவலர் சிவஸ்ரீ சேமஸ்கந்த ஐயா இரவிச்சந்திரக்குருக்கள், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில் முகுரு சிவஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள். திருத் தொண்டர் புராணம் மூன்றாம் பாகம் நூல்வெளி யீட்டு நிகழ்வு இடம்பெறும். நூல் வெளியீட்டுரையை ஆரியதிராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் விரிவுரையாளர் பண்டித மணி ம.ந.கடம்பேஸ்வரன் நிகழ்த்துவார். என துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் தெரிவித்துள்ளார். (21,36)

## சாவ. சட்டத்தரணிகள் சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

சாவகச்சேரி, ஜூலை 4

சாவகச்சேரி சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நீதிமன்ற வளாகக் கட்டடத்தில் அண்மையில் நடைபெற்றது. சங்கத் தலைவர் த.வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

"நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில், தலைவர் த.வேலாயுதம், உப தலைவர் நா.சத்தியநாதன், செயலாளர் ப.குகனேஸ்வரன், உதவிச் செயலாளர் ந.கேசாந்த், பொருளாளர் திருமதி காயத்திரி கோகுலன், பத்திராதிபர் திருமதி வாசுகி திவ்விய நாதன், தாயச்சங்கப் பிரதிநிதி கேசவன் சயந்தன், நிர்வாக சபை உறுப்பினர்களாக எம்.நிரஞ்சினி, திருமதி சாமந்தி திவாகரன், செல்வி சி.சிவவாணி, கே. சதீஸ்வரன், திருமதி வே.திசாந்தினி, ஜே.பி.ஏ. ரஞ்சித்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்" என்று சங்கச் செயலாளர் ப.குகனேஸ்வரன் தெரிவித்தார். (4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபணு...

மேலும் இந்த வழக்கின் 9ஆவது எதிரி சுவிஸ் குமார் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பித்தார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் அப்போதைய யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமையகப் பொலிஸ் அதிகாரி ரஞ்சித் பாலசூரிய உட்பட 2 பொலிஸ் சாட்சியங்களை வழக்குத் தொடுநர் தரப்பு தீர்ப்பாயத்தின் அனுமதியுடன் இணைத்துக் கொண்டது.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் இடம்பெற்று வருகிறது. மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயத்தின் நான்காம் நாள் அமர்வு நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடியது.

வழக்குத் தொடுநர் சார்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், லக்சி டீ சில்வா மற்றும் மாலினி விக்னேஸ்வ ரன், பிரிந்தா ரெஜிந்தன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர்.

1ம் ,2ம் , 3ம் , 5ம் மற்றும் 6ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன , எம். என். நிஷாந்த மற்றும் சட்டத்தரணி சரங்க பாலசிங்க , ஆகியோரும் 5ம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் 4ம், 7ம் , மற்றும் 9ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர். அத்துடன் 8ஆம் எதிரி சார்பிலும் தீர்ப்பாயத்தால் ஒன்று தொடக்கம் 9 வரையிலான எதிரிகள் சார்பில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன் ஜெயந்தாவும் முன்னிலை ஆகி இருந்தார்.

எதிரிகளான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் , மகாலிங்கம் சசிதரன் , தில்லைநாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன் , ஜெயதரன் கோகிலன் , மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய ஒன்பது எதிரிகளும் தீர்ப்பாயம் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

அதனை தொடர்ந்து நான்காம் நாள் சாட்சிப் பதிவுகள் ஆரம்பமானது.

**மரபணு அறிக்கை முன்வைப்பு**

இந்த வழக்கின் மரபணு பரிசோதனை (டிஎன்ஏ) அறிக்கை , மொறட்டுவ பல்கலைகழக கணணி விஞ்ஞான பீடத்தின் அறிக்கை உட்பட வழக்குடன் தொடர்புடைய ஆவணங்கள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றால் தீர்ப்பாயத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

**2 சாட்சியங்கள்,**
**2 சான்றுப் பொருள்கள்**
**வழக்குத் தொடுநரால் இணைப்பு**

அதனை தொடர்ந்து வழக்கு விசாரணைகள் காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது. அதன் போது பிரதி மன்றாடியார் அதிபதி குமாரரட்ணம் வழக்கேட்டில் திருத்தம் செய்வதற்கு தீர்ப்பாயத்திடம் அனுமதி கோரினார். அதற்கு தீர்ப்பாயம் அனுமதித்தது. மாணவி கொலை நடைபெற்ற காலப் பகுதியில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி ரஞ்சித் பாலசூரிய உட்பட 2 பொலிஸ் சாட்சியங்களின் விவரமும் 2 சான்றுப் பொருள்களும் வழக்குத் தொடுநரால் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டன.

புதிய சாட்சியங்களுடன் இந்த வழக்கில் 51 சாட்சியங்களாக மாற்றப்பட்டன. அதனைத் தொடர்ந்து சாட்சிப் பதிவுகள் ஆரம்பமானது.

**சாட்சியத்தின் தகுதி**
**தீர்ப்பாயத்தால்**
**உறுதிப்படுத்தல்**

இந்த வழக்கின் 9ஆவது சாட்சியமான , மணிவண்ணன் தனுராம் சாட்சியமாக அழைக்கப்பட்டார். அவர் 13 வயதுச் சிறுவனாக காணப்பட்டதால் , தீர்ப்பாயம் சாட்சியத்தின் தகுதியைப் பரிசோதனை செய்யுமுகமாக , சிறுவனின் முழுப்பெயர் , தாய் , தந்தையின் முழுப் பெயர்கள் , கல்வி கற்கும் பாடசாலை , வயது எதற்காக இங்கே (தீர்ப்பாயத்துக்கு) வந்துள்ளீர் போன்ற கேள்விகள் சாட்சியத்திடம் கேட்கப்பட்டன. அதற்கு சாட்சியம் உரிய பதில்களை வழங்கினார். அதனால் அந்தச் சிறுவன் சாட்சியம் அளிப்பதற்கு தகுதியுடையது என தீர்ப்பாயம் தீர்மானித்து அவரிடம் சாட்சிப் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டன.

**சாட்சிக்கு திடீர் தலைச்சுற்று**
**விசாரணை ஒத்திவைப்பு**

சிறுவன் சாட்சியம் அளிக்கையில், நான் புங்குடுதீவில் வசிக்கின்றேன். புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றேன். நான் தினமும் வீட்டில் இருந்து சின்ன ஆலடி பகுதி (மாணவி படுகொலை செய்யப்பட்ட இடத்துக்கு அருகில் உள்ள பகுதி ) ஊடாகத்தான் பாடசாலை செல்வேன்.

இவ்வாறாக சிறுவன் சாட்சியம் சாட்சி வழங்கி கொண்டு இருந்த வேளை, தனக்கு தலைச் சுற்று ஏற்பட்டு உள்ளதாக தீர்ப்பாயத்திடம் தெரிவித்தார். அப்போது காலையில் சாப்பிடவில்லையா ? என தீர்ப்பாயம் சிறுவனிடம் கேட்டது. சிறுவன் இல்லை என பதிலளித்தார். அதனையடுத்து வழக்கு சுமார் பத்து நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது. சிறுவனுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்ட பின்னர் மீண்டும் சாட்சி பதிவுகள் தொடர்ந்தன.

**“ம் ... ம் .. “ என சத்தம் கேட்டது**

சிறுவன் தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில், “சம்பவ தினம் நானும் என்னுடன் ஒரே வகுப்பில் கல்வி கற்கும் சக மாணவனான தனுஜனும் துவிச்சக்கர வண்டியில் சென்றோம். அது தனுஜனின் சைக்கிள். அவன்தான் ஓடினான். நான் பின்னால் இருந்து சென்றேன். செல்லும் போது சின்ன ஆலடிக்கு அருகில் தனுஜனின் செருப்பு கழன்று வீதியில் வீழ்ந்துவிட்டது. அவன் சிறிது தூரம் சென்று சைக்கிளை நிறுத்தினான். நான் பின்னால் இருந்து இறங்கி சென்று செருப்பை எடுத்து வரச் சென்றேன்.

அந்த நேரம் வீதி ஓரமாக அலரி மரங்கள் உள்ள பகுதியில் ரவி மாமா (இரண்டாம் எதிரியான பூபாலசிங்கம் ஜெயக்குமார்) மஞ்சள் கலர் ரீ சேர்ட்டுடன் நின்றார். அப்போது “ம் .. ம் .. “ என சத்தம் கேட்டது. நான் முதலில் பேய் என்று பயந்தேன். ஏனெனில் அந்த வீதியில் ஆள் நடமாட்டம் இருப்பதில்லை. வழமையாக பாடசாலை செல்லும் போது , சின்ன ஆலடிப் பகுதிக்கு கிட்ட வந்ததும் வேகமாகவே செல்வோம்.

அன்றும் அந்த சத்தத்தை பேய் என்று பயந்தாலும் , அது மாடு கத்தும் சத்தம் போன்று இருந்தது. மனப் பயம் இருந்ததால் செருப்பை எடுத்து தனுஜனிடம் கொடுத்ததும் அவன் போட்டுக்கொண்டு நாங்கள் இருவரும் அந்த இடத்தில் இருந்து பாடசாலைக்குச் சென்றுவிட்டோம்.

மறுநாள் 14ஆம் திகதி நான் பாடசாலைக்கு அம்மாவுடன் சென்ற போது, ஊரில் உள்ள ஒருவர் அம்மாவிடம் வித்தியா அக்கா இறந்த விடயத்தை சொன்னார். அம்மா உடனேயே என்னிடம் சொன்னார். வீட்ட ஓடிப்போய் அண்ணாவுக்கு சொல்லு என நான் வீட்ட போய் அண்ணாவுக்கு சொன்னேன். பின்னர் நான் பாடசாலையும் செல்லவில்லை.

சம்பவம் நடந்து சில நாட்களின் பின்னர் நான் பாடசாலை சென்ற போது அதிபர் கேட்டார் நீங்கள் பாடசாலை வரும் போது எதனையும் கண்டீர்களா ? என்று. நான் அப்போது “ம் .. ம் .. “ என்ற சத்தம் கேட்ட விடயத்தை அதிபரிடம் சொன்னேன். அது தொடர்பில் வேறு யாருக்கும் நான் அதைப் பற்றிப் பிறகு சொல்லவில்லை. பின்னர் குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கே சொன்னேன்” என்று சிறுவன் சாட்சியம் அளித்தான்.

அதையடுத்து சாட்சியான சிறுவனிடம் பிரதி மன்றாடியார் அதிபதி, “ரவிமாமா என்பவரை அடையாளம் காட்ட முடியுமா?” என சாட்சியான சிறுவனிடம் கேட்டார். எதிரியையும் அவர் சம்பவ தினத்தன்று அணிந்திருந்ததாகக் கூறப்படும் சான்றுப் பொருளான ரீ சேர்ட்டையும் சிறுவனை அடையாளம் காட்டுமாறு பிரதி மன்றாடியார் கோரினார். எதிரி கூண்டில் நின்ற இரண்டாம் எதிரியான பூபாலசிங்கம் ஜெயக்குமாரை சாட்சி கூண்டில் நின்று சிறுவன் அடையாளம் காட்டினார். அத்துடன் சான்றுப் பொருளையும் சிறுவன் அடையாம் காட்டினார். அதனை தொடர்ந்து அந்தச் சிறுவனிடம் சாட்சியம் முடிவுறுத்தப்பட்டு , சாட்சி விடுவிக்கப் பட்டது.

**எதனையும் காணவில்லை**

தொடர்ந்து பத்தாவது சாட்சியான இலங்கேஸ்வரன் தனுஜன் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார். குறித்த சாட்சியம் 13 வயதுக்கு உட்பட்ட சிறுவன் என்பதனால் சாட்சி அளிக்கத் தகுதி உடையவரா? என தீர்ப்பாயம் பரிசோதித்தது. அந்தச் சாட்சியம் சாட்சி அளிக்க தகுதியுடைய சாட்சியம் என தீர்ப்பாயத்தால் உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து [illegible] சிறுவன் சாட்சியம் அளிக்கையில்,

“நானும் தனுராமும் 13ஆம் திகதி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தோம். எனது துவிச்சக்கர வண்டியில் நான்தான் அவனை பின்னுக்கு ஏற்றிக்கொண்டு சென்றேன்.

சின்ன ஆலடி எனும் பகுதியில் , துவிச்சக்கர வண்டியின் பெடல் கட்டை இல்லாததால் அது சறுக்கி எனது செருப்புக் கழன்று வீழ்ந்து விட்டது. நான் துவிச்சக்கர வண்டியை நிறுத்தி , அதனைப் பிடித்துக்கொண்டு இருந்த போது , தனுராம்தான் சென்று செருப்பை எடுத்து வந்தான். பின்னர் நாங்கள் செருப்பை போட்டுக்கொண்டு பாடசாலைக்கு சென்று விட்டோம்” என சிறுவன் சாட்சியம் அளித்தார்.

அதன் போது , பிரதி மன்றாடியார் அதிபதி சாட்சியத்திடம் செருப்பு கழன்று விழுந்த இடத்தில் எதனையாவது அவதானித்தீரா ? என கேட்ட போது, சாட்சியான சிறுவன் “இல்லை” என பதிலளித்தான். அதனை தொடர்ந்து குறித்த சாட்சியம் முடிவுறுத்தப்பட்டு , சாட்சி விடுவிக்கப்பட்டது.

**தங்கையின் கணவனே**
**இரண்டாவது எதிரி**

அதனை தொடர்ந்து 4ஆவது சாட்சியான , பாலசந்திரன் சாட்சியம் அளிக்கையில் ,

“நான் 13ஆம் திகதி காலை 8.47 மணியளவில் கடைக்குச் சென்றபோது வித்தியா கொலை நடந்த இடத்துக்கு அருகில் , பூபாலசிங்கம் ஜெயக்குமார் மற்றும் பூபாலசிங்கம் தவக்குமார் ஆகிய இருவரும் நின்று கொண்டிருந்தனர்.

அதில் ரவி என்று அழைக்கபப்டும் பூபாலசிங்கம் ஜெயக்குமார் எனது தங்கையின் கணவன். மற்றையவரான பூபால சிங்கம் தவக்குமார் , ஜெயக்குமாரின் சகோதரன். சம்பவ இடத்தில் இருந்து 15 அடி தூரத்தில் அவர்கள் நின்றார்கள்.

மறுநாள் 14ஆம் திகதிதான் வித்தியா இறந்த செய்தி தெரியும். வித்தியா எனக்கு கிட்டத்து சொந்தமும்கூட. வித்தியாவின் சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு சுமார் 15 அடி தூரத்தில்தான் முதல் நாள் ஜெயக்குமார் மற்றும் தவக்குமார் ஆகியோரைக் கண்டேன்” என சாட்சியம் அளித்தார்.

அதன் போது பிரதி மன்றாடியார் அதிபதி எதிரிகளை அடையாளம் காட்ட முடியுமா? என சாட்சியிடம் கேட்டார். சாட்சி எதிரி கூண்டில் நின்ற இரண்டாம் மற்றும் மூன்றாம் எதிரிகளை அடையாளம் காட்டினார். அதனையடுத்து சாட்சியம் முடிவுறுத்தப்பட்டு சாட்சியம் விடுவிக்கப்பட்டது.

**வித்தியாவை தேடிச் சென்றேன்**

அதனை தொடர்ந்து வழக்கின் 7ஆவது சாட்சியமான ஞானேஸ்வரன் இலங்கேஸ்வரன் சாட்சியம் அளிக்கையில்,

நான் வித்தியா வீட்டுக்கு அருகில்தான் வசிக்கிறேன். 14ஆம் திகதி காலை வித்தியாவின் அம்மாவும் சகோதரனும் , வித்தியாவை நேற்றில் இருந்து காணவில்லை எனத் தெரிவித்து தேடிப் பார்க்கச் சென்றார்கள். அவர்களுடன் நானும் சென்றேன்.

வித்தியா பாடசாலை செல்லும் வழியில் உள்ள கிணறுகள், கேணிகளில் தாய் தேடிக்கொண்டு வந்தார். நான் வீதியோரமா கப் பற்றைகளுக்குள் தேடிச் சென்றேன். வித்தியாவின் அண்ணனும் நானும் ஆள்கள் நடமாட்டமற்ற வீட்டுப் பகுதிகளைத் தேடிச் சென்றோம். அப்போது திடீரென்று வித்தியாவின் அண்ணா "ஐயோ வித்தியா வித்தியா" எனக் கத்தினான். அந்த இடத்துக்கு நான் சென்றேன். அப்போது வித்தியாவின் அம்மாவும் அங்கு வந்து விட்டார். அவர் உடனே என்னிடம் , வித்தியாவின் சடலம் கிடக்கிறது தொடர்பில் ஊருக்குள் சென்று சொல்லுமாறு கூறினார். நான் சென்று ஊரில் உள்ளவர்களை அழைத்து வந்தேன்.

**சுவிஸ்குமாரை**
**கறுத்தக் கண்ணாடியுடன்**
**கண்டேன்**

வித்தியாவை சம்பவ தினத்துக்கு முதல் நாள் 12ஆம் திகதி (மாணவி கொலை செய்யபப்பட்டது 13ஆம் திகதி சடலம் மீட்கப்பட்டது 14 ஆம் திகதி) ஆலடிச் சந்தியில் கண்டேன்.

அன்றைய தினம் வீட்டுத் தேவைக்கு பொருள்கள் வாங்க என ஆலடிச் சந்தியில் உள்ள கடைக்குச் சென்று இருந்தேன். அப்போது வித்தியா பஞ்சாபியுடன் பேருந்திலிருந்து இறங்கி வந்து கடைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த தனது துவிச்சக்கர வண்டியை எடுத்துக்கொண்டு சென்றார்.

அந்த நேரம் கடைக்கு எதிரே வீதியின் மறுபுறத்தில் , டொல்பின் ரக வாகனத்தில் , முன் ஆசனத்தில் (சாரதி ஆசனத்துக்கு அருகில்) சுவிஸ்குமார் கறுத்தக் கண்ணாடி அணிந்தவாறு இருந்தார். மற்றைய ஆசனங்களில் சசிதரன் , சந்திரஹாசன் , கண்ணன் ஆகியோர் இருந்தனர். இவர்களுடன் மேலும் இருவரும் இருந்தனர். அவர்களை யார் என்று தெரியாது. மொத்தமாக வாகனத்தில் 6 பேர் இருந்தனர்.

**வித்தியாவை வீதியில்**
**பார்த்துக்கொண்டே நின்றனர்**

அவர்கள் அனைவரும் பேருந்தில் வந்து இறங்கி சைக்கிள் எடுத்துகொண்டு சென்ற வித்தியாவையே பார்த்துக்கொண்டு இருந்தனர்” என்று சாட்சியமளித்தார்.

“சுவிஸ்குமார், சசிதரன் , சந்திரஹாசன் , கண்ணன் ஆகியோரை அடையாளம் காட்ட முடியுமா?” என பிரதி மன்றாடியார் அதிபதி சாட்சியிடம் கேட்டார். சாட்சி ஆம் என பதிலளித்தார். எதிரிக் கூண்டில் நின்ற 9ஆம் எதிரியான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் , 4ஆம் எதிரியான மகாலிங்கம் சசிதரன் , 5ஆம் எதிரியான தில்லைநாதன் சந்திரஹாசன் மற்றும் 8ஆம் எதிரியான கண்ணன் என அழைக்கப்படும் ஜெயதரன் கோகுலன் ஆகியோரைச் சாட்சி அடையாளம் காட்டினார்.

அதனை தொடர்ந்து 4ஆம், 7ஆம் , மற்றும் 9ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் குறுக்கு விசாரணையின் போது , சாட்சியிடம் , “வாகனம் எவ்வளவு தூரத்தில் நின்றது” என கேட்டார். அதற்கு சாட்சி “சுமார் 15 அடி தூரத்தில் நின்றது” எனப் பதிலளித்தார். அதையடுத்து 15 அடி தூரத்தில் கறுத்த கண்ணாடி அணிந்து இருக்கும் நபர் எங்கே பார்க்கின்றார் என்பதனை கூற முடியாது என நான் 9ஆம் எதிரி சார்பில் கூறுகிறேன் எனச் சட்டத்தரணி கூறினார். சாட்சி “இல்லை, நான் பார்த்தேன் அவர்கள் வித்தியாவைத் தான் பார்த்தார்கள்” என சாட்சியம் அளித்தார். அதைத் தொடர்ந்து நீங்கள் எவ்வளவு நேரமாக கடையில் நின்றீர்கள் என சட்டத்தரணி கேட்டதற்கு, “கடையில் ஆள்களாக இருந்தமையால், ஒரு மணித்தியாலம் கடையில் நின்றேன். அப்போது வாகனத்தைப் பார்த்தேன். அவர்கள் நின்றார்கள்” என சாட்சியம் அளித்தார். அதையடுத்து சாட்சியம் முடிவுறுத்தப்பட்டு சாட்சி விடுவிக்கப்பட்டது.

**ஒற்றையடிப் பாதையில்**
**எதிரியைக் கண்டேன்**

அதனைத் தொடர்ந்து வழக்கின் 15ஆவது சாட்சியான செல்வராசா சதானந்தரூபிணி சாட்சியம் அளிக்கையில் ,

“நான் சம்பவ தினமான 13ஆம் திகதி காலை 7.30 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் எனது துவிச்சக்கர வண்டியில் வேலணை பிரதேச செயலகத்துக்குச் சென்று கொண்டிருந்தேன். அப்போது நான் சென்று கொண்டிருந்த வீதியில் ஒரு இடத்தில் உள்ள ஒற்றையடிப் பாதை ஊடாக, சந்திரஹாசன் சாரம் ஒன்றை மடித்துக்கட்டியவாறு வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தார். அவர் போய் கொண்டிருந்த தூரம் எனக்கும் அவருக்கும் இடையில் “ தம்பி “ என கூப்பிட்டால் கேட்கும் தூரம்தான் அப்போது இருந்தது.

அவர் சென்ற ஒற்றையடிப் பாதை ஊடாக சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் , வித்தியாவின் சடலம் கிடந்த இடத்துக்குச் செல்ல முடியும். அதற்காக அவர் அங்குதான் சென்றார் என நான் உறுதியாகச் சொல்ல மாட்டேன்.

பின்னர் மறுநாள் வித்தியாவின் சடலம் கிடக்கின்றது என்ற செய்தி அறிந்து நானும் அயலவர்கள் சுமார் 10 பேரும் சடலம் கிடந்த இடத்துக்குச் சென்றோம்.

அப்போது அந்த இடத்திற்கு சந்திரஹாசனும் வந்திருந்தார். அவர் அந்த இடத்தில் சுமார் 10 நிமிடங்கள் நின்றுவிட்டுச் சென்றுவிட்டார்” எனச் சாட்சியம் அளித்தார். அதனை தொடர்ந்து சாட்சியம் முடிவுறுத்தப்பட்டு சாட்சி விடுவிக்கப்பட்டது.

**5 சாட்சியங்கள்**
**வழக்கிலிருந்து விடுவிப்பு**

சந்தர்ப்ப சூழல் சாட்சியங்கள் நேற்று மாலை சாட்சிக்கு அழைக்கப்பட்டனர். அவர்களில் 6ஆம் எதிரியான துஷாந்த் பணியாற்றிய வேலணைப் பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட மூவரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. பின்னர் அதே அலுவலகத்தில் பணியாற்றிய மேலும் 5 பேரிடம் சாட்சியம் பெறப்படாமலே அவர்களை வழக்கிலிருந்து விடுவிப்பதாக பிரதி மன்றாடியார் அதிபதி தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்யதார். அதற்கு தீர்ப்பாயம் அனுமதியளித்தது.

தொடந்து கண் மருத்துவ நிபுணர் முத்துசுவாமி மலரவன் சாட்சியமளித்தார். அவர் வித்தியாவின் கண்பார்வை தொடர்பான பிரச்சினை குறித்துச் சாட்சியமளித்தார்.

நான்காம் நாள் சாட்சியப் பதிவுகள் நேற்றிரவு 7.15 மணிவரை இடம்பெற்றன. 5ஆம் நாளான இன்று தீர்ப்பாயம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

(வ-12,37)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் 5 வருடங்களில் உள்ளூர் நாய் இனத்தை காணமுடியாத நிலை வரும்

## கருத்தடையால் அவை வேகமாக அருகி வருகின்றன எச்சரிக்கிறார் சுகாதார உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம் ஜூலை 4

உள்ளூர் வளர்ப்பு நாய்களை உரிய வகையில் பராமரிக்காது போனால் எதிர்வரும் 5 வருடங்களில் உள்ளூர் நாய்களின் இனமே இல்லாது போய்விடும் என்று யாழ்ப்பாண மாவட்ட கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நீர் வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு தற்போது பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. நோய் வராமல் பாதுகாப்பதற்கான ஊசி போடுதல் தொடர்கிறது. சாலைகளில் அதிகளவான நாய்கள் அலைந்து திரிவதால் அது ஒருவரைக் கடிப்பதன் மூலம் நோய் பரவும். இதனால் நாய்களுக்கான கருத்தடைச் சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு கருத்தடை மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறுமாயின் இன்னும் 5 வருடங்களில் உள்ளூர் நாய்களின் இனத்தையே காண முடியாது.



வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி ஊசிகள் போடப்பட்டு வளர்க்கப்பட்டால் நோய் பரவாது. நாயின் இனமும் கருத்தடை செய்யப்படாமல் பாதுகாக்கப்படும். எல்லா மக்களாலும் அதிக விலை கொடுத்து உயர் சாதி நாய்களை வாங்க முடியாது. ஏராளமானோர் பாதுகாப்புக்கு உள்ளூர் நாய்களையே வளர்க்கின்றனர். எனினும் இந்த நாய்கள் வீதிகளில் அலைந்து திரிவதால் நீர் வெறுப்பு நோய் பரவுகின்றது.

ஆகவே இனப் பரம்பலைத் தடுக்க கருத்தடை செய்யப்படுகின்றது.

கருத்தடை செய்வதன் மூலமாக உள்ளூர் நாய் இனம் எதிர்காலத்தில் இல்லாமல் போகும். ஆகவே பொதுமக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி ஊசிகளைப் போட்டு உரியவகையில் வளர்க்கவேண்டும். ஒவ்வொரு குடும்பத்தினரும் இந்த விடயத்தில் இனிமேலாவது அக்கறை கொண்டு செயற்படவேண்டும். விசர்நாய்க்கடி இல்லாத பிரதேசமாகவும், விசர் நோய் இல்லாத பிரதேசமாகவும் அதன் மூலமாக உள்ளூர் நாய் இனம் அழிவடையாமலும் பாதுகாக்கவேண்டும். எனவே நாய்களின் பாதுகாப்பை, நோய்த் தொற்றைத் தடுப்பதில் கவனவீனம் வேண்டாம். விரைந்து செயற்படுங்கள் - என்றார். (4-21-ரி)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 3197 மாற்றுத்திறனாளிகள்

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 197 மாற்றுத்திறனாளிகள் இருக்கின்றனர் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தற்போது 3 ஆயிரத்து 197 மாற்றுத்திறனாளிகள் காணப்படுகின்றனர். கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 583 மாற்றுத்திறனாளிகளும் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் 611 மாற்றுத்திறனாளிகளும் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் 582 மாற்றுத்திறனாளிகளும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவில் 421 மாற்றுத்திறனாளிகளும் ஆக மாவட்டத்தில் 3 ஆயிரத்து 197 மாற்றத்திறனா ளிகள் காணப்படுகின்றனர் என்று மாவட்டச் செயலகத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (4-6)

# பிளாஸ்ரிக், பொலித்தீன், கோம்பையுடன் இளநீர் வைத்தியசாலைக்குள் கொண்டு செல்ல தடா

*சாவகச்சேரி வைத்தியசாலை நீர்வாகம் அறிவிப்பு*

சாவகச்சேரி, ஜூலை 4

சாவகச்சேரி வைத்தியசாலைக்குள் பிளாஸ்ரிக் பொருள்கள், பொலித்தீன் பைகள் மற்றும் கோம்பையுடன் இளநீர் போன்றவை கொண்டு வருவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி தொடக்கம் இந்த நடைமுறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.

நோயாளிக்கு இளநீர் கொண்டு வருபவர்கள் கண்ணாடிப் போத்தலில் இளநீரை விட்டுக் கொண்டு வரவேண்டும். இளநீரைக் கோம்பையுடன் கொண்டு வர அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பிளாஸ்ரிக் கொள்கலன்களில் உணவு, குடிதண்ணீர் கொண்டு வருவதையும் பொலித்தீன் பைகளில் கொண்டு வருவதையும் தவிர்க்கவேண்டும்.

வணிக நிலையங்களிலிருந்து கொண்டு வரப்படும் பொலித்தீன் பைகளை வைத்தியசாலைக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள தொட்டியில் போடவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் பொலித்தீன் பைகள், இளநீர் போன்றவை வைத்தியசாலைக்குள் கொண்டு வருவதற்கு கடந்த ஜனவரி மாதம் தடை விதிக்கப்பட்டு பாதுகாப்பு அலுவலர்களால் வைத்தியசாலை வளாகத்தினுள் கொண்டு செல்வது தடுக்கப்பட்டது. பின்னர் சற்றுத் தளர்வு நிலை காணப்பட்டு வைத்தியசாலை வளாகத்தில் பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் பொலித்தீன் பைகள் இளநீர்க் கோம்பைகள் பெருமளவில் காணப்படுவதையடுத்து புதிய முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (21-9)

## வடமாகாண சுற்றுலா அமைச்சிடம்

# திருவடிநிலை சுற்றுலாத்துறைக்கு மேலும் நிதி ஒதுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்கு மாகாண சுற்றுலாத்துறை அமைச்சு, மாதகல் திருவடிநிலை கடற்கரைச் சுற்றுலாத்துறை மையத்தைச் சீரமைப்புச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்க ப்பட்டுள்ளது.

குறித்த சுற்றுலாத்துறை மையத்தை நவீன முறையில் சீரமைப்பதன் மூலமாகப் பல வகையிலும் பயன்பெறமுடியும். வருமானத்தையும் ஈட்டமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண முன்னாள் தலைமைச் செயலாளர் சி. ரங்கராஜன் இது தொடர்பான கோரிக்கை ஒன்றை வடக்கு மாகாண சுற்றுலாத்துறை அமைச்சிடம் முன்வைத்தி ருக்கிறார். கடற்கரை அணைச்சுவர், நவீன உட்கட்டுமானங்கள் மற்றும் நவீன வசதி கொண்ட ஏற்பாடுகளை மேற்கொண்டு ஐந்து மில்லியன் ரூபா செலவிலாவது குறித்த கடற்கரைச் சுற்றுலா மையத்தை அழகுபடுத்தித் தருமாறு கோரியுள்ளார்.

இதேவேளை கடந்த வருடம் சுமார் ரூபா நான்கு மில்லியன் செலவில் திருவடி நிலை கடற்கரை பிரதேசத்தில் நவீன வடிவில் இருக்கைகள், மடங்கள், மலசலகூட வசதிகள், குளியல் அறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இரண்டாம் கட்டமாக ரூபா ஐந்து மில்லியன் ஒதுக்கி அழகுபடுத்துவதன் மூலமாகத் திருவடி நிலைக் கடற்கரை சுற்று லாத்தளம் இன்னும் அழகுபடுத்தப்பட்டு சுற்றுலா பயணிகளை அதிகரிக்கலாம் என்று ரங்கராஜன் மேலும் தெரிவித்தார். முதற்கட்டமாக முன்னெடுத்த திரு வடி நிலை சுற்றுலா பயணிகள் பிரதேசத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் க. வி. விக்னே ஸ்வரன் அண்மையில் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (4-50)

# சமுர்த்திக் கொடுப்பனவு முறைகேடு விசாரணை எந்த நிலையிலுள்ளது?

## 82 பேர் ஆர்.ரி.ஐ. ஊடாக விண்ணப்பம்

வவுனியா, ஜூலை 4

வவுனியாவிலுள்ள வங்கியினால் வழங்கப்படும் கொடுப்பனவில் முறைகேடுகள் இடம்பெறுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், அதன் நிலைப்பாடு மற்றும் விசாரணை நிலை தொடர்பான தகவல்களை வழங்குமாறு இதுவரை இரண்டு கிராமங்களைச் சேர்ந்த 82 பேர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் குறித்த வங்கியினால் வ்ழங்கப்பட்டுவரும் சமுர்த்திக் கொடுப்பனவு சீரான முறையில் வழங்கப்படுவதில்லை. கொடுப்பனவு பல கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் சீராக இடம்பெறவில்லை. பொதுமக்கள் பல தடவைகள் உயர் அதிகாரிகளிடம் சென்று விளக்கம் கோரினாலும் சரியான பதில் பொது மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதையடுத்தே தற்போது கொண்டுவரப்பட்டு நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஊடாகவிண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# வீடுகள் வழங்கப்படுவதை திட்டமிட்டுக் குழப்ப முயற்சி

## தேசிய வீடமைப்பு அதிகாரசபை பணிப்பாளர் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 4

வவுனியா மாவட்டத்தில் பல கிராமங்களில் தற்போது ஆயிரத்து 364 வீடுகளை வழங்கியிருக்கின்றோம். சில கிராமங்கள் குறிப்பாகப் புதிய கற்பகபுரம் கிராமத்திலுள்ள சில குழுவினரால் வீட்டுத்திட்டப் பயனாளிகளைக் குழப்பும் நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றது.

இதனால் எமது வேலைத்திட்டங்களை நாங்கள் மேற்கொள்ளும்போது சில அசெகரியங்களுக்குமுகம் கொடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வவுனியா மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் திருமதி. வீ. எம். வீ .குறூஸ் தெரிவித்துள்ளார்.

புதிய கற்பகபுரம் பகுதியில் வழங்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டப்பணத்தில் கடன் பணம் அறவிடப்படுவதாக அப்பகுதியிலுள்ள சிலர் தகவல் அறியும் உரிமைச்சட்டம் [illegible] அனுப்பியுள்ளனர். இது தொடர்பாகவும் கடன்பணம் அறவீடு தொடர்பாகவும் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு தேசிய வீடமைப்பு அதிகாரசபையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச நடைமுறைகளூடாக நாங்கள் குறித்த வீட்டுத் திட்டப் பணத்தைப் பயனாளிகளுக்கு வழங்கி வருகின்றோம். 2015 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் வீட்டுக்கடன் வழங்கப்பட்டது. தவறியவர்கள் தற்போது வழங்கப்பட்டு வரும் வீட்டுத்தி ட்டத்தில் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கும் 5இலட்சம் ரூபா வுக்குரிய வீட்டுத்திட்டத்தை வழங்குவதற்கு கொழும்பு அரசிடம் அனுமதி பெறப்பட்டு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வீடு ெபற்றுக்கொடுக்க நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

இதனடிப்படையில் அவர்கள் முன்னர் பெற்றுக்கொண்ட கடனான ஒரு இலட்சம் ரூபாவை தற்போது வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் கிடைத்த பணத்தின் மூலம் தாமாகவே முன்வந்து செலுத்தி வருகின்றனர்.

அதற்கு அவர்களின் சம்மதக் கடிதமும் பெறப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் கொண்டு செல்லப்பட்ட சிமெந்துகளை நாங்கள் அவர்களுக்கு வழங்கவில்லை. அவர்கள் பழிவாங்கப்பட்டு விட்டதாகப் புதிய கற்பகபுரம் மக்கள் சிலர் தொவித்துள்ளனர்.

எனவே நாங்கள் வற்புறுத்திக் கடனைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதை அங்குள்ள ஒரு குழுவினர் திட்டமிட்ட வகையில் குழப்பி வருகின்றார்கள்.

எனவே பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்காகவே நாங்கள் வேலைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எங்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி வீட்டுத்திட்டத்தைப் பயனுள்ளதாக்கிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

பாலியல் முறைகேடு புரிந்ததாக

## குற்றஞ்சாட்டப்படும் ஆசிரியர் தற்காலிகமாகப் பணிநீக்கம்

வவுனியா, ஜூலை 4
வவுனியாவில் உள்ள பாடசாலை ஒன்றில் சிறு மீது பாலியல் துன்புறுத்தல் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் ஆசிரியர் மீதான குற்றச்சாட்டு நிர்வாக ரீதியான விசாரணையில் நிரூபிக்கப்படவில்லை என்று வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

குறித்த பாடசாலையில் கடந்த மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

"குற்றச்சாட்டுத் தொடர்பில் பாடசாலைமட்ட ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லை. மேலதிக விசாரணைகளுக்குக் குறித்த மாணவியின் பெற்றோர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு மாணவியின் பெற்றோர்கள் முறைப்பாடுகள் மேற்கொள்ள முன்வரவில்லை. எனவே பாடசாலை மட்ட விசாரணைகளை மேற்கொண்டதுடன் குறித்த ஆசிரியரை வலய மட்ட விசாரணைகளுக்காகத் தற்காலிகமாகப் பணியிலிருந்து இடைநிறுத்தி வைத்துள்ளோம். விசாரணைகள் இடம்பெறு கின்றன. ஆசிரியர் மீது கருணைகாட்டும் எண்ணம் இல்லை. நடைபெற்ற சம்பவத்தை நிரூபிக்க முடியவில்லை" என்று இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார். (4)

## கிளிநொச்சியில்

# 36 குடும்பங்களின் காணிகள் பறிப்பு

அரசு பாராமுகம் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூலை 4
பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்குட்பட்ட கரந்தாய் பகுதியைச் சேர்ந்த 36 குடும்பங்களின் காணிகளைப் பறிப்பதில் மும்முரமாக செயற்படுபவர் தெங்கு உற்பத்தி பிராந்திய முகாமையாளரே என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரன் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது: கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமம் கரந்தாய். அங்கு 1976 ஆம் ஆண்டு தொடக்கம் வாழ்ந்து வந்த மக்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்து ஏனைய பிரதேசங்களில் வசித்தனர்.

போர் மௌனிக்கப்பட்டதும் மீள்குடிய மர்த்தப்பட்டனர். அவர்கள் தங்களுடைய காணிகளில் குடியமர்ந்தபோது, ஆரம்பத்தில் தென்னைப் பயிர்ச்செய்கை சபையினர் தமக்குரிய காணி என்று கூறிமக்களை வெளியேற்ற முற்பட்டனர். அவர்கள் வெளியேறாததால் பளை பொலிஸாரின் உதவியுடன் வெளி யேற்றியதுடன் அவர்கள் நிர்மாணித்த தற்காலிக வீடுகளையும் இடித்தனர். சிலர் கைதுசெய்யப்பட்டுக் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். விவரங்களை கேட்டறிந்த நீதிவான் அவர்களை விடுதலை செய்தார்.

சில மாதங்களின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாகாண சபை உறுப்பினர் அரியரத்தினம், கரந்தாய் காணி தொடர்பாக சில நடைமுறைகளை இணைத்தலைவர்களின்கவனத்துக்குக் கொண்டுவந்தார். அங்கு கலந்து கொண்ட தென்னை பயிர்ச் செய்கைச் சபை அதிகாரி குறித்த காணியில் முதலீ கள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். காணி சீர்திருத்த ஆணைக்குழு சார்பாக கலந்துகொண்ட அதிகாரி குறித்த காணி மக்களுக்குரியதே என்று சுட்டிக்காட்டி யிருந்தார். இணைத்தலைவர்கள் குறித்த காணி மக்களிடம் கைய ளிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்தனர். தீர்மானம் கொண்டுவரப்பட்டு சுமார் 2 வருடங்கள் கடந்துவிட்டன.

இதுவரை காணிகள் மக்களிடம் கையளிக்கப்படவில்லை. நாள்கள் கடத்தப்பட்டன. தாங்கள் வைத்துள்ள தென்னைகள் வளர்ந்துவிட்டன, மக்களுக்கு வழங்க முடியாது. முதலீடு செய்துவிட்டோம் என்று தெரிவிக்கவே இவ்வாறு காலதாமதம் செய்கின்றனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த விடயம் தொடர்பாக நான் ஏற்க னவே நாடாளுமன்றில் கதைத்த போது, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் தலை மையில் கூட்டம்கூடி இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெங்கு உற்பத்தி அமைச்சர் நாடாளுமன்றில் பதிலளித்திருந்தார்.

ஆனால் அரசு இதுவரை இந்தக் காணி தொடர்பாகப் பச்சைக்கொடிகாட்டவில்லை. இது சம்பந்தமாகக் கூட்டம் கூட இடம்பெற வில்லை. இந்தக் காணிகளை மக்களிடம் இருந்து பறித்து, மக்களின் தற்காலிக வீடு கள், கிணறுகள் போன்றவற்றை உடைத் துள்ளனர். தெங்கு பயிர்ச் செய்கைச் சபையின்தலைமைப்பீடத்துக்குத் தவறான தகவல்களை வழங்கியுள்ளார். தெங்கு பயிர்ச் செய்கைப் பிராந்திய முகாமையா ளராகக் கடமையாற்றுபவருக்கு எதிராக மேலதிக நடவடிக்கையை எடுக்க வுள்ளேன். இவ்வாறான பிழையான தகவல்களை வழங்குவதை அதிகாரிகள் நிறுத்திக்கொள்ள வேண்டும். மக்களின் காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்" - என்றார். (4-6)



## நோயற்று நீண்ட ஆயுள் பெற்றிட

★ உடல் பருமன் சுட்டென் Bmiநிறை/2 உயரம் (மீற்றர் * மீற்றர்).
★ Bmiஉடல்பருமன் சுட்டென். 18.5க்கு குறைவாக இருப்பின் _உயரத்துக்கு ஏற்ற நிறை இல்லை.
★ 18.5 _24.9 உயரத்துக்கு ஏற்ற நிறை சரியாக உள்ளது.
★ 5 _ 29.9உயரத்துக்கு ஏற்ற நிறையை விட அதிகம்
30 இற்கு மேல் அதி கூடிய நிறை.
★ அதி கூடிய நிறை உள்ளவர்களை தொற்றா நோய்கள் தாக்கும் அபாய நிலை அதிகம்.



*தகவல்*
*சு.வை.அ.பணிமனை,*
*யாழ். மாநகரசபை*

## முச்சக்கரவண்டியில் கடத்தப்பட்டவர் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்

அவரிடம் இருந்து அலைபேசி, பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்றனர் பொலிஸார்

தென்மராட்சி ஜூலை 4
சாலையோரத்தில் நடந்து சென்ற குடும்பத் தலைவரை வலுக்கட்டாயமாக முச்சக்கர வண்டியினுள் இழுத்து கடத் திச் சென்று தாக்கி அவரிடம் இருந்து அலைபேசி மற்றும் பணம் ஆகியன கொள்ளை யிடப்பட்டுள்ளன. காயம டைந்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க் கப்பட்டார். என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மிரு சுவில் பழைய வாய்க்கால் ஏ - 9 சாலையில் இடம்பெற் றுள்ளது. இதில் மிருசுவில் பழைய வாய்க்காலைச் சேர்ந்த மார்க்கண்டு இரா சேந்திரம் (வயது 57) என்ப வரே காயமடைந்து வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்ட வராவார்.

உசன் சந்தியில் உள்ள வணிக நிலையத்திற்கு நடந்து வந்து பொருள்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்பிய போது சிறிது தூரத் தின் அருகே முச்சக்கர வண் டியில் வந்தவர்கள் அவரை வலுக்கட்டாயமாக ஓட்டோ வினுள் இழுத்து தாக்கி கொண்டு சென்றுள்ளனர். அங்கிருந்து 3 கிலோ மீற்றர் தூரம் வரை முச்சக்கர வண் டியினுள் வைத்து அவர் மோசமாகத் தாக்கப்பட்டுள் ளார். எழுதுமட்டுவாழ் ஒட்டு வெளிப் பகுதியில் குடியிருப்புகள் குறைந்த இடத்தில் முச்சக்கர வண் டியை நிறுத்திய கொள்ளை யர்கள் அவர் அணிந்தி ருந்த உடைகளைக் களைந் தும் மோசமாகத் தாக்கியுள் ளனர். அவர் சத்தமிடவே வாயினுள் மண்ணைப் போட்டுவிட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். சத் தத்தைக் கேட்ட அப்பகுதி யில் வாழும் முதியவர் டோர்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சியதும் கொள்ளையர் கள் குறித்த நபரைத் தள்ளி வீழ்த்திவிட்டு அவர் வைத்தி ருந்த அலைபேசியையும் பணத்தையும் பறித்துக் கொண்டு தப்பியோடியுள்ள னர். சம்பவ இடத்துக்கு வந்த சிலர் வாகனங்களில் துரத்தி யபோதும் முச்சக்கரவண்டி தப்பித்துச் சென்றுள்ளது. அங்குள்ள மக்களின் உதவி யுடன் குறித்த நபர் மீட்கப்பட் டார். கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தன் னைத் தாக்கியவர்களைத் தனக்குத்தெரியாது எனதாக்கு தலுக்கு இலக்கான குடும்பத் தலைவர் தெரிவித்துள்ளார், விசாரணைகள் இடம்பெற் றுள்ளன. என பொலிஸார் தெரிவித்தனர்.

இதே வேளை தாக்குதலுக்கு இலக்கான நபருடைய உறவினர்கள் என சந்தே கிக்கப்படுபவர்கள், இந்தச் சம்பவம் தொடர்பாக மிருசு வில் பகுதியில் ஓட்டோ வைத்திருக்கும் இளைஞ ருக்கு தொடர்பு இருக்கலா மென எனத் தெரிவித்து நேற்று முன்தினம் வாக னங்களில் சென்று அந்த இளைஞரைக்கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த மிருசுவில் புகையிரத நிலை யசாலையைச் சேர்ந்த இரா சேந்திரம் ஹரிஸ் (வயது-23) என்பவர் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க் கப்பட்டுள்ளார். (21-9)

# இழப்புக்களுக்கு நிகரான தீர்வையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்

முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கூறுகிறார்

கிளிநொச்சி, ஜூலை 4
தமிழ் மக்கள் தாங்கள் இழந்த இழப்புக்களுக்கும், செய்த தியாகத்துக்கும் நிக ரான நியாயமான அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்ற னர் என்று சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப் பின் அமைப்பாளரும், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பி னருமான மு. சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி உதயநகர் பிரதே சத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இளைஞர்களுட னான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரி வித்துள் ளார். அங்குமேலும்தெரிவித்த தாவது:

தமிழ் மக்கள் எதற்காகத் தியாகங்களைச் செய்தார்க ளோ எதற்காக இழப்புக்க ளைச் சந்தித்தார்களோ, அதற் கான நியாயமான தீர்வு கிடைக்கவேண்டும். அதற்கு தமிழ் மக்களின் அங்கீகா ரத்தைப் பெற்றவர்கள் கடு மையாக உழைக்க வேண் டும். கடுமையான உழைப் பின் மூலம் மக்க ளின் எந்தப் பிரச்சினை களையும் தீர்க்க லாம் என்பது யதார்த்தம். மாறாக புறக் காரணிகளைக் கூறிக்கொண்டிருப்பவர்கள் இயலாமையுடையவர்களே. போராட்ட காலத்தில் எந்தத் தியாகத்தையும்செய்யாதவர் கள் இப்போது அதன் வலி களை அதிகம் சுமந்தவர்கள் போல் பேசி வருகின்றார்கள். நாடாளுமன்றிலும், அடிக்கடி ஊடகங்களிலும் செய்தி வரும் வகையில் பேசுகின் றார்கள். ஆனால் இவை யெல்லாம் மக்களின் பிரச்சி னைகளைத் தீர்த்து விடாது. மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் உழைக்கவேண்டும். அதற் காகவே மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய் கின்றார்கள்.

ஆனால் மக்களின் எதிர்பார்ப் புகள் எவையும் நிவர்த்தி செய்யப்படுவதாகத் தெரிய வில்லை. தற்போதைய சூழ் நிலையில் மக்கள் கைவிடப் பட்டவர்களாக நிர்க்கதியான நிலையில் காணப்படு கின்றன ளா. புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக மாற் றத்தை நோக்கி தாங்க ளாகவே இளைஞர்கள் முன் வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கி றது. இளைஞர்களின் சக்தி மிகப் பலமானது.

எனவே இளைஞர் சமூகத் தில் ஏற்படுகின்ற மாற்றம் சமூ கத்தில் ஏற்படுகின்ற மாற்ற மாகவே காணப்படும். அந்த வகையில் அந்த மாற்றத்து க்கு நாங்களும் உறுதுணை யாக இருப்போம் - என்றார்.

இந்தச் சந்திப்பில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் செயற்பாட்டா ளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (4-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான சட்டவரைவு விரைவில் நிறைவேறும்

## ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை04
நாட்டுக்குக் கெடுதியான, மிகவும் ஆபத்தான சட்டவரைவு ஒன்றை தற்போதைய அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற உள்ளது என முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கண்டி கெட்டம்பே ராஜோபவனாராமய விகாரையின் விகாராதிபதி சிறிவிமல தேரரை நேற்று முன்தினம் சந்தித்தபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

குறித்த சட்டவரைவின் ஊடாக நாட்டின் இராணுவத்தினர் அல்லது அரசியல்வாதிக்கு எதிராக பன்னாட்டு அரசோ அல்லது பன்னாட்டு நிறுவனம் ஒன்றோ குற்றச்சாட்டுக்களை முன்வைக்குமாயின், விசாரணைகளுக்காக சம்பந்தப்பட்டவர்களை அந்த நாட்டிடம் ஒப்படைக்கவேண்டும். இதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்களைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் நேர்நிலைப்படுத்த முடியும். இது தொடர்பாக மாநாயக்க தேரர்கள் உட்பட மகாசங்கசபையினருக்கு விளக்கி இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்தவேண்டும்.

இதனால், ஏற்படப்போகும் பிரதிபலன்கள் குறித்து மக்களுக்கு புரிதல் இல்லைஎன்றார். (த-ய)

# நல்லிணக்கத்துகான ஆளுநரை கிழக்கில் நியமிக்கவேண்டும்

## அரசிடம் புத்திஜீவிகள் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை04
கிழக்கு மாகாணசபை முதலமைச்சராக ஒரு முஸ்லிமை தெரிவு செய்து தமிழ் மக்கள் தங்களது நல்லிணக்கத்தைக் காண்பித்துள்ள நிலையில் அரசு மட்டும் இன்றுவரை கிழக்கில் தமிழர்களுக்கான நல்லிணக்கத்தை வெளிக்காட்டவில்லை என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் நியமனம் குறித்து தமிழ் புத்திஜீவிகள் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கிழக்கு மாகாணத்தின் அடுத்த ஆளுநர் யார் என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், நாட்டின் கடந்த 30 ஆண்டு கால போருக்குக் காரணமான விடயங்களுக்கு நல்லிணக்கத்தின் அடிப்படையில் தீர்வு காணப்படுகிறது என கூறும் அரசு போரால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் இருந்து ஒரு ஆளுநரைத் தெரிவு செய்து தனது நல்லிணக்கத்தைக் காட்ட வேண்டும்என்றகோரிக்கையை முன்வைக்கின் றோம்.

கிழக்கு மாகாண சபை முதலமைச்சராக ஒரு முஸ்லிமை தெரிவு செய்து தமிழ் மக்கள் தங்களது நல்லிணக்கத்தை காண்பித்துள்ள நிலையில் அரசு மட்டும் இன்று வரை கிழக்கில் தமிழர்களுக்கான நல்லிணக்கத்தை வெளிக்காட்டவில்லை.

எனவே, கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் தமிழர்கள் சார்பாக ஒருவரை ஆளுநராக நியமித்து நல்லிணக்கம் தொடர்பான நம்பிக்கையை தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பவேண்டுமென மட்டக்களப்பில் உள்ள புத்திஜீவிகள் தமிழ் அரசியல் தலைமைகள் ஊடாக இந்த கோரிக்கையை விடுக்கின்றோம் - என்று உள்ளது. (த-ய)

# நீர்த்தேக்கத்தால் ஆறு கிராமங்கள் அழியும் அபாயம்

கொழும்பு, ஜூலை04
மொரகஹாகந்தைநீர்த்தேக்கத் திட்டம் காரணமாக நாவுல பிரதேச செயலாளர் பிரிவில் ஆறு பாரம்பரிய கிராமங்கள் இலங்கை வரைப்படத்தில் இருந்து அழிந்துபோகும் எனத் திட்டப் பொறியியலாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

கம்மரவ, கல்போருகொல்ல, எலகமுவ, தலாகொட, கடவத்த மற்றும் மெதபில்ல ஆகிய கிராமசேவகர் பிரிவுகள் நீரில் மூழ்கிப்போகும்.

மாத்தளை மாவட்டத்தின் நாவுல பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இந்த ஆறு கிராமங்களை இலங்கை வரைப்படத்தில் எப்போதும் காணமுடியாமல் போகும்.

இதனை தவிர, கொன்கஹாவேல, ரஜாவெல ஆகிய கிராமசேவகர் பிரிவுகளும் காலப்போக்கில் நீரில் மூழ்க உள்ளதாகத் திட்டப் பொறியியலாளர காரியாலயம் மேலும் கூறியுள்ளது. (த-ய)

# ஊழலுக்கு எதிரான குழுவின் கால எல்லை நீடிக்கப்படுமா?

கொழும்பு, ஜூலை 4
ஊழலுக்கு எதிரான குழுவின் அலுவலகத்தைத் தொடர்ந்தும் நடத்திச் செல்வதா இல்லையா என்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவினால் அந்த அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் தெரியப்படுத்துவதற்கு, கடந்த வருடம் ஜனவரி மாதம் குறித்த அலுவலகம் அமைக்கப்பட்டது.

அதன் பதவிக்காலம் இந்த வருடம் ஜனவரி மாதத்துடன் நிறைவடைந்த பின்னர் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

இதற்கமைய கடந்த 30 ஆம் திகதியுடன் அந்தக் கால எல்லையும் நிறைவடைந்த நிலையில், அதன் கால எல்லையை நீடிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த அலுவலகம் அமைக்கப்பட்டதன் பின்னர் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. ஊழல் செயற்பாடுகள் குறித்த விசாரணைகளை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஊழல் மோசடிக்கான அலுவலகம் தற்போது தமக்கு வரும் முறைப்பாடுகளை, பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொண்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் ஊழலுக்கு எதிரான குழுவின் அலுவலகத்தின் கால எல்லையைத் தொடர்ந்தும் நீடிக்க வேண்டிய தேவையில்லை என்பது அரசின் கருத்து என்று கூறப்படுகின்றது. (த)

# களுத்துறைக்கு மாற்றப்படும் வெலிக்கடைச் சிறைச்சாலை

கொழும்பு, ஜூலை 4
கொழும்பில் அமைந்துள்ள மிகப்பெரிய சிறைச்சாலையான வெலிக்கடைச் சிறைச்சாலை களுத்துறைக்கு மாற்றப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் விதப்புரையின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

களுத்துறை மாவட்டத்தின் மில்லனாயா என்ற இடத்தில் உள்ள நியூ சப்பேல் தோட்டப் பகுதிக்கே இது மாற்றப்படவுள்ளது. வெலிக்கடைச் சிறைச்சாலை இலங்கை வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு சிறைச்சாலையாகும். மிகப்பெரிய பாதுகாப்பு வலையமைப்புக்களைக் கொண்ட இந்தச் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட தமிழ்க் கைதிகளின் படுகொலைகள் இனப்பிரச்சினைக் காலக்கோட்டின் கறை படிந்த பக்கங்களாகும்.

இது பிரிட்டிஷ் காலணித்துவ அரசின் ஆளுநர் கமரோன் என்பவரின் கீழ் 1841 ஆம் ஆண்டு 48 ஏக்கர் நில விஸ்தீரணத்தில் கட்டி முடிக்கப்பட்டதாகும். (த)

# இந்த வருடம் இஸ்ரேலில் 265 இலங்கையருக்கு தொழில்

கொழும்பு, ஜூலை 4
2017ஆம் ஆண்டின் இதுவரையிலான காலப் பகுதியில் 265 இலங்கையர்கள் இஸ்ரேல் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இலங்கையர்கள் அனைவரும் விவசாய தொழில் நிமித்தமே அங்கு சென்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஆண்டில் விவசாயத் தொழிலின் நிமித்தம் 359 பேர் வரை சென்றுள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக இஸ்ரேலுக்கு, தொழில்வாய்ப்புக்காக ஆட்சேர்ப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-ய)

காணி விற்பனைக்கு
நாவற்குழி பாடசாலை வீதியில்
கிணறு மற்றும் மலசலகூட
வசதியுடன் 4 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
077 9738114

வேலை வாய்ப்பு
இலங்கையில் 22 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும்
எமது GMI COMPANY யின் கிளைகளில் பணிபுரிய
இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்
♦ அனுபவம் அவசியமில்லை ♦ குறுகிய காலத்தில் பதவியுயர்வு
♦ தொழிலில் சிறப்புத்தேர்ச்சி பெறும்போது வெளிநாட்டில் பணிபுரியும் வாய்ப்பு
➡ நிர்வாக அதிகாரி ➡ செயல்திட்ட அதிகாரி
➡ அலுவலக உதவியாளர் ➡ மேற்பார்வையாளர்
மட்டுப்படுத்தப்பட்ட பதவி வெற்றிடங்களே உள்ளன.
தகைமை O/L அல்லது A/L
பயிற்சியின் போது 12000 - 18000 வரையில் பெற்றுக்கொள்ளலாம்.
பயிற்சியின் பின்னர் 45000 + EPF, ETF
தொ.பே.: 076 886 3253

60 ஆவது பிறந்த தின (மணி விழா)
வாழ்த்து
சாம்பசதாசிவக் குருக்கள் கோபாலசர்மா



எமது நீர்வேலி வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளரும், கல்லூரி வீதி, கந்தரோடை, சுன்னாகம் வாசியுமான பிரம்மஸ்ரீ சா.கோபாலசர்மா அவர்கள் இன்று (04.07.2017) செவ்வாய்க்கிழமை தமது 60 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார். அவர் நீர்வை அரச கேசரிப் பிள்ளையார் கொற்றன்கட்டு ஞானவைரவர் அருளுடன் [illegible]
பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
ப.நோ.கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.

J/MANIPAY HINDU COLLEGE
(National School)
Founder's Day & Prize Giving - 2017



Date : Tuesday 4th July 2017
Time : 8.30 am
Venue : Main Hall

President
Mr.M.Inthirapalah (Principal)

Chief Guest
Mr.K.Saranathan
(Old student -MHC)
B.Sc (Eng).M.I.E(SL),M.I.C.E (Lond)
M.I.W.E.S (Lond), M.I.E (Aus)
Rtd.Senior Engineering Manager, Melbourne, Australia

Special Guest
Dr.T.Uthayaharan
(Old student -MHC)
BASc(Hon),MSc, PhD,RSE,LC,P.Eng Lecturer- Ryerson University, Canada.

Guest of Honour
Mr.S.Sivananthrajah
Divisional Director of Education, Divisonal Office, Sandilipay.

Founder Memorial Address
Mr.R.Vasanthasenan
Rtd.Judge,Jaffna District.

All are cordially invited to grace this occasion
- Principal, Staff & Students
SDC & OSA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானூர்தி நிலையங்களுக்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள்

கொழும்பு, ஜூலை04
இலங்கையிலுள்ள அனைத்து வானூர்தி நிலையங்களும் பாதுகாப்பாக உள்ளதென இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

வானூர்தி ஓடுபாதைகள் உள்ள இடங்களில் கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக விமா னப் படை ஊடகப் பேச்சாளர் கிஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்கத் தூதர கம் மீது தாக்குதல் மேற்கொள்வதற்கு ஐ.எஸ். அமைப்பு நடவடிக்கை மேற்கொள்வதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் அவரிடம் வினவியபோததே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இரத்மலானை வானூர்தி நிலையத்தில் விமானம் ஒன்றைக் கடத்தி அமெரிக்கத் தூதரகத்தைத் தாக்குவதற்காக ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆயத்தமாகின்றனர் என ஊடங்களில் செய்தி வெளியாகியிருந்தன.

இந்தத் தகவல் ஊடகங்களில் மாத்திரமே வெளியாகியிருந்தன என விமானப்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பில் இன்னமும் எவ்வித உத்தியோகபூர்வ தகவல்களும் வெளியாகவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர்க்காலம் மற்றும் அதன் பின்னரும் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித குறைபாடுகளும் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த- ய)

## மரண அறிவித்தல்கள்

### பாலசுப்பிரமணியம் மதியழகன்

(வேலணை வடக்கு இலந்தைவனம் சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா)



தோற்றம் 14.04.1967 மறைவு 02.07.2017

வேலணை வடக்கு, சோளா வத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் மதியழகன் 02.07.2017 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் கௌரி அம்பிகையின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை (இலந்தைவனம் சித்திவிநாயகர் ஆலய முன்னாள் தர்மகர்த்தா) - நாகரெத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், வேணுப்பிரியா, திவ்வியா, றஜீகரன், கஜனிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வீகனின் (கனடா) அன்பு மாமனாரும், சுவீகரன், காலஞ் சென்ற விஸ்ணுகரன் மற்றும் பாரதா, உதயழகன், முகிலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமணிதேவி, சண்முகதாஸ், ராகினி, சிவாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிஷாந்தன், விஸ்ணுகா, விஸ்ணுப்பிரியா, சாத்வீகா ஆகியோரின் சித்தப்பாவும், சரண்ணியா, ஜினோசன், டிலக்சன், சுபீசன் ஆகியோரின் மாமாவும், கபிசாந், கபிநாத், லதாங்கி, தேனுஷா, தஷானா, ரிஷானா ஆகியோரின் பெரியப்பாவும், பாலசுப்பிரமணியம் - ஈஸ்வரகௌரி (புளியங்கூடல்) தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2017) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணியளவில் வேலணை வடக்கு வீரன் பூவரசடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வேலணை வடக்கு,**
**5ஆம்வட்டாரம், வேலணை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 247 8683, 077 168 1931**



அன்னை மடியில் 08 . 02 . 1972

ஆண்டவன் அடியில் 29 . 06 . 2017

### திருமதி ஜெயராணி இளவழுதி

மன்னாரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயரா்ணி இளவழுதி(ரவிக்குமார்) 29.06.2017 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தோமஸ் தேவபாலன் - திரவியம் தம்பதியரின் அன்பு மகளும் பேதுருபற்றிக் - எலிசபெத் தம்பதியரின் அன்பு மருமகளும் இளவழுதியின் (ரவிக்குமார் - France) பாசமிகு மனைவியும் சிந்தியா, சௌகந்தியா, அஸ்வத் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயராஜ், ஜெயமணி, ஜெயக்குமார், ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வறதி (எஸ்தர்), புஸ்பவதி(மாலா), மஞ்சுளாவதி (France), அஜித்குமார் (France) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மகேந்திரராஜா(மானிப்பாய்), ஜெகதீஸ்வரன் (ஜெயா), ஜெயபாலன் (France), தர்சினி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ரானியா, விசானியா, ஜெனுஷா(France), யூலியன், யோசுவா, ஜெனித்தன் (France), ஜெலுஷன் (France) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நாளை (05.07.2017) புதன்கிழமை "Funerarium de Menilmontant", 7 Boulevard de menilmontant 75011 Paris இல் 2.00 pm - 2.30 pm வரை வைக்கப்படும். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக Cimetiere parisien de Bangneux 45 Avenue Marx Dormoy 92220 Bagewx இல் (3.00pm-4.00pm) நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளாவும்.

**தகவல்:**
**மகேந்திரராஜா**
**(ரானியா றெக்ஸ்,**
**மானிப்பாய்.**

**99, யாழ் வீதி,**
**மானிப்பாய்.**

இளவழுதி - 0033661023594 - பிரான்ஸ்
ஜெயபாலன் - 0033652556754 - பிரான்ஸ்
0768728124

# பிரபாகரனின் பெரியப்பாவாக விக்கி முயற்சி

*அமைச்சர் எஸ்.பி. சாடல்*



கொழும்பு, ஜூலை 4
வடக்கு மாகாண முதல்வர் தனிஈழம் ஒன்றை அமைக்கும் கன.வில் இருக்கின்றார். அவர் தமிழ் மக்களிடத்தில் பிரபலமாகிப் பிரபாகரனின் பெரியப்பாவாகவே முயற்சித்து வருகிறார். நாட்டைப் பிளவுபடுத்த வேண்டும் என்று அவர் நினைப்பாராயின் அது கனவாக மாத்திரமே இருக்கும் என அமைச்சர் எஸ் பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

வடக்கு முதல்வர் கொழும்பின் பார்வை தீர்வுக்கு உதவாது எனக் கூறியமை குறித்து கருத்து தெரிவிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் வாழும் மூவின மக்களினதும் உரிமைகளைப் பாதுகாத்து ஒற்றையாட்சியின் கீழ் அந்த மக்கள் தமது உரிமைகளுடன் சுதந்திரமாக வாழவே அரசு செயற்படுகின்றது.

அதற்கான முதற்கட்ட முன்னெடுப்பாக அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், வடக்கு முதல்வரிடமிருந்து இவ்வாறான கருத்துகள் வெளிப்படுகின்றன.

வடக்கு முதல்வரின் கருத்துகளைத் தமிழ் மக்களின் நிலைப்பாடாக எடுத்துக் கொள்ள முடியாது. அவர்கள் அதை விரும்பவும் மாட்டார்கள்.

வடக்கு மாகாண முதல்வர் தனிஈழம் ஒன்றை அமைக்கும் கனவில் இருக்கின்றார். அவர் தமிழ் மக்களிடத்தில் பிரபலமாகிப் பிரபாகரனின் பெரியப்பாவாகவே முயற்சித்து வருகிறார். அவர் கொழும்பின் பார்வை தவறு என்று கூறுவதை ஏற்கமுடியாது.

எனவே கூட்டாட்சி ஆட்சி முறையினைக் கருத்திற் கொண்டு செயற்படாமல் எமது நாட்டில் வாழுகின்ற அனைத்து இன மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும் என்றே அரசு நினைக்கிறது.

அதற்கு மாறாக நாட்டைப் பிரிக்க வேண்டுமென வடக்கு மாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் நினைப்பாராயின் அது கனவாக மட்டுமே இருக்கும் என்றார். (தய)

# நீர்கொழும்பு பஸ்கள் மூலம் கொழும்பு செல்லும் நுளம்பு

கொழும்பு, ஜூலை04
நீர்கொழும்பு பஸ்களின் ஊடாகக் கொழும்புக்கு அதிகளவில் நுளம்புகள் செல்வதாகத் தெரிவிக்கப்படுகி ன்றது. கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை ஊடாக நீர்கொழும்பில் இருந்து கொழும்பு செல்லும் சொகுசு பஸ்களிலேயே இந்த நுளம்புகள் செல்கின்றன.

இவ்வாறு நுளம்புகள் தலைநகருக்குச் செல்வதனால் டெங்கு தொற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதெனப் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


குறித்த பஸ்களில் அதிகளவிலான நுளம்புகளைக் காணமுடிவதாக பயணிகள் குற்றம் சுமத்தியுள்னர்.

டெங்குநுளம்புத் தொற்று அதிகமாக உள்ள பிரதேசங்களில் நீர்கொழும்பு முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதன் காரணமாக அண்மையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நீர்கொழும்பு வைத்தியசாலையின் டெங்கு சிகிச்சைப் பிரிவுக்கு கண்கா ணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் விசுவலிங்கம்



பிறப்பு 21.08.1932 இறப்பு 02.07.2017

வல்வெட்டி, கருணாநிதி ச.ச. நிலையத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் விசுவலிங்கம் 02.07.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளையன் - அழகி தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற விசுவலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சிதம்பரம் - பசுபதி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், சேனாபதி, துரைராசா, கேசலிங்கம் ஆகியோரது பாசமிகு சகோதரியும், தங்கராசா, காலஞ்சென்ற சின்னக்கண்டு ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பத்மலிங்கத்தின் பாசமிகு தாயாரும், சாந்தியின் பாசமிகு மாமியாரும், சிவகாந் - கவிதா, செல்வகாந்தன் - பிரியா, ஜெய்காந்தன் - அலெக்ஸி, சிவதர்சினி - கிமல் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், ஹனிஸின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2017 ) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சமரபாகு எள்ளம் குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கருணாநிதி சனசமூகநிலையம்,**
**வல்வெட்டி.**

**தகவல்:- பத்மலிங்கம்**
**குடும்பத்தினர். (Swiss)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தத்தை போன்று ஏனைய மதங்களுக்கும் உரிய இடம் வேண்டும்

## அது சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்பு என்கிறார் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க



கொழும்பு, ஜூலை 4
பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடம் புதிய அரசமைப்பின் ஊடாக நீக்கப்பட வேண்டும் என்று தமிழர்களோ முஸ்லிம்களோ அரசிடம் கூறவில்லை. எல்லா மதங்களுக்கும் அந்தந்த இடத்தை வழங்கவேண்டும் என்றே அனைவரும் விரும்புகின்றனர் என்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை தொடங்கொட முத்துமாரி அம்மன் கோவில் திருவிழாவில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இப்போது எம் எல்லோருக்கும் தேவையாக இருப்பது இனங்களிடையே ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதுதான். இந்த நாடு வெற்றியை நோக்கி நகர வேண்டுமென்றால் அனைத்து இனங்களும் இலங்கையர் என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து நிற்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம்.

புதிய அரசமைப்பு இன ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கு வழி வகுக்கும். அந்த அரசமைப்பின் ஊடாகப் பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடம் நீக்கப்படும் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் இல்லை. அவ்வாறு நீக்கப்பட வேண்டுமென்று யாரும் கோரிக்கை விடுக்கவும் இல்லை. எல்லா மதங்களுக்கும் அந்தந்த இடத்தை வழங்கவேண்டும் என்றே அனைவரும் விரும்புகின்றனர் - என்றார். (த-ய-03)

# ஐ.எஸ்.தாக்குதல் திட்டம்; செய்திகள் உறுதியில்லை

## கூறுகிறது அமெ. தூதரகம்

கொழும்பு, ஜூலை 4
கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள தமது தூதரகத்தைத் தாக்க ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் சதித்திட்டம் தீட்டி வருகின்றனர் என வெளியான செய்திகள் குறித்து உத்தியோகபூர்வமாக எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ அறிக்கை எதுவும் கிடைக்காத நிலையில், அது குறித்துப் பதிலளிக்க முடியாது எனவும் தூதரகம் கூறியுள்ளது.

இந்நிலையில், ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் தூதரகத்தைத் தாக்க போவதாக எவ்வித தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்மலானை விமான நிலையத்தில் விமானம் ஒன்றைக் கடத்தி கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை தாக்க ஐ.எஸ். பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என ஊடகங்களில் அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

# அமெ. தூதரகம் மீதான ஐ.எஸ். தாக்குதல் முயற்சி குறித்து எதுவும் தெரியாது

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

ஐ.எஸ். தீவிரவாதிகள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்த உள்ளதாக வெளியான தகவல்கள் பற்றி தமக்கு எதுவும் தெரியாது எனப் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி தற்போது ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்துள்ளார்.

குடிவரவு குடியகல்வு தொடர்பில் கன்பராவில் நடைபெற்று வரும் மாநாடு ஒன்றில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் கொழும்பு ஊடகமொன்று, ஐ.எஸ் தீவிரவாத தாக்குதல் குறித்து அவரிடம் கேள்வி எழுப்பியிருந்தது.

இதற்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் தமக்கு இதுபற்றி எதுவும் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர் எனவும், இது குறித்து அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளதாகவும் அண்மையில் சமூக வலைத்தளங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

தாம் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளார் என்றும், தெரியாத விடயம் ஒன்றைப் பற்றிப் பேசமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-ய)

# என்னை இனவாதியாக காட்டச் சிலர் முயற்சி

## அசாத் சாலி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 4
தம்மை இனவாதியாக அடையாளப்படுத்த முயற்சிக்கப்படுவதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் பிரசாரம் செய்யப்பட்டு வருவதாகவும், தம்மை ஓர் இனவாதியாக அடையாளப்படுத்தும் சூழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாமோ தமது கட்சியோ இனவாத அடிப்படையில் செயற்படவில்லை என அவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

பொதுபல சேனா இயக்கத்தின் அச்சுறுத்தல்கள் குறித்து தாம் மகிந்த ராஜபக்ஸ அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்ததாகவும் அவர் மேலும் கூறினார். (த)



# இயலாமையை மறைக்க அரசு மகிந்த மீது பழி

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை04
அரசு தனது இயலாமையை மூடி மறைப்பதற்காக எல்லா விடயங்களுக்கும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பெயரைப் பயன்படுத்தி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

மினுவன்கொட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோததே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்த ஆட்சிக்காலத்தில் நாட்டுக்கு கிடைக்கப் பெற்ற அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியே தற்போதைய அரசு பேசி வருகின்றது.

மக்களிடம் எதனையும் சொல்லமுடியாத அரசு மகிந்தவின் அபிவிருத்தித் திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்து அவரையே விமர்சனம் செய்து வருகின்றது.

இன்று நாட்டை ஆட்சி செய்யும் அரசு இலங்கையில் மட்டுமன்றி உலகின் மிகவும் மோசமாக தோல்வியடைந்த அரசாகும்.

பிரிவினைவாதிகள் மற்றும் மேற்குலக நாடுகளின் விருப்பு வெறுப்புக்களையே இந்த அது பூர்த்தி செய்து வருகின்றது.

அரசின் இயலாமையை இன்று வீதியில் இறங்கிப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். ஒரு புறத்தில் டெங்கு மறுபுறத்தில் குப்பைகள் நிறைந்து வழிகின்றன.

சில அமைச்சர்கள் நாட்டு மக்களை குருடர்களாகவும், செவிடர்களாகவும் நினைத்துப் பேசிவருகின்றனர்.

ஒட்டுமொத்த நாடே அரசைத் திட்டும் போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு சில அரச விசுவாசிகளும் மகிந்த ராஜபக்சவைத் திட்டித் தீர்க்கின்றார்கள்.

குப்பையாகியுள்ள இந்த அரசுக்கு நீண்ட ஆயுள் கிடையாது - என்றார். (த-ய)

# தமிழர் விவகாரங்களில் ஆஸி. அரசு பாராமுகம்

## நாடு கடந்த தமிழீழ அரசு கண்டனம்

நியூயோர்க், ஜூலை 4
தமிழர் விவகாரங்களுக்குத் தீர்வு காணும் முயற்சிகளை எடுக்காமைக்காக ஆஸ்திரேலிய அரசை நாடுகடந்த தமிழீழ அரசு கண்டித்துள்ளது.

இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தமிழ் மக்களின் அரசியல் மற்றும் மனித உரிமை விவகாரங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளை எடுக்காததன் மூலம் தமிழ் மக்களின் துயரங்களும் வேதனைகளும் அதிகரிக்கும் நிலையை ஆஸ்திரேலியா உருவாக்குகின்றது.

இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆதரவாக செயற்படுவதன் மூலம் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக உள்ள சமூகத்தவர்களை இலங்கை தொடர்ந்தும் துன்புறுத்துவதற்கு ஆஸ்திரேலியா உதவுகின்றது.

இலங்கை அரசும், ஆஸ்திரேலிய அரசும் இணைந்து வெளியிட்ட உறவுகளை வலுப்படுத்துவது குறித்த கூட்டு பிரகடனத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது, காணாமற்போனவர்கள் விவகாரத்துக்குத் தீர்வை காண்பது, அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, படையினரின் பிடியிலுள்ள நிலங்களை விடுவிப்பது போன்ற நடவடிக்கைகளை இலங்கை அரசு எந்த விதமான நியாயமான காரணங்களுமின்றி தாமதப்படுத்துகின்றது.

தமிழர் தாயகத்தின் குடித்தொகை பரம்பலை மாற்றுவதற்காக இலங்கை அரசு சிங்கள குடியேற்றங்களுக்கு உதவி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரனை வழங்கிய ஆஸ்திரேலிய அரசு அந்தத் தீர்மானம் குறித்த தனது கடப்பாட்டிலிருந்து விலகியுள்ளமை வெளிநாடுகளிலுள்ள தமிழர்களுக்கு ஏமாற்றமளிக்கின்ற விடயம் என்றுள்ளது. (வ)

# எம்.பிக்களின் கொடுப்பனவுக்கு வருடத்துக்கு ரூ.25கோடி செலவு

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 25 கோடி ரூபா செலவிடப்படுகின்றது.

இந்த விடயம் நாடாளுமன்றத் தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது. கடந்த 2016ஆம் ஆண்டில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளுக்காக 25,85,82,312 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

பொதுவாக ஒரு மாதத்தில் எட்டு நாள்கள் நாடாளுமன்ற அமர்வுகள் நடத்தப்படுகின்றது. இதன்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்காக 12,008 ரூபா செலவிடப்படுகின்றது.

இதன்படிஇ நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கொடுப்பனவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு 97,065 ரூபா செலவிடப்படுகிறது.

இதேவேளை, கடந்த 2016ஆம் ஆண்டில் 97 நாள்கள் நாடாளுமன்ற அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
கணபதிப்பிள்ளை
முரளிதரன் (குட்டி)



பிறப்பு 12.01.1987
இறப்பு 23.05.2017

கடந்த 23.05.2017 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத்தெய்வம் கணபதிப்பிள்ளை முரளிதரன் (குட்டி) அவர்களின் அந்தியேட்டிக்கிரியைள் இன்று (04.07.2017) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (06.07.2017) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்காபுரியில் முதல் முறையாக சித்தங்கேணி பெரியவளவு

# ஸ்ரீ மஹா கணபதி பிள்ளையார் பெருமான் தேவஸ்தானம்

## புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண ஏகோன்ன பஞ்சாசத் (49) குண்டபக்ஷ

## மஹாயாக, மஹா பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக சிறப்பிதழ்-2017

**மஹா கும்பாபிஷேகம்**
**நாளை 05.07.2017 (புதன்கிழமை)**
**மு.ப.10.00 மணிமுதல்**
**10.40 மணி வரை**

**வாழ்த்துரை**
கலாநிதி வாழ்நாள் பேராசிரியர்
பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஸ்ண ஐயர்
பிரம்மஸ்ரீ ச.பத்மநாமசர்மா B.A
(ஸ்ரீ முன்னீஸ்வரம் தேவஸ்தானம்)
திருமதி ஹேமா சண்முகசர்மா
(கல்வித் திணைக்கள அதிகாரி)

**அருளுரை**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய
சுவாமிகள் (நல்லை ஆதீனம்)
ஜாக்ரத சைதன்யா சுவாமிகள்
(சின்மயா மிஷன்)

### பிரதிஷ்டா குருவின் ஆசியுரை



சைவமும் தமிழும் தழைத் தோங்க தேவாரத் திருமுறைகளை பக்தியுடன் அருளிப்பாடி சமயம் வளர்த்த நாயன் மார்களால் பாடல் பெற்ற அருட் தலங் கள் மற்றும் தீர்த்த. தல. மூர் த்தி விசேடங்கள் பொருந்தி அருள் செரி யும் அற்புத ஆலயங்கள் பல அமை யப் பெற்ற அழகிய இலங்கா புரியின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் அருள் நிறைந்த சித்தர்கள் வாழ்ந்த புனித பூமியாம் சித்தன்கேணியில் பெரியா வளவுப் பகுதி யில் கோயில் கொண்டருளியிலிருந்து அடியார்களிற்கு அருளை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ மகா கணபதிப் பெருமானிற்கு பஞ்சதள ராஜகோ புரம். பஞ்சமுக விநாயகப் பெருமானிற்கு அழகிய வேலைப் பாடு களுடன் கூடிய மண்டபம். ஆறுமுகப்பெரு மானிற்கு எழில்கொஞ்சும் மண்டபம். லக்ஷ்மிதேவிக்கு தனிச் சன்னிதானம் சந்தான கோபாலப் பெருமானிற்கு வர்ண மயமான மண்டபம் மற்றும் மூலமூர்த்திக்கு எழில் கொஞ்சும் கலைநயமிக்க உயிரோட்டமான பதுமைகளுடன் கூடிய புதிய விமானம். கம்பீரமான வில்லு மண்டபம் மற்றும் இன்னும் பல புதிய மண்டபங்களுடன் திருத்த வேலைகளும் செய்யப் பெற்று புதுப்பொலிவுடன் அழகாக அமைக்கப்பட்டு புனராவர்த்தன அக்ஷ்டபத்தன சமர்ப்பண ரகோன்ன பஞ்சாக்ஷத் குண்டபக்ஷ மஹாயாக. மஹா பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் உத்த மோத்தமமான முறையில் இதற்குமுன் எங்குமே நடை பெறாதவகையில் இலங்கையில் முதன்முதலாக நிகழ்த்து வதற்கு அண்டம் கடந்த பொருளாம் எம் முதற்தெய்வம் விநாயகப் பெருமா னின் பேரருள் கிட்டியுள்ளமை குறி த்து மிகுந்த மனநிறை வையும் பேரானந்தத்தையும் அள வில்லா அருளையும் அனுபவித்து மெய்சிலிர்க்கின்றோம்.

மிக அரிதான முறையில் இறை அற்புதமாக நடைபெறும் இந்த மகாபெரும்சாந்தி விழாவைக் காணும் இந்த சித் தன்கேணியூர் மக்கள் பேரருள் பெருவாறாகப் பொழி யப் பெற்றவர்கள் என்றே பெருமையுடன் கூறவேண்டும். ஏனெனில் இற்றைக்கு 59 வருடங்களிற்கு முன் இதே கோ யிலிலியே மிக மிக சிறப்பாக இலங்கையில் முதன்முத லாக 33 குண்டங்கள் அமைத்து பிரதிஷ்டா ரத்தினம் வை. மு. குமாரசாமிக் குருக்கள் அவர்களால் நிகழ்த்தப்பெற்று அதே கோயிலிலேயே மேலும் சிறப்புடன் 49பட்ச குண்ட மஹா கும்பாபிஷேகம் நடைபெற கண்ணாரக் காணக் கிடைக்கும் அருளை மெய்சிலிர்த்து எண்ணிலா உவகை அடைகின்றோம். இந்த மஹாகும்பாபிஷேக தரிசனத்தின் மகிமையைத்தான் எம் தேவார முதலிகளில் ஒருவராகிய ஞானசம்பந்தப் பெருமான் பூம்பாவைக்கு உயிர்கொடுத்து "பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்" என்று பாடி யருளிருக்கின்றார்.

பேறுகளிலேயே பெரும்பேறான கும்பாபிஷேகப் பெரு விழாக்காணும் பேறினையும் இத்தெய்வ கைங்கரியத் தில் பங்குபற்றும் பேரருளையும் பெற்றவர்களாகும் இச் சித்தன்கேணி வாழ் மக்களும் மற்றும் உலகெங்கும் பரந்து வாழும் கணபதிப் பெருமான் அடியார்களும் எல்லா வளமும் பெற்று சகல சிறப்புகளும் அமையப் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்ய இறைபதம் பணிந்து வணங்கி ஆசி கூறி அமைகின்றோம்.

சுபம்.

### ஆதீனமுதல்வரின் அருளாசிச் செய்தி



சித்தங்கேணி பெரிய வளவு அருள் மிகு மஹா கணபதி பிள்ளை யாருக்கு புனராவர்த்தன அஷ்ட பந்தன சம்ர்ப்பண ஏகோன்ன பஞ்சாசத் (49) குண்ட பக்ஷ மஹாயாக மஹா பிரதிஷ்டா மஹா கும்பாபிஷே கம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைக்கின்றோம். எல்லா- ாம் வல்ல வேழ முகப்பெருமான் வேண்டுவார் வேண்டும் வரமெலாம் தந்து வாழ்விக்கும் முதற் தெய்வம். எம் பெருமானு- க்கு இன்றைய நல்ல நாளில் கும்பாபிஷேகம் நிகழ்ந்து எல்லே- ாருக்கும் நல்ல வாழ்வு அமைய அருளாசிகள் நல்கி உள மாரப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**" என்றும் வேண்டும் இன்ப அன்பு "**

**ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
**- நல்லை ஆதீனம்**

### குருக்களின் ஆசியுரை

அண்ட சராசரங்களை தன்னகத்தே அடக்கி அவனி முழுவ தும் அறிவு ஞான காரிய வெற்றிகளை வழங்கி ஞான வடிவா கி பிரணவப் பொருளாகி ஓங்காரமாகி மூலாதாரத்து மூண்டெ டழு கனலைக் காலால் அழுத்தி கருத்தறிவித்தே தன் அருளை உலகுக்கு உணர்த்தி சித்தரை உருவாக்கும் சித்தன்கேணி மஹா கணபதிப் பிள்ளையாருக்கு பிரம் மாண்டமான முறை யில் நடைபெற இருக்கும் நாற்பத்தொன்பது குண்ட மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவடைய சகல சித்தர்களும் யோ கிகளும் ஞானிகளும் ரிஷிகளும் தேவர்களும் வாழ்த்தி ஊரும் உலகும் மக்களும் மன்னரும் வேதியரும் வாழ எல்லாம் வல்ல ஈஸ்வரனை வேண்டி வாழ்த்தி அமைக்கின்றோம்.

**சிவஸ்ரீ உருத்திர தேவானந்தக்குருக்கள்**

### மகா கணபதிப் பிள்ளையாரின் குடநீராட்டு மாற்றத்தை தரவேண்டும்



ஈழமணித்திருநாட்டில் முதல் முறையாக சித் தன் கேணி பெரியவளவு ஸ்ரீ மஹா கணப திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் புனரா வர்த் தன அஷ்ட பந்தன சமர்ப்பண ஏகோன்ன பஞ் சாசத் (49) குண்ட பக்ஷ மஹாபாக. மஹ பிர திஷ்ட மஹாகும்பிஷேக பெரு விழா மிகச் சிறப்பாக நடைபெறு கிறது கும்பாபி ஷேகத்தை செய்தல் செய்வித்தல் துணைபுரிதல் கண்டு களித்தல் ஆகியன மிக்க சிவ புண்ணியத்தை நமக்கு ஈட்டித் தரும் ஓங்காரமா கிய பிரணவ மந்திரம் கலைகள் எல்லா வற்றிற்கும் முதலாயி ருந்தல் போல அம் மந்திரம் பொருளாய் விளங்கும் விநாயகப் பெருமானுக்கு மகத்துவ சிறப்புக்களுடன் குடவோட்டு விழா அற்புதமாக நடைபெறுகின்றது. முதல்வ னின் கும்பாபி ஷேகத்துடன் ஈழத்தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வும் வந்து சேர வேண்டுமென பிரார்த்திப் போமாக

**வர்ணனைக் கலாநிதி மதுரகவி**
**காரை எம் பி. அருளானந்தன்**
**(பணிப்பாளர், சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகம்.**

மகா கணபதி பிள்ளையார் கும்பாபிஷேகம் **ஓம் T.V யில் நேரடி ஒளிப்பரப்பு மகா கணபதிப்பிள்ளையார் மகா கும்பாபிஷே கப் பெருவிழா நிகழ்வுகள் ஓம் T.V யில் நேரலையாக ஒளிப்பரப்பாகவுள்ளது இந்த நேரலை நேர்முக தெய்வீக வர்ணனையை ஓம் T.V யின் நேர்முக வர்ணனைக் கலா நிதி மதுரகவி காரை எம்.பி. அருளா னந்தன் நிகழ்த்த வுள்ளார்.**

### அருளாசிச் செய்தி

இந்த அண்டபேரண்டத்தின் சுழற்சியில் நடக்கும் செயற் பாடுகளில் இறைவன்பால் பக்தியை வளர்த்து சைவ நெறி மேலோங்க இறைதொண்டு செய்து தான் பிறந்த வீட்டை. ஊரை. நாட்டை ஏன் இந்த உலகத்து ஜீவராசி களை அனைத்தையும் தன்னுயிராக நேசித்து எல்லோர் நன்மைக்காகவும் உலக ஷேமத்துக்காகவும் யாகங்கள். ஹோமங்கள் செய்யும் பிராம்மனோத்தம குலத்தில் உதி த்த மிகவும் சிறப்புக்குரிய தன் பரந்த மனப்பான்மை யாலும். நற்குணங்களாலும் மெச்சத்தக்க பேரறிவாலும் இல்லையெனாது அள்ளி வழங்கும் அளவற்ற கொ டைத் திறத்தாலும் அமரத்துவம் அடைந்து 43 வருடங் கள் ஆனபின்பும் இவர் போல யார் என்று உற்றார். உறவினர் மட்டுமன்றி அறிந்தவர். தெரிந்தவர் முதல் அவர்கூடப் பழகியோர் அனைவரும் பெருமையோடு இன்று வரையும் பெயர் சொல்லிப் பெருமிதம் கொள்ளும் எம் குருக்களய்யா என அன்பாக எல்லோராலும் அழைக் கப்படும் முன்னாள் நயினை நாகபூஷணி அம்மன் பிரத மகுரு பிரதிஷ்டாரத்தினம் சிவஸ்ரீ வெ.மு.குமாரசாமிக் குருக்கள் அவர்களின் மூத்த பேரன் முத்தமிழ் வித் தகர் லண்டன் வேல்ஸ் கற்பகவிநாயகர் ஸ்தாபகர் சிவஸ்ரீ லம்போதர குமாரசாமிக் குருக்கள் அவர்கள் பாட்ட னார் வழியில் பேரனாகத் தனது இளைய சகோதரர்களின் வழிகாட்டியாக இருந்து மிகவும் சிறப்பான முறையில் இந்த மஹா கும்பாபிஷேகத்தை சர்வபோதகாசிரியராக அனுபவத்திலும் அறிவிலும் உயர்ந்த பெரியோருடன் இணைந்து வழிநடத்திச் சிறப்பித்தமைக்காக சிவநெறிச் சுடர் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கின்றோம்.

**சிவஸ்ரீ நா.விக்னேஸ்வரக் குருக்கள்,**
**ஸ்ரீ கணபதி தேவஸ்தானம்.**

### நல்லாசிகள்

பல்வேறு விதமான தனிச்சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட அழகிய இலங்கைத் திருநாட்டில் அன்று 1958 ஆம் ஆண்டு 33 குண்டங்கள் அமைத்து முதன் முத லாக ஒரு வரலாற்றின் சிறப்பம்சமான மஹாகும்பாபி ஷேகம் நடைபெற்றது. அதேபோல் இன்று அதே கோயி லில் 49 குண்டங்கள் அமைக்கப்பட்டு இரண்டாவது வர லாற்றுப் பக்திப் பதிவும் அதே கோயிலிலே நடைபெறுவது ஆண்டவனின் மேலான கருணையும். பக்தர்களின் தம்மை மறந்த பக்தியின் வெளிப்பாடுமே! இத்தகைய பக் தி மான்களும். சைவநெறி வளர்க்கும் சீலர்களும் கல்வி மான்களும் நிறைந்த பல்வேறு சிறப்புக்கள் பொருந்திய சித் தங்கேணி என்னும் ஊரில் கோயில் கொண்டெழுந் தருளி அன்பர்களுக்கு அளவில்லா அருளைச் சுரந்து காக்கும் தெய்வமாம் எம் குலதெய்வம் மகா கணபதிப் பிள்ளையா ருக்கு அழகிய ம்ண்டபங்கள் மற்றும் திரு த்த வேலைகள் சிறப்புற நடைபெற்று வரலாற்றுச் சிறப்புமி க்க ஒரு கும்பாபி ஷேகத்தை நடத்தி வைக்கும் பரிபாலன சபையும் வேதியர் குழாமும். பக்தகோடிகளும் எல்லா உயிர்களும் இன்புற் றிருக்க எல்லாம் வல்ல கண பதிப் பெருமான் அருள்வேண்டி பிரார்த்தித்து ஆசி கூறி அமை கின்றோம்.

**சிவஸ்ரீ சண்முகப் பிரதக் குருக்கள்,**
**லிவர்பூல் - மாரியம்மன் கோயில் பிரதம குரு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டாட்சிக்கு மக்கள் ஆணை வழங்கவில்லை

## நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை நீக்கவே வாக்களித்தனர் என்கிறார் மகிந்த



கொழும்பு, ஜூலை 4
வடக்குகிழக்குக்குக் கூட்டாட்சி (சமஸ்டி) தீர்வை வழங்குவதற்காக இந்த நாட்டு மக்கள் இந்த அரசுக்கு ஆணை வழங்கவில்லை. நிறைவேற்று அதிகார மிக்க அரச தலைவர் முறைமையை நீக்குவதற்கு மாத்திரமே ஆணை வழங்கினர் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
மொனராகலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இரண்டு வருடங்களில் 420 மாணவர்கள் இந்த அரசால் தாக்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் அவர்களது உரிமையைக் கேட்டுப் போராடியமைக்குக் கிடைத்த பரிசுதான் இது. இந்த வழிமுறையின் ஊடாகத்தான் கல்விப் பிரச்சினைக்கு அரசு தீர்வு வழங்குகிறது. நாட்டை இப்படி நிர்வகிக்க முடியாது.
எனது ஆட்சியில் சத்தம் போட்ட அரச சார்பற்ற நிறுவனத்தினர் இப்போது அமைதியாக இருக்கின்றனர். வாயே திறப்பதில்லை. ரணிலின் கொள்கை இதுதான். கல்வியைச் சீரழிக்கின்றார்கள்.
அரச சொத்துக்களை விற்கின்றார்கள். எமது கொள்கை இதுவல்ல. அரச சொத்துக்களைப் பாதுகாப்பது தான் எமது கொள்கை.
மக்கள் ஆணை வழங்கியது அரச சொத்துக்களை விற்பதற்கோ வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு கூட்டாச்சியைத் தீர்வைக் கொண்டு வருவதற்கோ அல்ல. நிறைவேற்று அதிகார மிக்க அரச தலைவர் முறைமையை நீக்குவதற்கு மாத்திரமே ஆணை வழங்கினர்.
மக்களின் ஆணைக்கு எதிராகச் சென்று கூட்டாட்சித் தீர்வைக் கொடுக்கும் அதிகாரம் இந்த அரசுக்கு இல்லவே இல்லை.
பெயரோடு வந்தாலும் பெயர் இல்லாமல் வந்தாலும் புதிதாக வரப் போகின்ற அரசியல் தீர்வு கூட்டாட்சிதான் என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார். ஆகவே ஒற்றை ஆட்சி என்று கூறினாலும் கூட்டாட்சிதான் தீர்வாக வரப் போகின்றது.
இன்று தேர்தல் இல்லை. தோல்விப் பயம் காரணமாக இந்த அரசு தேர்தலை நடத்தாமல் ஒத்திப்போட்டுக்கொண்டு வருகின்றது. தேர்தலை நடத்தும்வரை புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்குவதில்லை என்று நாம் தீர்மானித்துள்ளோம் - என்றார். (த-ய-3)

## நிருபம் சென் சாவு



கொழும்பு, ஜூலை 4
இந்தியாவின் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரும், இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவருமான நிருபம் சென் புதுடில்லியில் நேற்றுமுன்தினம் காலமானார்.
பல்கேரியா, நோர்வே ஆகிய நாடுகளில் இந்தியாவின் தூதுவராகப் பணியாற்றிய நிருபம் சென், 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டு வரையான காலத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் பணியாற்றியிருந்தார்.
அதையடுத்து, 2004ஆம் ஆண்டு தொடக்கம், 2009ஆம் ஆண்டு வரை ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக அவர் பணியாற்றினார். ஓய்வுபெற்ற பின்னர், ஐ.நா பொதுச்சபைத் தலைவரின் சிறப்பு மூத்த ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.
இலங்கையில் நிருபம் சென் தூதுவராகப் பணியாற்றிய காலகட்டத்திலேயே, விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் இடையில் போர் நிறுத்தம் செய்து கொள்ளப்பட்டு, அமைதிப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. மரணமாகும் போது, நிருபம் சென்னுக்கு வயது 70. (த)

## உடைந்துவிழும் நிலையில் அக்கரப்பத்தனைப் பாலம்

நுவரெலியா, ஜூலை04
நுவரெலயா அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உட்லெக் தோட்டத்தில் 230 இற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த எண்ணூறுக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.
இந்தத் தோட்டத்திற்குச் செல்வதாக இருந்தால் ஆகுரோயா ஆற்றைக் கடந்தே செல்லவேண்டும். ஆற்றைக் கடந்து செல்வதற்கு 75 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட மரப்பாலத்தையே தோட்ட மக்கள் பயன்ப்படுத்தி வந்தனர். மழைக்காலங்களில் ஆற்றுவெள்ளம்பெருக்கெடுக்கும்போது பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிடும். இதன்போது இவர்கள் போக்குவரத்து செய்யமுடியாமல் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.
இந்த மக்களின் நலன்கருதி 30 வருடங்களுக்கு முன்பு இரும்புப் பாலம் அமைத்து கொடுக்கப்பட்டது. மிகவும் சிறிய அளவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பாலமும் மழை காலங்களில் வெள்ளத்தில் மூழ்கிவிடும்.
தற்போது இந்தப் பாலம் சேதமடைந்து எந்த நேரத்திலும் உடைந்து விழக்கூடிய நிலையில் உள்ளது. நாளாந்தம் அச்சத்துடன் பயணம் செய்வதாக அங்குள்ள மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இந்தத் தோட்ட மக்கள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துக்கொள்வதற்காக மன்றாசி அல்லது ஹோல்புறூக் நகரங்களுக்கு செல்லவேண்டும்.
\பாலம் உடைந்து காணப்படுவதால் சுமார் 06 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பாதையின் ஊடாகப் பயணிக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.
தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் பாலத்தை உடனடியாக செய்து தருவோம் என வாக்குறுதி வழங்கியபோதிலும், இப்போது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மறந்து செயல்படுகின்றனர் எனக் குற்றம் சுமத்துகின்றனர். (த-ய-43)

## நீர் வெளியேற்றும் இயந்திரங்கள் இலங்கைக்கு வழங்கியது இந்தியா

கொழும்பு, ஜூலை 4
பெருமளவில் நீரை வெளியேற்றக்கூடிய இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களை இந்தியா இடர்முகாமைத்துவ அமைச்சுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.
இந்தியாவைச் சேர்ந்த கிர்லோஸ்கார் என்ற நிறுவனம் இந்த நீர் இறைக்கும் இயந்திரங்களை அமைச்சர் அனுர பிரிய தர்ஷன யாப்பாவிடம் கையளித்துள்ளது.
அண்மையில் நாடு எதிர்கொண்ட வெள்ள நிலைமையைத் தொடர்ந்து இந்திய அரசு இவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளது.
இவற்றின் பெறுமதி 7 மில்லியன் ரூபா. ஒரு இயந்திரத்தின் மூலம் ஒரு வினாடியில் 50 லீற்றர் நீரை வெளியேற்ற முடியும். இடர் நிலையின்போது இவற்றைக் குறிப்பிட்ட இடங்களுக்கு இலகுவாக எடுத்துச் செல்லக்கூடியதாக இவை அமைந்துள்ளன. (த)

## அதிகாரப் பகிர்வென்பது நாட்டைப் பிரிப்பதல்ல

### *அமைச்சர் அமரவீர கூறுகிறார்*



கொழும்பு, ஜூலை 4
அதிகாரப் பகிர்வுக்கு நாட்டைப் பிரித்தல் என்று பிழையான அர்த்தம் கொடுக்கக்கூடாது. நாட்டு மக்கள் அனைவரினதும் ஒட்டுமொத்த பிரச்சினைகளைத் தீர்க்கும் ஏற்பாடுதான் அதிகாரப் பகிர்வு. இந்த அதிகாரப் பகிர்வை வழங்கக்கூடிய அரசமைப்புத் திருத்தத்தை மிகவிரைவாகக் கொண்டு வருவதற்கே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
அம்பாந்தோட்டை சூரியவெவவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக நாம் கொண்டுவரப்போகும் அரசமைப்புத் திருத்தம் நாட்டை இரண்டாகப் பிரிக்கப் போகின்றது என்று எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்து வருகின்றனர். இது அவர்களின் அரசியல் இலாபம் தேடும் நடவடிக்கைகளில் ஒன்றாகும். உண்மை அதுவல்ல. நாட்டை ஒன்றுபடுத்தி அனைத்து மக்களின் பிரச்சினைகளையும் தீர்ப்பதுதான் அரசமைப்புத் திருத்தத்தின் நோக்கமாகும். இது ஒருபோதும் நாட்டைப் பிரிக்காது.
இதைக் கொண்டு வருவதில் துரிதமாகச் செயற்படுகின்றோம். எதிர்வரும் நாள்களில் அடுத்தடுத்து அதிகமான சந்திப்புக்களை நடத்தி மிகவேகமாகக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதிகாரப் பகிர்வைக் கொண்டுவருவது மாத்திரன் அரசமைப்புத் திருத்தத்தின் நோக்கமல்ல. அதிகாரப் பகிர்வும் புதிய தேர்தல் முறைமையும் முக்கியமாக இதற்குள் உள்ளடக்கப்படும்.
புதிய அரசமைப்பு கொண்டு வரப்படமாட்டாது. இருக்கின்ற அரசமைப்புக்கான திருத்தங்களே கொண்டு வரப்படும். தற்போதைய அரசமைப்புத் திருத்தப்பட்டால் போதும். புதிய அரசமைப்புத் தேவை இல்லை என்ற நிலைப்பாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளது.
அடுத்தாதாக தேர்தலை ஒத்திப்போடுகின்றமை தொடர்பில் எம்மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது. நாம் இந்த வருடத்தின் முதலாவது தேர்தலாக உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்தவே முயற்சி செய்கிறோம். இது தொடர்பில் எம்மிடம் தெளிவான திட்டம் ஒன்று உள்ளது. அந்தத் திட்டத்தின்படி தேர்தல் நடத்தப்படும். தோல்வி பயம் எமக்கில்லை. நாம் பலமான அரசாக இருக்கின்றோம். மக்கள் எம்முடன் இருக்கின்றார்கள். வெற்றி எமக்கே. 2020வரை இந்த அரசை அசைக்க முடியாது. அதற்கு முன் வருகின்ற தேர்தல்கள் மூலமாகவும் அரசை அசைக்க முடியாது - என்றார். (த-ய-3)

## மகிந்தவை இணைத்தாலே தேர்தலில் வெற்றி கிட்டும்

### கூறுகின்றார் பிரதியமைச்சர் அருந்திக்க



கொழும்பு, ஜூலை 4
எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற வேண்டுமென்றால் மஹிந்தவை மைத்திரி கட்சிக்குள் இணைத்தே ஆகவேண்டும் என்று பிரதியமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மஹிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச தலைவர் மைத்திரியுடன் பேசுகின்றனர். அமைச்சர் மஹிந்த அமரவீர உட்பட பல அமைச்சர்கள் மகிந்தவுடன் பேசுகின்றனர். இதில் இரகசியம் ஒன்றுமில்லை. ஆனால் நான் மட்டும் மகிந்தவுடன் இரகசியமாகத் தொடர்பு வைத்திருக்கின்றேன் என்று கூறுகின்றனர். நான் ஜப்பானில் வைத்து முன்னாள் அரச தலைவர் மகிந்தவைச் சந்தித்துப் பேசினேன். நாடு திரும்பும்போது அவர் வந்த வானூர்தியில் தான் நானும் வந்தேன்.
ஆனால் இதையெல்லாம் வைத்துக்கொண்டு நான் மகிந்தவுடன் இணைந்து இந்த அரசுக்கு எதிராகச் சதி செய்கின்றேன் என்று கூறப்படும் குற்றச்சாட்டை ஏற்க முடியாது. அவருடன் பேசினால் நான் அரசுக்கு எதிராகச் சதி செய்கின்றேன் என்று அர்த்தமா?
எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற வேண்டுமென்றால் மகிந்தவை அரசுடன் இணைத்தே ஆக வேண்டும். ஆகக் குறைந்தது மகிந்த அணியும் மைத்திரி அணியும் இணைந்தாவது தேர்தலில் போட்டியிட வேண்டும். நாம் பிரிந்து நின்று போட்டியிட்டால் வெற்றி நிச்சயம் ஐக்கிய தேசிய கட்சிக்குத்தான். கிராம மட்டங்களில் மஹிந்தவுக்கு கணிசமான ஆதரவு உண்டு. அதேபோல் அரச தலைவர் மைத்திரிக்கும் உண்டு. இந்த இருவரின் ஆதரவை ஒன்று சேர்த்தால்தான் முழுமையான வெற்றியைப் பெறமுடியும்.
நாம் எமது தனிப்பட்ட நலன்கள்மீது அக்கறைகொள்ளாது கட்சியின் நலன்கள் மீதே அக்கறைகொள்கிறோம். கட்சியின் நலன் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் கட்சிக்குள் ஒற்றுமை அவசியம். அந்த ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கே நாம் பாடுபடுகின்றோம் - என்றார். (த-ய-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜின் பிங்கின் உருவப்படத்தை தனது கால்களால் மிதிக்கிறார் சீன எதிர்ப்புப் பேரணியில் பங்கெடுத்த ஆர்பாட்டக் காரர்களில் ஒருவர்.

## சீன எதிர்ப்பாளர்களை எச்சரித்தார் ஜின் பிங்

பீஜிங், ஜூலை 4
சீனாவுக்கு எதிராகப் போராடும் ஹொங்கொங் மக்கள் எல்லைக் கோட்டைத் தாண்டினால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று சீன அதிபர் ஜி ஜின் பிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரிட்டனின் கட்டுப்பாட்டில் இருந்த ஹொங்கொங் கடந்த 1997 ஜூலை முதலாம் திகதி சீனாவிடம் ஒப் படைக்கப்பட்டது. சீனாவின் ஆட்சிக்கு எதிராக ஹொங்கொங் மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அங்கு கடந்த 2014ஆம் ஆண்டுமுதல்போராட்டங்கள்தீவிரமடைந்துள்ளன. இந்த நிலையில் ஆட்சி, அதிகாரம் சீனாவுக்கு கைமாறிய 20ஆவது ஆண்டு தினம் ஹொங்கொங்கில் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் ஹொங்கொங்கின் புதிய தலைமை நிர்வாகியாக கேரி லாம் பொறுப்பேற்றுக் கொண்டார். இதில் சீன அதிபர் ஜி ஜின் பிங்கும் பங்கேற்றார். இந்த விழாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஹொங்கொங் முழுவதும் ஏராளமானோர் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இதை சுட்டிக் காட்டி சீன அதிபர் ஜி ஜின் பிங் விழாவில் பேசினார். அவர் உரையாற்றுகையில், "சீனாவின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சிவப்பு எல்லைக் கோட்டை தாண்டும் போராட்டக்காரர்கள் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். சீனாவின் ஒருமைப்பாடு, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதை ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம்"- என்று எச்சரிக்கை விடுத்தார். (ம)

# ஊடகங்களுக்கு எ
# டொனால்ட் ட்ரம்ப் கெ

வொஷிங்டன், ஜூலை 4
அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க மற்றும் பன்னாட்டு ஊடகங்களுக்கு எதிராக கடும் போக்கைக் கடைப்பிடித்து வருகிறார். ஊடகங்களின் துணை அல்லாமல் சமூக வலைத்தளங்களின் மூலம் மக்களுடன் தான் தொடர்புகொள்ள முடியும் என்பது ட்ரம்பின் வாதமாக அமைந்துள்ளது.

அமெரிக்காவின் சி.என்.என். செய்தி நிறுவனம் அதிபரின் உதவியாளர் ஒருவர் அமெரிக்க காங்கிரசால் விசாரிக்கப்பட்டு வருகிறார் என்று குற்றம்சாட்டி வெளியிட்ட ஒரு கட்டுரையை திரும்பப் பெற்றுக்கொண்டபின், அந்த நிறுவனத்தின் மீதான தாக்குதலை டிரம்ப் அதிகரித்துள்ளார். "கடைசியாக சி.என்.என். போலி செய்தி வெளியிடும் நிறுவனம் என்பதும் அவர்களுடையது குப்பை இதழியல் என்பதும் வெளிப்பட்டிருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது," என்று ட்ரம்ப் அண்மையில் தெரிவித்திருந்தார்.

"போலியான மற்றும் பொய்ச் செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் நான் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தக் கூடாதென்று, குடியரசு கட்சியினரையும் பிறரையும் நம்ப வைக்க கடுமையாக உழைத்து வருகின்றன. நான் கடந்த வருடம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் செவ்விகள், பேச்சுகள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலமாகவே வெற்றி பெற்றேன் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தப் போலி ஊடகங்கள் எம்மை நிசப்தமாக்க முயல்கின்றன. ஆனால் நாம் அவற்றை அதை செய்ய




விடமாட்டோம். போலி ஊடகங்கள் நாம் வெள்ளை மாளிகையை அடைவதிலிருந்து நம்மை தடுக்க முயன்றன. ஆனால் இப்போது நான்தான் அதிபர், அவர்களல்ல"

என்று வொஷிங்
பேரணி ஒன்றில் ட்

## ஹெலி விபத்தில் 8 பேர் உயிரிழப்பு

### இந்தோனேசியாவில் துயரம்

ஜகர்த்தா, ஜூன் 4
இந்தோனேசியாவில் உலங்குவானூர்தி மலையில் மோதி நொறுங்கியதில் 8 பேர் உயிரிழந்தனர். விபத்து குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தோனேசியாவில் மத்திய ஜாவா மாகாணத்தில் தமாக்கங்க் மாவட்டத்தில் உள்ள எரிமலை நேற்று முன்தினம் திடீரென வெடித்து சிதறியது. அதில் 10 பேர் காயம் அடைந்தனர். எரிமலை வெடித்த பகுதியில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் உலங்குவானூர்தி ஈடுபடுத்தப்பட்டது. உலங்கு வானூர்தியும் விபத்துக்கு உள்ளானதில் அதிலிருந்த 8 பேர் உயிரிழந்தனர். (ம)



## பஸ் விபத்து 14 பேர் சாவு

### ரஷ்யாவில் சம்பவம்

மொஸ்கோ, ஜூன் 4
ரஷ்யாவின் மத்திய பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் 14பேர் உயிரிழந்தனர்.

நேரெதிர் திசையில் வந்துகொண்டிருந்த லொறி மற்றும் பேருந்து என்பனவே அவ்வாறு விபத்துக்கு உள்ளாகின. மோதிய வேகத்தில் பேருந்து தீப்பிடித்து எரிந்தது. 14 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சுமார் 20 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடம் என்றும் அறியவருகிறது. (ம)

## ஹிட்லரின்

பெர்லின், ஜூலை 4
ஜேர்மனியின் முன்னா[illegible]ர்வாதிகாரி அடல்ப் ஹிட்லரின் 5 ஓவியங்கள் பிரிட்டனில் ஏலத்துக்கு வருகின்றன.

எம் அனைவருக்கும் ஹிட்லர் என்றால் அவர் ஒரு சர்வாதிகாரி என்ற நினைவுதான் வரும். ஆனால் அவர் சிறந்த ஓவியர் என்பது பலருக்கும் தெரியாத தகவல். அவர் தனது வாழ்நாளில் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் ஓவியங்களை வரைந்





போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 13 பேரை உள்ளடக்கிய முக்கிய கும்பலொன்று தென்னமரிக்க நாடான எல் சவடோரில் பிடிபட்டுள்ளது. தென்னமரிக்க நாடுகளில் போதைப் பொருள் கலாசாரம் தற்போது மிகையாக அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் பல்வேறு கோணங்களில் இந்தக் கும்பலிடம் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்சீனக் கடல் பகுதி

பீஜிங், ஜூலை 4
தென் சீனக் கடலில் சர்ச்சைக்குரிய தீவுப் பகுதிக்கு அருகே அமெரிக்காவின் போர்க்கப்பல் பயணம் செய்ததற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தென்சீன கடற்பகுதியில் உள்ள தீவு கூட்டங்களுக்கு பல்வேறு நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன. பராசெல் தீவு கூட்டங்களில் ஒன்றான சிறிய பரப்பளவு கொண்ட டிரைடன் தீவை சீனா ஆக்கிரமித்துள்ளது. இந்தத் தீவு தங்களுக்கு சொந்தமென தைவான் மற்றும் வியட்நாம் நாடுகளும் கூறி வருகின்றன. தென்[illegible]

நிலையில் [illegible]
உள்ளிட்ட [illegible]
இதனிடை[illegible]
தீவை நெ[illegible]
தொலைவி[illegible]
பகுதிகளில் [illegible]
வதனை [illegible]
அமெரிக்கா

# ...திராக ...காதிப்பு



...வாஷிங்டனில் அண்மையில் நடைபெற்ற ...ன்றில் ட்ரம்ப் உரையாற்றினார். (ம)

## கட்டாருக்கு மீண்டும் கெடு

கட்டாருக்கு வித்தித்துள்ள நிபந்தனை அந்த நாடு ஏற்பதற்கான கால அவகாசத்தை சவூதியும் அதன் நட்பு நாடுகளும் மீண்டும் ஒருதடவை வழங்கவுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தீவிரவாதத்துக்கு கட்டார் ஆதரவு அளிப்பதாக குற்றஞ்சாட்டி அந்த நாட்டுடனான தூதரக உறவை சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரைன், எகிப்து ஆகிய நாடுகள் அண்மையில் துண்டித்தன. ஏற்கெனவே கட்டாருடனான சாலை, கடல், வான் வழிப் போக்குவரத்தை சவுதி அரேபியாவும் அதன் நட்பு நாடுகளும் முற்றிலுமாக தடை செய்துள்ளன. சில பொருளாதார தடைகளையும் அந்நாட்டின் மீது அரபு நாடுகள் விதித்துள்ளன.

இந்த நிலையில், கட்டாருக்கு 13 நிபந்தனைகளை விதித்துள்ளதாகவும்அவற்றைஒருவாரத்துக்குள்அந்த நாடு நிறைவேற்றத் தவறினால் புதிய பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்று அரபு நாடுகள் கடந்த சில நாட்களுக்கு முன் தெரிவித்தன.

இதற்கிடையில் நிபந்தனைகளை கட்டார் ஏற்றுக் கொள்வதற்கான கால அவகாசத்தை நீடிக்க வேண்டும் என்ற குவைத்தின் வேண்டுகோளை அரபு நாடுகள் ஏற்று மீண்டும் கெடு விதித்தன. இது நேற்றுடன் நிறைவுக்கு வந்தது. தற்போது மூன்றாவது அவகாசத்தை வழங்க சவூதி முன்வந்துள்ளது என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## வெடித்து சிதறியது விண்கலம்

பீஜிங், ஜூலை 4

ஷிஜியான்18 என்னும் செயற்கைக் கோளுடன் 'லாங் மார்ச்5 ஒய் 2' என்ற நவீன தொழில் நுட்பம் கொண்ட சீன விண்கலம் விண்ணில் பாய்ந்த சிறிது நேரத்திலேயே வெடித்துச் சிதறியது.

அதிக எடை கொண்ட அதி நவீன ரொக்கெட்டுகளை விண்ணில் செலுத்துவதற்கான சோதனைகளை சீனா அவ்வப்போது நடத்தி வருகிறது. அந்த நாட்டின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நேற்றுமுன்தினம் காலை ஷிஜியான்18 என்னும் செயற்கை கோளுடன் 'லாங் மார்ச்5 ஒய் 2' என்ற நவீன தொழில் நுட்பம் கொண்ட விண்கலத்தை ஹைனன் மாகாணத்தில் உள்ள வென்சாங் என்னும் இடத்தில் இருந்து விண்ணில் செலுத்தியது. 7.5 தொன் எடை கொண்ட இந்த விண்கலம் விண்ணில் பாய்ந்த சிறிது நேரத்திலேயே வெடித்துச் சிதறியது.

ரொக்கெட் வெடித்ததற்கு அதன் இயல்பு நிலையில் மாற்றம் ஏற்பட்டதுதான் காரணம் என்று சீன விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகள் தெரிவித்தனர். லாங் மார்ச்5 ஒய்2 ராக்கெட், 25 தொன் எடையை சுமந்து செல்லக் கூடிய தன்மையுடன் கட்டமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வியாழனில் மேகக்கூட்டம் ஆதாரப்படுத்தியது நாசா

வொஷிங்டன், ஜூலை 4


சூரிய மண்டலத்தில் உள்ள வியாழன் கோளின் (ஜூபிடர்) வளிமண்டலத்தில் ஒளி மற்றும் இருள் மேகங்கள் சூழ்ந்து இருக்கும் அரிய ஒளிப்படத்தை நாசாவின் ஜெமினி தொலைநோக்கி எடுத்துள்ளது.

சூரிய மண்டலத்தில் 5ஆவது கோளாக உள்ள வியாழன் மற்ற கோள்களை விட மிகவும் பெரியது. இந்தக் கோளை ஆய்வு செய்வதற்காக நாசாவால் அனுப்பப்பட்டுள்ள ஜூனோ விண்கலம் அரிய ஒளிப்படங்களை எடுத்து தொடர்ந்து அனுப்பி வருகிறது.

இதுவரை வெளியான படங்களில் வியாழனில் பெரிய அளவிலான சிவப்பு நிறப் (வெப்பம் அதிகமாக உள்ள) பகுதிகள் நிறைந்த படங்களே அதிகமாக இருந்தன. ஆனால் தற்போது பூமியில் உள்ள ஜெமினி தொலைநோக்கி எடுத்துள்ள படங்களில் குளிர் நிறைந்த பகுதிகள் இருப்பதும் தெரியவந்துள்ளது.

தொலைநோக்கி வைக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் ஹவாய் தீவில் உள்ள வானிலை ஆய்வாளர். ஆர்டான் இதுபற்றி வர்ணிக்கும்போது, "வியாழனின் வளிமண்டலத்தில் ஒரு கவர்ச்சிகரமான நிகழ்வு களின் புதையல் இது" என்றார்.

இதேபோல் அமெரிக்காவின் பெர்கிலியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக விண் வெளி ஆராய்ச்சியாளர் மைக்கேல் வாங் கூறுகையில், "வியாழனின் தற்போதைய புகைப் படம் செங்குத்து நிலையில் எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வளிமண்டலத்தில்உள்ளவானிலை, காலநிலை உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் தெளிவாக கணக்கிட முடியாது. ஆனாலும் வியாழனின் வளிமண்டலத்தைப் பற்றி அறிந்து கொள்ள நிறைய விஷயங்கள் இருக்கிறது என்பதை இது காட்டுகிறது' '- என்றார்.



## ...ன் ஓவியங்கள் ஏலத்தில்

...ர்வாதி... ஓவியங் ...ருகின் ...ார் என் ...என்ற ...அவர் ...க்கும் ...தனது ...தல் 3 ...வரைந்

தார் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஹிட்லரின் 5 ஓவியங்கள் பிரிட்டனைச் சேர்ந்த முல்லாக்ஸ் ஏல நிறுவனத்தின் மூலம் நாளை மறுதினம் விற்பனைக்கு வருகின்றன. இதில் 4 ஓவியங்களில் ஏ.ஹிட்லர் என்ற கையெழுத்து இடம்பெற்றுள்ளது. மற்றொன்றில் கையெழுத்து இல்லாவிட்டாலும், அவருடையது தான் என நம்பப்படுகிறது. இவற்றில் 2 ஓவியங்கள் 1900 ஆவது ஆண்டில் வரையப்பட்டவை ஆகும். ஒரு கிராமத்தின் தெரு, அல்ப்ஸ் மலைப்பகுதியில் வளரும் மலர் செடி, ஹிட்லர் பிறந்த நாடான ஆஸ்திரியாவின் டர்ன்ஸ்டீன் நகர நுழைவு வாயிலின் தோற்றம் உள்ளிட்டவை ஏலத்துக்கு வர உள்ள ஓவியங்களில் குறிப்பிடத்தக்கவை ஆகும். இலங்கை மதிப்பில் சுமார் 20 லட்சம் ரூபா வரை விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



## சிக்கிமைச் சீனாவுடன் இணைத்து வரைபடம்

இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் தற்போது இருக்கும் சிக்கிம் பகுதியை சீனாவுடன் இணைந்து சீன அரசு புதிய வரைபடம் வெளியிட்டுள்ளது. இது இந்தியாவிலும் சிக்கிம் எல்லையுடன் தொடர்புடைய பூட்டானிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தியா, சீனா, பூட்டான் ஆகிய 3 நாடுகளின் எல்லை பகுதி ஒன்றிணையும் இடம் சிக்கிம் மாநிலத்தில் உள்ளது. டோகாலா என்று அழைக்கப்படும் இந்த இடம் சிக்கிம் மாநிலத்தின் உள்ளடக்கிய பகுதியாக இருக்கிறது. இங்கு இந்திய இராணுவம் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளது. எனினும் டோகால்லா பகுதியை சீனா தனக்கே உரித்தானது என்று தனித்து சொந்தம் கொண்டாடுகிறது. இதன்படி சிக்கிமை தன்னுடன் இணைத்து புதிய வரைபடத்தையும் வெளியிட்டுள்ளது. இதற்கு இந்தியாவும் பூட்டானும் கண்டனம் தெரிவித்தன. சீனாவுக்கு எதிராக பதில் நடவடிக்கையாக என்ன செய்வது என்பது தொடர்பில் அவை ஆலோசித்து வருகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)


## ...ததியில் அமெரிக்கப் போர்க் கப்பல்

...ா. தென்சீன கடல் பகுதி முக்கிய வர்த்தக மையமாக உள்ள ...லையில் அங்கு சீனா ஆதிக்கம் செலுத்துவதற்கு அமெரிக்கா ...ள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

...னிடையே, அமெரிக்காவின் போர்க்கப்பல் ஒன்று டிரைடன் ...வை நெருங்கும் வகையில் தீவில் இருந்து 12 மைல்கள் ...லைவில் நேற்றுமுன்தினம் பயணம் செய்தது. கடல்வழி ...திகளில் சுதந்திரமுடன் அனைத்து கப்பல்களும் சென்று வரு...னை எடுத்து காட்டும் வகையில் இந்த நடவடிக்கையை ...மெரிக்கா மேற்கொண்டது என அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், தென்சீனக் கடலில் சர்ச்சைக்குரிய தீவுப் பகுதிக்கு அருகே அமெரிக்காவின் போர்க்கப்பல் பயணம் செய்ததற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை தீவிர அரசியல் மற்றும் இராணுவ ஆத்திரமூட்டும் செயல் என்று எச்சரித்துள்ள சீனா, இது போன்ற ஆத்திரமூட்டும் செயற்பாடுகளை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மயிலிட்டியின் மீட்பு சிறப்பான வெற்றி!

கிட்டத்தட்ட 27வருடகாலத்தவம்முடிவுக்குவந்திருக்கிறது. இனியொருபோதும் மீட்கவே முடியாதோ என்று அச்சப்பட்டநிலம்ஒருவாறு மீண்டும்மக்களின்கைகளுக்குத்திரும்பி வந்துள்ளது. தமிழர்களின் அரசியலில் அண்மைக் காலத்தில் அடைந்திருக்கக்கூடிய மிகப் பெறுமதிமிக்க அடைவு இது. தற்போதைய அரசியல்சூழலில்அதன்அரசியல்பெறுமதிஉணரப்பட்டிருக்கிறதா என்பது கேள்விக்குரியதுதான்.

1990ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் திகதி மயிலிட்டித் துறைப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறினார்கள். பலாலி தரைப் படைத் தளத்திலிருந்து படையினர் கடும் எறிகணைத் தாக்குதலுடன்முன்னேறத்தொடங்கியதை அடுத்துமக்களும்கையில் கிடைத்தவற்றுடன்உயிரைக்கையில்பிடித்தபடி ஓடினார்கள். சில நாள்களில் படையினர் தமது முகாம்களுக்குத் திரும்பி விடுவர் என்ற எதிர்பார்ப்பிலேயே போட்டது போட்டபடி விட்டுவிட்டுப் புறப்பட்டார்கள் அந்த மக்கள். ஏனெனில் அதுவரையான விடுதலைப் போராட்ட வரலாற்றில் தரைப் படையினர்தமது முகாம்களில் இருந்து முன்னேறிவந்து தாக்குவதும்திரும்பிப்போவதுமானபோர்உத்தியைத்தான்பயன் படுத்தி வந்தார்கள்.

ஆனால் எதிர்பார்ப்புகளை எல்லாம் பொய்ப்பித்துத் தாம் பிடித்த நிலத்தை நிரந்தரமாகத் தக்க வைத்துக்கொண்டனர் படையினர். விடுதலைப் போராட்டத்துக்குப் பின்னரான காலத்தில்தமிழர்களின்நிலம்நிரந்தரமாக ஆக்கிரமிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பமாக அது அமைந்தது. அந்தத் துறைக்கு மீள, மக்கள் 27வருடங்கள்கடும்தவம் இருக்க வேண்டியிருந்தது. மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள்மல்லாகத்தில் இடைத் தங்கல் முகாம்களில் அமர்த்தப்பட்டனர். கணிசமானோர் வடமராட்சிப் பகுதிக்குச் சென்றார்கள். போர்க் காலத்திலும் போரின்பின்னரான காலத்திலும் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களின் குறியீடாக நீண்ட காலமாகத் திகழ்ந்தவர்கள் இந்த மக்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன், பிரிட்டனின்தலைமைஅமைச்சராக இருந்தவரான டேவிட்கெமரூன்ஆகியதலைவர்கள்கூட இந்தமுகாம்களுக்கு வந்து இங்குள்ள மக்களை நேரில் சந்தித்து அவர்களின் மீள்குடியேற்றம் குறித்து வலியுறுத்தும் அளவுக்கு இவர்களின் பிரச்சினை உலகமயப்பட்டிருந்தது.

பன்னாட்டு அழுத்தங்கள், போராட்டங்கள் என்று எல்லாவற்றுக்கும்மத்தியிலும்மயிலிட்டியைப்படையினர்விடுவிப்பார்கள் என்று சில வருடங்களுக்கு முன்னர் எவருமே நம்பியதில்லை. நம்புவதற்கான வாய்ப்புகளும் இருந்ததில்லை.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் வரை மயிலிட்டி மக்களுக்கேகூட அந்த நம்பிக்கை வலுவாக இருந்தது என்று சொல்ல முடியாது. தமது இடத்திற்கு எப்படியாவது போகவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அதற்காகஅவர்கள்தம்மை ஒறுத்துத்தவம் கிடந்தார்கள். ஆனால் நம்பிக்கை மிகச்சிறிதாகவே இருந்தது. ''மயிலிட்டியை அண்டிய பகுதி வரைக்கும் விடுவார்கள். ஆனால் மயிலிட்டியை விடமாட்டார்கள் போலத்தான் கிடக்கிறது'' என்று சொன்னவர்கள் பலரை கடந்த காலங்களில் பார்க்க முடிந்திருக்கிறது. இன்று அந்த மண்ணில் கால் பதித்து மக்களால் ஆடிப் பாட முடிந்திருக்கிறது. ஆனந்தக்கூத்தாட முடிந்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த ஒரு அரசியல் முடிவே இதனைச் சாத்தியமாக்கியது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அரசியல் இராஜதந்திர வெற்றி என்று கூட்டமைப்பு உரிமை கோரினால் இந்த விடயத்தில் அது முற்றிலும் பொருத்தமே என்பதை அதன் அரசியல் எதிரிகளும் ஏற்றுக்கொள்வர். கூட்டமைப்பு மீதும் அதன்தலைவர்கள் மீதும் பல்வேறு விமர்சனங்கள்இருந்தாலும்இந்தஒன்றுக்காகவேஅவர்களைப்பாராட்டலாம். மைத்திரி, ரணில் அரசுடன் இணைந்த அரசியல் பயணத்தில் கூட்டமைப்பு இதுவரையில் எட்டிய மிகப் பெரிய அடைவு என்று மயிலிட்டி விடுவிப்பைத்துணிந்து கூறலாம். கடந்தகாலங்களில்இணக்கஅரசியலாலும்மீட்கமுடிந்திராத நிலத்தைமீட்டெடுத்தது உண்மையில் பெரிய அடைவுதான். கடும் விமர்சனத்துக்கு உள்ளாகிவரும் தனது அரசியல் பாதையில் நம்பிக்கையுடன் முன்னேற இரா.சம்பந்தருக்கு இது தெம்மையும் உத்வேகத்தையும் அளிக்கும் என நம்பலாம்!

# சோதனை மிக்க தமிழர்களது எதிர்காலம்

இந்துமதி

வடக்கு அரசியலரங்கில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் தமிழர்களின் ஒற்றுமைக்கு வேட்டு வைப்பனவாகவே காணப்படுகின்றன.

அதேவேளை தமிழ் மக்கள், வாழ்க்கையே பிரச்சினைதான் என்பதுபோன்று சிரமத்தோடு தமது வாழ்நாளைக் கடத்தி வருகின்றனர். அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்மென்ற அறிகுறிகூடத் தென்படவில்லை. அரசிடமும் இவர்களுக்கான மாற்றுத் திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்த் தலைவர்கள் என்னதான் உரத்துப் பேசினாலும் அரசைப் பொறுத்தவரையில் செவிடன் காதில் ஓதிய சங்கின் நிலைதான் காணப்படுகின்றது. இதனால் தமிழ்த் தலைமைகளால் ஒன்றுமே செய்ய முடியாததொரு நிலைதான் தோன்றியுள்ளது. இந்த நிலையில்தான், வடக்கு மாகாணசபையில் விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெற்று முடிந்துவிட்டன. முதலமைச்சர் விக்னேஸ்வரனை மையப்படுத்தியதாகவே இது இடம்பெற்றுள்ளது. தமிழ் அரசுக் கட்சிக்கும், கூட்டமைப்புக்கும் எதிரானவர்கள் இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். விக்னேஸ்வரனுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் காட்டித் தமது நோக்கத்தை நிறைவு செய்து கொண்டனர்.

## மக்களைக் குழப்பும் முயற்சியில் ஒரு சில ஊடகங்கள்


வடக்கில் இடம்பெற்ற சம்பவங்கள் தமிழர் வாழ்வில் மாற்றமுடியாத கரும்புள்ளிகளை இட்டுச் சென்று விட்டன. குடாநாட்டிலிருந்து வெளிவருகின்ற சில ஊடகங்கள் மக்களின் மனங்களில் குழப்பமான சிந்தனைகளைத் தோற்றுவிப்பதில் முனைப்புடன் செயற்பட்டதையும் காணமுடிந்தது. அதிலும் ஊடகமொன்று தனிநபர் துதிபாடுவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. கண்மூடித்தனமான முறையில் ஒருவரைப் புகழ்வது அவரைச் சிந்திக்கவிடாது தடுத்துவிடுமென்பதை இந்த ஊடகம் புரிந்து கொள்ளாதது வேதனை தருகின்றது.

வடக்கு முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதன் நோக்கம் தொடர்பாக மக்களில் அநேகமானவர்களுக்கு எதுவும் தெரியவில்லை என்பதுதான் உண்மை. விக்னேஸ்வரனை அவரது பதவியிலிருந்து அகற்றுவதற்குச் சிலர் சதிசெய்கின்றார்கள் என்ற தகவலைப் பலர் வசதியாக நம்பினார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்களும் தமது நோக்கம் தொடர்பாக மக்களுக்குத் தெரியப்படுத்தவில்லை.

## நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலும் குழப்ப நிலையே

மேலும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மாகாணசபையின் பேரவைத் தலைவரின் அனுமதியுடன் விவாதித்து அதை நிறைவேற்றினாலே போதும், முதலமைச்சர் பதவி விலக வேண்டியதுதான். ஆனாலும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளுநரிடம் கொண்டு சென்று பேரவைத் தலைவரே அதைச் சமர்ப்பித்துதான் எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்திவிட்டது. தமிழ் அரசுக்கட்சித் தலைமை இதில் விவேகமாக நடந்து கொள்ளவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அதேவேளை சி.வி.விக்னேஸ்வரன் மக்கள் பலம்தான் எனது பலம்; மக்கள் எனது பக்கமே நிற்கிறார்கள் நான் இனிமேல் எதற்குமே அஞ்சமாட்டேன் என்றெல்லாம் சினிமாப் பாணியிலான வசனங்களைப் பேசியதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருபோரை வென்ற அரசனாகச் சிங்கள மக்களால் கருதப்பட்டவர் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச. புலிகளைத் தோற்கடித்தவர் என்பதால் அவருக்குச் சிங்கள மக்களின் ஏகோபித்த ஆதரவு காணப்பட்டது. இதனால் தமது இரண்டாவது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்பதாகவே அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தி, மூன்றாவது தடவையாகவும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் அதில் தோல்விதான் அவருக்குக் கிடைத்தது. சிறுபான்மையின மக்களின் வாக்குகளே அவரைத் தோற்கடித்ததாகக் கூறப்பட்டாலும், பெருபான்மையின மக்களின் வாக்குகளும் எதிர்பார்த்த அளவுக்கு அவருக்குக் கிடைக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.



> **வடக்கு முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதன் நோக்கம் தொடர்பாக மக்களில் அநேகமானவர்களுக்கு எதுவும் தெரியவில்லை என்பதுதான் உண்மை.**

## மகிந்தவுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி குறித்து வடக்கு முதலமைச்சர் சிந்தித்தல் அவசியம்

மகிந்தவுக்கு ஏற்பட்ட அரசியல் வீழ்ச்சியை வடக்கு முதலமைச்சர் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் நல்லது. ஏதோவொரு வேகத்தில் மக்கள் கோசம் போடுவார்கள்; வேசம் கலைந்த பின்னர் கலைந்து சென்றுவிடுவார்கள். கோசத்தை அப்போது காணவே முடியாது.

தமிழர்களின் ஒற்றுமையே அவர்களுக்கான பலம். இது சிதைந்து போய்விட்டால் எல்லாமே தோல்வியில்தான் முடியும். ஆகவே தம்மைக் காரணம் காட்டித் தமிழர்கள் பிளவுபடுவதைத் தடுப்பதில் முதலமைச்சர் தீவிரமாக ஈடுபட வேண்டும். குறிப்பாக அவருக்குத் துதிபாடுவதாக நினைத்துக் கொண்டுதமிழினத்தைக் கூறுபோடுகின்றவர்களுடனான உறவை அவர் துண்டித்துக் கொள்ள வேண்டும். அந்த ஊடகங்களின் இனவிரோதச் செயற்பாடுகள் அப்போது முடிவுக்கு வந்து விடும்.

கடந்த காலங்களில் சி.வி.விக்னேஸ்வரன் பல தவறுகளைச் செய்திருந்தார். நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்புக்காகப் பரப்புரையில் ஈடுபடாமை, தமிழ் மக்கள் பேரவையில் தம்மை இணைத்துக் கொண்டமை, அமைச்சர்கள் மீது மாகாணசபை உறுப்பினர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோது அமைச்சர் ஒருவருக்கு ஆதரவாகச் செயற்பட்டமை, தாமே நியமித்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உதாசீனம் செய்து விட்டுத் தமது இஷ்டம் போன்று நான்கு அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்வதற்கு முனைந்தமை, தாம் சார்ந்த கட்சிக்கு விசுவாசம் இல்லாது நடந்து கொண்டமை போன்ற பல குற்றச் சாட்டுக்களுக்கு முதலமைச்சர் உள்ளாகியிருந்தார். இவற்றைத் தவிர அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பல இருப்பதும் தற்போது தெரியவந்துள்ளது. ஆகவே மக்கள் கண்மூடித்தனமான வகையில் முதலமைச்சரை ஆதரிப்பதை மறுபரீசீலனை செய்துகொள்ள வேண்டும். நடு நிலைமையுடன் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

இதில் அவர்கள் தவறுவிடுவார்களாயின், தமிழர்கள் பிளவுபட்டு நலிவுறுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. அவர்களின் எதிர்காலமே இருள் சூழ்ந்த சூனியத்தை நோக்கிச் சென்றுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பார்வையில் பாகிஸ்தான் பரிசுத்தவாதி

சேரலாதன்




கொடிய நாகபாம்பொன்று படம் எடுத்தவாறு கொத்துவதற்குத் தயாராகும்போது, அதை அடித்துக் கொல்வதை விடுத்து, அதன் உரிமைகள் தொடர்பாகச் சிந்தித்துக் கொண்டிருக்க முடியுமா? இவ்வாறு பாகிஸ்தானில் வைத்துக் கேள்வி எழுப்பியிருக்கிறார் இலங்கையின் முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச. அவர் எதனைமனதில்வைத்துஇவ்வாறு கூறியிருக்கிறார் என்பதை எம்மால் அனுமானித்து அறிந்து கொள்ள முடியும்.

விடுதலைப் புலிகளை ஒழித்து விடும் விடயத்தில் பாகிஸ்தான் வகித்த பங்கு அளப் பரியது. போரின் போது இந்தியாவுக்குப் போட்டியாகப் பாகிஸ்தான் நாடுதான் இலங்கை அரசுக்குச் சகல வழிகளிலும் உதவி செய்தது. மகிந்த, அரச தலைவர் என்ற வகையில் அண்மையில் பாகிஸ்தானுக்குப் பயணத்தை மேற்கொள்ளாதபோதிலும், அங்குமகிந்தவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குக் குறைவிருக்கவில்லை.

### விடுதலைப் புலிகள் குறித்த உலக நாடுகளது பார்வை

புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற வகையில்தான் உலக நாடுகள் பார்த்தன. அவர்கள்எதற்காகப்போராடுகிறார்கள்? அவர்களின்உண்மையான நோக்கம் என்ன? என்பதையெல்லாம் ஒருவருமேசிந்தித்துப்பார்க்கவில்லை. பயங்கரவாதத்தை உலக நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்துவரும்பாகிஸ்தான், மற்றவர்களால் பயங்கரவாதிகளென அழைக்கப்பட்டபுலிகளைஅழிப்பதற்கு ஓடோடிவந்து இலங்கைக்கு உதவியது வேடிக்கையானதொன்று. பாகிஸ்தான் என்ற நாடு உருவாகிய காலத்தில் இருந்து, இன்றுவரை அங்கு பயங்கரவாதச் செயற்பாடுகள் பெருமளவில் இடம்பெற்றுத் தான் வருகின்றன.

அதன் அண்டை நாடான இந்தியாவிலும்ஆப்கானிஸ்தானிலும் பயங்கரவாதத்தைத்தூண்டிவிடுவதில்பாகிஸ்தான் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்தகைய பாகிஸ்தான்நாட்டுக்குபுலிப்பயங்கரவாதத்தை ஒழித்தவர் என்ற புகழுடன் மகிந்த சென்றுள்ளமை வேடிக்கையானதுதான்.

இறுதிப் போரின்போது இலங்கையில் இடம்பெற்ற விடயங்கள் அனைத்தையும்முழு உலகமும்நன்கறியும். அப்பாவித்தமிழ்மக்கள்பல்லாயிரக்கணக்கில் கொல்லப்பட்டதற்கும், அங்கவீனர்களாக்கப்பட்டதற்கும் எவர் பொறுப்பு என்பதும் உலக நாடுகளுக்கு நன்கு தெரியும். ஆனால்பொறுப்புக்கூறவேண்டிய அவர்கள், எதுவித மனக் கிலேசமும் இன்றிப் புனிதர்களாக உலகைச் சுற்றி வருகின்றனர்.

இனிமேல் பொறுக்க முடியாது என ஒருவர் நினைக்கும் போது தான் அவரது ஆழ்மனதில் வன்செயல் தொடர்பான எண்ணம் தோன்றுகின்றது. பின்னர் அதுவே பயங்கரவாதச் செயல்களாக உருவெடுக்கின்றன.

முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற நாடுகளில் பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம் பெற்று வருவதற்கான உண்மையான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. வெறும்முஸ்லிம்பயங்கரவாதம் என்ற விதத்தில் இவை நோக்கப்படுவதே இதற்கான காரணமாகும். அமெரிக்கா போன்ற பெரிய ஜனநாயகநாடுகள்கூட, பயங்கரவாதம் உருவாகுவதற்கான உண்மையான காரணங்களைக் கண்டறியாது எழுந்தமானத்தில் செயற்படுவதால் குழப்பமானதொரு நிலை உருவாகியுள்ளது.

> ஈராக், சீரியா, லிபியா, எகிப்து, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் தலையீடுசெய்து அவற்றைக் குழப்பிய அமெரிக்கா, பாகிஸ்தான் விடயத்தில் நழுவல் போக்கைக் கடைப்பிடிப்பதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இலங்கை விடயத்தில் கூட இலங்கை அரசின் ஒருபக்க முறைப்பாட்டை மட்டுமே ஏற்று அமெரிக்கா விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு இலங்கைக்கு உதவியமை எந்த வகையிலும் ஏற்கத் தக்கதொன்றல்ல. புலிகள் என்ன காரணத்துக்காக ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை ஆராய்வதற்கு அமெரிக்க தவறிவிட்டது.

### பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடுஎன்பது இரகசியமல்ல

பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடு என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால் அமெரிக்காவின் சிறு நட்பு நாடு என்ற அந்தஸ்து அதற்கு இன்னமும்உள்ளது. பயங்கரவாதநாடு என்ற தன்மீதான குறியீட்டை நீக்குவதற்கான முயற்சிகளில் அந்த நாட்டுச் செனற் உறுப்பினர்கள் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்துள்ளனர் என்று பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.


ஈராக், சிரியா, லிபியா, எகிப்து, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் தலையீடு செய்து அவற்றைக் குழப்பிய அமெரிக்கா, பாகிஸ்தான் விடயத்தில் நழுவல் போக்கைக் கடைப்பிடிப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை விடயத்தில் கூட இலங்கை அரசின் ஒருபக்க முறைப்பாட்டை மட்டுமே ஏற்று அமெரிக்கா, விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு இலங்கைக்கு உதவியமை எந்த வகையிலும் ஏற்கத்தக்கதொன்றல்ல. புலிகள் என்ன காரணத்துக்காக ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை ஆராய்வதற்கு அமெரிக்க தவறிவிட்டது. இதன் காரணமாக, ஓர் இனத்தின் உரிமைக்கான போராட்டம் மௌனிக்கப்பட்டு விட்டது. இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதற்கான அறிகுறிகள் எவற்றையும் காண முடியவில்லை. பன்னாட்டுநீதிபதிகளின் பங்களிப்புடன்கூடியவிசாரணையைப் பாதிக்கப்பட்டமக்கள் எதிர்பார்த்துக்காத்திருக்கின்றனர். ஆனால் இலங்கை அரசு இதைத் தடுப்பதில் முழுமூச்சுடன் செயற்பட்டுவருகின்றது. மனிதஉரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் கிடப்பில் போடப்பட்ட நிலையில் காணப் படுகின்றன. அமெரிக்கா போன்ற ஜனநாயக நாடுகள் மனம் வைத்தால் இவற்றையெல்லாம்நடைமுறைப் படுத்த முடியும். ஆனால்இதுவரை அப்படி எதுவுமே இடம்பெறவில்லை.

### அமெரிக்காவின் போலி வேடம்

வடகொரியாஅணு ஆயுதச்சோதனைகளை நடத்துவதனமூலமாகமுழு உலகையும் அச்சுறுத்திவருகின்றது. பெரிய வல்லரசு நாடுகள் சில மறைமுகமான ஆதரவைத் தெரிவித்து வருவதும், வடகொரியாவின் இத்தகைய தவறான செயலுக்கு ஊக்கம் வழங்கியுள்ளது. அமெரிக்கா ஆரம்பத்தில் வட கொரியா வுக்கு அச்சுறுத்தல் விடும்வகையில் நடந்து கொண்டது. தற்போது அடக்கிவாசிக்கத் தொடங்கிவிட்டது. ஈரான் விடயத்தில் கூட இவ்வாறானதொரு நிலையே காணப்படுகின்றது. தற்போது கட்டார் மீதும் அமெரிக்கா கண்வைக்க ஆரம்பித்துள்ளது. இதனால் கட்டாரில் தொழில்புரிகின்ற வெளிநாடுகளைச் சேர்ந்தபலலட்சக்கணக்கானதொழிலாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்களை நம்பி வாழ்கின்ற குடும்பங்கள் செய்வதறியாத நிலையில் கையைப் பிசைந்தவாறு நடுத்தெருவில் நிற்கின்றன. ஏழை நாடுகளைச் சேர்ந்த மக்களே இவர்களென்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவோ அல்லது வேறு எந்தவொரு நாடுமோ இவர்களுக்கு உதவப் போவதில்லை.

ஆகவே பெரிய நாடுகள் தாம் நினைத்தவாறு செயற்படுவதை நிறுத்திக் கொண்டு, நீதியான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் உலகில் நீதியும், அமைதியும் நிலைநாட்டப்படும். இந்த உலகம் அழிவது தொடர்பான எதிர்வு கூறல்கள் கூறப்பட்டு வரும் நிலையில், மீதியாக உள்ள நாள்களையாவது உலகில் வாழுகின்ற மக்கள் மகிழ்ச்சியாகக் கழிக்கவேண்டியதொருசூழ்நிலை உருவாக்கப்படல் வேண்டும்.

ஏழை நாடுகளில் வாழ்கின்ற மக்களில் அநேகமானவர்கள்தமது உணவுக்குக் கூட அல்லாடும் நிலையில் உள்ளனர். இவர்கள் போன்றவர்களைக் கவனிக்காதுவிடுவதுவளர்ந்தநாடுகள்புரிகின்ற மிகப்பெரிய புரட்சிச் செயலாகும். இதை உரியவர்கள் உணர்ந்தால் அதுவே போதுமானது.



## ஆசிரியருக்கான கடிதம்

### சிறிமான் பொதுசனம் அவதானிக்கிறார் கவனம்

அண்மையில் வடக்கு மாகாணசபையில் ஏற்பட்ட பிரளயங்கள் தற்போது ஓய்ந்துள்ளன. வடக்கு முதல்வர் கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர் ஆவார். கட்சியின் அனுமதியின்றி தமிழ் மக்கள் பேரவையில் இணைத்தலைமைப் பதவியை அவர் பொறுப்பேற்றமை மிகவும் பிழையான செய்கையாகும். மாகாணசபைத் தேர்தலில் தன்னைத் தெரிவு செய்த 3 லட்சம் மக்களின் ஆணையை முதல்வர் மீறிவிட்டார்.

அத்துடன் ஈழத்தின் "சுப்பிரமண்ய சுவாமி" பாத்திரத்தை வகித்துக் கொண்டிருக்கும் ஆனந்த சங்கரியார், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பொறுப்பை ஏற்கும்படி வடக்கு முதல்வருக்கு அழைப்பு விடுத்துள்ளார். அத்துடன் மகிந்த காலத்தில் அவருடன் ஒட்டி உறவாடிய உதிரிக் கட்சிகள் வடக்கு முதல்வருக்குத் தங்கள் ஆதரவை வழங்க முன்வந்தன.

மாகாண சபையின் விசாரணைக்குழு விடயமாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். உலகில் பல நாடுகள் தேசிய ரீதியில் வருடா வருடம் மர நடுகை செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இங்கும் நடைபெறுகிறது. பாரதத் தலைமை அமைச்சர் மோடியும் மரநடுகையில் பெரும் ஈடுபாடு கொண்டிருக்கிறார். இந்த நிலையில் மரம் நடுகையை தவறானதொன்றாகக் காட்ட முயலும் இந்தக் குழுவின் நடவடிக்கை எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. வவுனியாவுக்குக் கிடைக்க வேண்டியதும், இந்தப் பகுதி விவசாயிகளுக்கு நன்மை பயக்கக் கூடியதுமான பொருளாதார மத்திய நிலையத் திட்டம் தாமதமடையக் காரணமானவர் முதல்வரே. இதற்கு விசாரணைக்குழு வேண்டாமா? என்னதான் பதவிகளை ஏற்றாலும் இவர்கள் அனைவரும் சொற்ப காலத்தில் தம்மை இந்த நிலைக்கு கொண்டுவந்த முக்கியமான நபரை மறந்து விடுகின்றனர். அவர்தான் சிறிமான் பொதுசனம். அவர் தற்போது எல்லாவற்றையும் எட்ட நின்று அவதானித்துக் கொண்டு தான் இருக்கின்றார். காலம் கனியும்போது அவர் தனது பணியைச் சரிவரச் செய்வார். இதனை அரசியல்வாதிகள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

சிவம்
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சார்க் வர்த்தகக் கண்காட்சி நிகழ்வுகள் கொழும்பில்

## பொருளாதார மற்றும் சமூகக் கூட்டுறவை ஏற்படுத்தும் நோக்கில் இடம்பெறவுள்ளது

“1985 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சார்க் வர்த்தக மற்றும் தொழிற்றுறை சம்மேளனமானது உறுப்பு நாடுகளுக்குள் ஏற்படும் முக்கிய பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதுடன் வினைத்திறனான முறையிலே நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்யும் கடப்பாடுகளையும் கொண்டுள்ளது. அத்துடன் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அடிப்படையில் சார்க் பிராந்தியமானது தென் ஆசிய மற்றும் உலக பொருளாதாரங்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் வகையிலான பிராந்திய கூட்டுறவும் இதில் உள்ளடங்கியுள்ளது.”

வருடாந்த சார்க் வர்த்தக கண்காட்சி மற்றும் முதலீட்டுக் கருத்துக்களமானது இவ் வருடம் கொழும்பில் இடம் பெறவுள்ள தகவல்கள் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் உறுப்பு நாடுகளிடையேயான பொருளாதார மற்றும் சமூக கூட்டுறவை மேம்படுத்தும் விதமாக சார்க் வர்த்தக மற்றும் தொழிற்துறை சம்மேளனம், இலங்கை வர்த்தக மற்றும் தொழிற்றுறை சம்மேளனம் (FCICIIISL) மற்றும் எம்.. பி, வென்ட்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிடெட்ஆகியனஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த வர்த்தக கண்காட்சி மற்றும் முதலீட்டுக் கருத்துக்களமானது இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மையம் மற்றும் ஹில்டன் கொழும்பு என்பவற்றில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ளதென அறிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள சார்க் வர்த்தக மற்றும் தொழிற்துறை சம்மேளனத்தின் தலைவர் சுராஜ் வைத்ய,

“சார்க் வர்த்தக கண்காட்சி மற்றும் முதலீட்டுக் கருத்துக்களம் 2017 நிகழ்வுகள் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன்போது முதலீட்டு கருத்துக்களம், கண்காட்சி கூடங்கள், கருத்துக்களங்கள் மற்றும் கொள்கைக் கலந்துரையாடல்கள், வணிகக் கூட்டங்கள், ஒவ்வொரு நாடுகளுக்குமான கலாச்சார நிகழ்வுகள் மற்றும் சுற்றுலாக் கூடங்கள் என்பன அமையவுள்ளன.

அதேவேளை இந்தக் கண்காட்சி நிகழ்வின் போது இயந்திரங்கள், கைவினைப் பொருள்கள், துணிகள் மற்றும் ரெடிமேட் ஆடைகள், வீட்டு மற்றும் சமையலறை உபகரணங்கள், மின் உபகரணங்கள், மெத்தை, திரைச்சீலைகள், மேசை, நாற்காலி போன்றவற்றின் விரிப்புக்கள் போன்ற தயாரிப்புக்கள், உடல்நலம் மற்றும் உடற்பயிற்சி தொடர்பான பொருள்கள், பரிசுப் பொருள்கள், செரமிக் மற்றும் சுகாதார பொருந்துதல்கள்,உணவு மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், கார் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள், இரத்தினக்கற்கள் மற்றும் நகைகள் எனப் பல் துறை சார்ந்த பொருள்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

முதலீட்டுக் கருத்துக்களமானது செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளதுடன் இக்களமானது உள்ளூர் மற்றும் வெளியூர் செல்வாக்குடைய முதலீட்டா ளர்களுக்கான குறுக்கு எல்லை முதலீடுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கவுள்ளது. தவிர உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்,வியாபாரிகள், நிதி முகாமையாளர்கள், தலைமை நிர்வாக அதிகாரிகள், நிறுவன உரிமையாளர்கள், பன்னாட்டு வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், பன்னாட்டு அபிவிருத்தி முகவர்கள் மற்றும் அரச முதலீட்டு இலாகா அதிகாரிகள் போன்ற முக்கிய நபர்களை இந்தக் களமானது ஒன்றிணைக்கவுள்ளது" - என்றார்.

மேலும்,இலங்கை வர்த்தக மற்றும் தொழிற்றுறை சம்மேளனமானது உறுப்பு நாடுகளுக்கிடையேயே வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்கும் இந்த முயற்சியின் மூலமாக இலங்கை வர்த்தகத்தை மேலும் வலுப்படுத்த எதிர்பார்த்துள்ளதுடன் முதலீட்டுக்கும் வர்த்தகத்துக்கும் இலங்கையை ஒரு இலாபகரமான இடமாக ஊக்குவிக்கும் முயற்சியாகவும் இது அமைந்துள்ளமை குறித்து நோக்கத்தக்கது.

# அதிக விலையில் பொருள் விற்றால் சட்ட நடவடிக்கை



அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வோருக்கெதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதான தகவல் வர்த்தக மற்றும் கைத்தொழிற்றுறை அமைச்சர் ரிசாத் பதியூதினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி அரசு அறிவித்த கட்டுப்பாட்டு விலை நிர்ணயத்திலிருந்து அதிகரித்த விலைக்கு அரிசியை நுகர்வோருக்கு விநியோகம் செய்த ஆயிரத்து 900 வர்த்தகர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் ஆயிரத்து 300 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

அண்மையில் வவுனியாவில் இடம்பெற்றிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே மேற்கண்ட கருத்துகள் அமைச்சரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், நுகர்வோர் விவகார அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் நாடு முழுமையுமாக சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளனர் எனவும் அதிக விலைக்கு அரிசி விற்பனைச் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கெதிராக பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ‘ரத்ன’ அப்பியாசக் கொப்பிகள் சந்தைக்கு அறிமுகம்

## புதுப்பொலிவுடன் வெளிவந்துள்ளன

அறுபது ஆண்டு காலமாக தேசத்தின் குழந்தைகளின் எழுத்துப்பழக்கத்தை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு செயற்பட்டு வந்த ரத்ன புத்தக வெளியீட்டு நிறுவனம் தனது ரத்ன அப்பியாசக் கொப்பிகளை புதிய பொலிவுடன் சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளது.

இதன்படி புதிய ரத்ன அப்பியாச கொப்பிகள் குழந்தைகளைக் கவரும் பல வர்ணங்களில் காணப்படுகின்றன. புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள ரத்ன அப்பியாசக் கொப்பிகளில் வெளி மட்டைகள் மட்டுமின்றி உள்ளக கடதாசிகளும் தூய்மையாகவும், எழுத்தாற்றலை ஊக்குவித்து. குழந்தைகளின் எழுத்தாற்றலை தூண்டும் வகையிலும் அமைந்துள்ளதாக கூறப்படுகிறது.

ரத்ன அப்பியாசக் கொப்பிகள் அறிமுக நிகழ்வானது ரத்ன புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் குமாரி குணரட்ன தலைமையில் இடம்பெற்றதுடன் நிகழ்வில் நாட்டின் முன்னணி புத்தக விற்பனை நிலையங்களான எம். டி.குணசேன, சரசவி, சதீபா, விஜித யாபா, சமுத்ரா மற்றும் ஜெயா ஆகியவற்றின் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.





CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

3/7/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -14.01 | 6,733.06 | 6,747.07 |
| S&P SL20 | -4.03 | 3,929.48 | 3,933.51 |
| வியாபாரப்புரள்வு | | 640,988,100 | 1,209,720,700 |
| உள்நாடு- கொள்வனவு | | 256,603,584 | 426,708,032 |
| விற்பனை | | 445,732,544 | 859,686,910 |
| வெளிநாடு- கொள்வனவு | | 384,384,544 | 783,012,740 |
| விற்பனை | | 195,255,568 | 350,033,824 |



| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 177.10 | 1,668,734 | 298,646,945 |
| கேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 154.50 | 423,105 | 65,159,934 |
| டயலொக் | DIAL.N | 11.90 | 4,514,921 | 53,726,920 |
| லங்கா ஓரிஸ் லீசிங் | LOLC.N | 117.70 | 240,939 | 28,222,291 |
| பிறவுன் இன்வெஸ்மன் | BIL.N | 3.20 | 7,066,998 | 22,276,837 |
| இலங்கை கொமரஷல் வங்கி - | COMB.N | 139.00 | 99,215 | 13,788,135 |
| எல் லோ எல் சி பைனான்ஸ் | LOFC.N | 4.00 | 2,762,261 | 11,234,148 |
| செலான் வுங்கி | SEYB.X | 60.50 | 159,077 | 9,579,227 |
| அலுமெக்ஸ் | ALUM.N | 25.20 | 378,884 | 9,471,385 |
| சேவ்ரோன் லுப்ரிக்கன் | LLUB.N | 167.00 | 40,873 | 6,788,642 |

- பங்குலாபம் -

நவலோகா [illegible] - ரூபா 0.10
பிம்புத்து பைனான்ஸ் - ரூபா 1.00
டோக்கியோ சிமெண்ட் - ரூபா 1.87

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 252 |
| விலை உயர்வு | 11.5 |
| [illegible] | 1.5 |
| பங்குலாப விலை | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளையூர் பா.பாலாஜினி

# மனிதர்களே சிந்தியுங்கள்



வாழ்க்கையே கண்ணீரில், வாழ்வே நரகமாகப் போச்சு, இனிச் சாவு தான் ஒரே வழி என எண்ணுபவரா நீங்கள்? துன்பம் உங்களைத் துரத்தித் துரத்தி வருகின்றது என எண்ணி அஞ்சுகிறீர்களா? அப்படியானால் வாருங்கள் உளரீதியாக உங்கள் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான வழிவகைகளை அறிந்து கொள்வோம்.

மேற்கூறப்பட்டது போன்ற கூற்றுக்களையே தொடர்ச்சியாக எண்ணுபவராக இருந்தால் எதிர்பார்த்திருந்த ஏதோ ஓர் விடயம் உங்களுக்கு கிடைக்கவில்லை அல்லது வாய்க்கவில்லை என்பது தான் அர்த்தம். ஆனாலும் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். பூமியில் வாழ்கின்ற எல்லோருக்குமே தாம் நினைக்கின்ற எல்லா விடயமும் கிடைத்து விடுகின்றதா? இல்லையே. பெரும்பாலானவர்களுக்கு அவ்வாறு எல்லாம் கிடைப்பதே இல்லை. ஆனாலும் கிடைத்ததைக் கொண்டு சந்தோஷமான வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். அவ்வாறான மனிதர்கள் தான் வாழ்க்கை எனும் கல்வெட்டில் தம் சரித்திரத்தைப் பொறித்து மறைந்த பின்னும் வாழ்கின்றார்கள்.

**நாமும் முயற்சிப்போம்**

எனவே அவர்களினுடைய வாழ்க்கை வரலாறுகளை அறிந்து கொண்டு அதன்படி வாழ நாமும் முயற்சிக்க வேண்டும். முன்னோர்கள் சென்ற பாதை வழியே சென்றால் துன்பங்களைக் கூடியளவு தவித்துக் கொள்ளலாம் என்று சொல்வார்கள். அடுத்ததாகத் துன்பம் எம்மைத் துரத்துகின்றதே. நம்மால் தப்பித்துக் கொள்ள முடியவில்லையே என நீங்கள் எண்ணுவீர்களேயானால் நிஜமாகவே துன்பம் உங்களை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு விடும். எனவே துன்பம் என்கின்ற கூட்டில் இருந்து முதலில் நீங்கள் வெளிவர வேண்டும். துன்பம் என்கின்ற இந்தச் சொல்லானது உங்களையும் உங்களின் எண்ணங்களையும் ஒரு சிறைக் கூண்டுக்குள் அடைத்து வைத்துவிடும்.

எனவே முதலில் துன்பக் கூட்டை உடைத்து வெளியே வாருங்கள். அவ்வாறு வெளியே வந்த பின் உங்களின் வெற்றிக்காக முயற்சி செய்து கொள்ளுங்கள். என்னைப் பொறுத்த வரைக்கும் துன்பம் என்பது உண்மையில் தோல்வியோ ஏமாற்றமோ அல்ல. உண்மையில் அது வெற்றியின் முதல் படி என்று தான் சொல்வேன் . எனவே வெற்றியின் முதல்படியில் நின்று கொண்டு நான் தோற்று விட்டேன் ஏமாந்து விட்டேன் எனக் கூறுவது எந்தளவு முட்டாள் தனமான காரியம் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

> **வெற்றியும், தோல்வியும் உங்கள் மனதில் தான் உள்ளது. அதை அடைந்து கொள்வதும் உங்கள் கைகளில் தான் அடங்கியுள்ளது. எனவே தோல்வி அடைந்தவர்களே! துன்பநிலையில் உள்ளவர்களே! நீங்கள் உண்மையில் வீழ்ந்து விடவில்லை. வெற்றியின் முதற்படியில் உள்ளீர்கள். ஆகவே தொடர்ந்து முயற்சியுங்கள். இந்தப் பிரபஞ்கம் உங்களின் சாதனைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றது.**


தோல்வி அடைந்து விட்டீர்களேயானால் அந்தத் தோல்வியில் இருந்து கற்றுக் கொண்ட பாடத்தை அடிப்படையாக வைத்து முன்னேற வேண்டுமே தவிர அந்த இடத்திலேயே விழுந்து விடக் கூடாது.

**துன்பத்துக்கு மூலகாரணம்**

துன்பத்தில் இருந்து வெளிவந்த பின்னர் சிந்திக்க வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் துன்பத்துக்கு மூல காரணம் எது என்பதை தான். வெளிப்படையாக நோக்கும் போது துன்பத்துக்கு காரணமான விடயம் வேறாக இருக்கும். ஆனால் ஆழமாகச் சிந்திக்கும் போது தான் துன்பத்தின் மூல காரணம் தெரியவரும். துன்பத்துக்கான மூலகாரணம் தெரிந்தால் மட்டுமே அதில் இருந்து முழுமையான ஒரு விடுதலையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எங்களினுடைய எண்ணங்கள் மற்றும் உணர்வுகளே துன்பத்துக்குக் காரணமாகி விடுகின்றன. எனவே எண்ணங்கள் மற்றும் உணர்வுகளில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நேரான எண்ணக்கருக்களை வளர்த்துக் கொள்ளல் மிக நல்லது. நான் தைரியமானவன், யாருக்கும் அஞ்சமாட்டேன், துன்பங்களைக் கண்டு துவழ மாட்டேன், என்னால் வெற்றியடைய முடியும் போன்ற எண்ணங்கள் தான் அவை. இவற்றைச் தொடர்ச்சியாக உங்கள் மனதோடு சொல்லிப் பார்த்துக் கொள்ளும் போது படிப்படியாகத் துரத்தி வருகின்ற துன்பங்களில் இருந்து ஒரு விடுதலை கிடைத்ததை உணர்வீர்கள்.

அடுத்தபடியாக நீங்கள் புரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் இந்தப் பிரபஞ்சத்துக்கு இருக்கின்ற சக்தியைப் பற்றித்தான். ஆம்! இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒரு சக்தி உண்டு. நீங்கள் கேட்கின்ற எல்லாவற்றையும் தருகின்ற சக்தி தான் அது. ஆனால் அது சரியான முறையில் கேட்கப்பட வேண்டும். நீங்கள் உங்கள் எதிர்பார்ப்புக்கள் மற்றும் ஆசைகளை மனதோடு சொல்லிக் கொள்ளும் போது இந்தப் பிரபஞ்சமானது அதையே திருப்பி உங்களுக்கு அதிர்வலைகளின் மூலமாக அனுப்பிக் கொண்டிருக்கும். எனவே உங்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற வழி உண்டாகும். ஆனால் இதில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் நீங்கள் மனதில் எண்ணுபவற்றைத் தான் பிரபஞ்சமும் உங்களுக்குத் திருப்பித் தரப்போகின்றது. அதனால் தான் நீங்கள் எதை எண்ணுகின்றீர்களோ, அதுவாகவே மாறுவீர்கள் என்று குறிப்பிடுகின்றார்கள் அப்துல்கலாம் கூறிச் சென்ற கனவு காணுங்கள் என்ற கூற்றுக்கூட இது தொடர்பான ஒரு படி முறை தான்.



குறிப்பாக மாணவன் ஒருவன் கணித பாடமானது எனக்கு மிகவும் கடினமாக உள்ளது. அது சரியாக வராது என எண்ணுவானாக இருந்தால் இந்தப்பிரபஞ்சமும் அதையே எதிரொலி மூலமாக திருப்பி அவனுக்கு வழங்கி விடும். அதனால் கணித பாடமானது தொடர்ச்சியாகவே அவனுக்கு எட்டாக் கனியாக அமைந்துவிடும். இதைப் போலத் தான் எல்லா விடயங்க ளுமே.

அடுத்த கட்டமாக நாம் நோக்க வேண்டிய விடயம் என்னவென்றால் தற்கொலை என்ற எண்ணக் கரு தொடர்பாகத் தான். தற்கொலை எண்ணமானது நீண்டகாலமாகவே மனதில் ஏற்பட்ட உளவியல் பிரச்சினைகளின் காரணமாக உருவாகின்றது. தம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கின்ற துன்பத்தில் இருந்து விடுபட முடியாதவர்களே இந்த முடிவை எடுத்துக் கொள்கின்றார்கள். இந்த தற்கொலை எண்ணமானது ஒரு கணப் பொழுதில் தோன்றி மறைந்திடும் தன்மை கொண்டது. அந்தக் கணநேரப் பொழுதில் அந்த எண்ணத்தை மாற்றி விட்டோமேயானால் எம்மால் அவற்றில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

**கலந்தாலோசனை**

நீங்கள் தற்கொலை எண்ணம் கொண்டவராக இருக்கிறீர்களா? அப்படியாயின் நீங்கள் உங்கள் பிரச்சினைகளை முதலில் உங்கள் நெருங்கியஅல்லது நம்பிக்கைக்குரிய ஒரு நபரிடம் முன்வையுங்கள் அவர்களுடன் கலந்தாலோசியுங்கள் ஏனெனில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தங்கள் பிரச்சினைகளை பகிர்ந்து கொள்வதற்கான ஒரு நபர் இல்லாமையின் காரணமாகவே இப்படியான முடிவைத் தேடிக் கொள்கின்றார்கள் என்பது உளவியலாளர்களின் கருத்தாகும். வாழ்க்கையில் நீங்கள் அனுபவித்து வாழ்வதற்கான எத்தனையோ பல விடயங்கள் உள்ளன. குறிப்பிட்ட ஒரு வட்டம் மட்டும் தான் வாழ்க்கை என்று நினைப்பவர்கள் தான் தோல்வி அடைந்த உடன் இனி வாழ்வே இல்லை என எண்ணி தற்கொலை செய்து சாவை முடிவாகத் தேடிக் கொள்கின்றார்கள்.

கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இந்தப் பிரபஞ்சம் உங்களைப் படைத்துள்ளது. அதற்கு நன்றிக் கடன் செலுத்த வேண்டாமா? இந்தப் பிரபஞ்சத்துக்கு நீங்கள் எதைக் கொடுக்கப் போகின்றீர்கள். ஆம்! நிச்சயமாக இந்தப் பிரபஞ்சம் எங்கள் ஒவ்வொருவரிடம் இருந்தும் ஏதோ ஓர் விடயத்தை எதிர்ப்பார்க்கிறது. சாவு என்பது எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் அந்தச் சாவு உங்களை அணைத்துக் கொள்வதற்கு முன் பிரபஞ்சத்துக்கு செலுத்த வேண்டிய நன்றிக் கடனைச் செலுத்தி விடுங்கள்.

எவருக்குத் தான் இந்த உலகத்தில் துன்பம் இல்லை. எல்லோருக்கும் தான் துன்பம் வருகின்றது. துன்பம் அடைந்தவர்கள் தங்களுடைய துன்பங்களை பெரிதாக எடுத்துக் கொள்ளாது தங்களை விடத் துர்ப்பாக்கிய நிலையில் உள்ளவர்களைக் கண்டு ஓரளவுக்கேனும் சமாதானமடைந்து கொள்ளுங்கள்.

வெற்றியும், தோல்வியும் உங்கள் மனதில் தான் உள்ளது. அதை அடைந்து கொள்வது உங்கள் கைகளில் தான் அடங்கியுள்ளது. எனவே தோல்வி அடைந்தவர்களே! துன்ப நிலையில் உள்ளவர்களே! நீங்கள் உண்மையில் வீழ்ந்து விடவில்லை. வெற்றியின் முதற்படியில் உள்ளீர்கள். எனவே தொடர்ந்து முயற்சியுங்கள். இந்தப் பிரபஞ்கம் உங்களின் சாதனைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 2017 ராகு, கேது பெயர்ச்சிப் பலன்கள்



## கடகம்

புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

எதையும் திருத்தமாகச் செய்பவர்களே! ராசியில் ராகுவும், 7 இல் கேதுவும் 27.7.17 முதல் 13.2.19 வரை அமர்ந்து பலன் தர இருக்கிறார்கள்.

**ராகுவின் பலன்கள்:** அனுபவபூர்வமாகப் பேசி எல்லோர் மனதிலும் இடம்பிடிப்பீர்கள். செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். எதிர்பார்த்து ஏமாந்த தொகைக் கைக்கு வரும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும். ஆனால், ராசியிலேயே ராகு அமர்வதால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மற்றவர்கள் விமர்சித்தாலும் பொருட்படுத்தாமல் உங்கள் வேலைகளில் கவனம் செலுத்தவும்.

உங்களின் விரயாதிபதியும் திரிதியாதிபதியுமான புதனின் ஆயில்யம் நட்சத்திரத்தில் எதிர் வரும் 27 ஆம் திகதி முதல் 4.4.18 வரை ராகு செல்வதால், உற்சாகம் பிறக்கும். பணப் பற்றாக்குறை ஏற்பட்டாலும் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். மகளின் திருமணம் நிச்சயமாகும். புது வீடு, மனை வாங்குவீர்கள்.

5.4.18 முதல் 10.12.18 வரை உங்கள் சப்தமாதிபதி மற்றும் அஷ்டமாதிபதியான சனி பகவானின் பூச நட்சத்திரத்தில் செல்வதால், உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். அவ்வப்போது சின்னச் சின்னக் கவலைகள் வந்து நீங்கும். உங்கள் சஷ்டமாதிபதியும் பாக்கியாதிபதியுமான குரு பகவானின் புனர்பூசம் நட்சத்திரம் கடக ராசியில் 11.12.18 முதல் 13.2.19 வரை ராகு பகவான் செல்வதால், நீண்ட நாள் விருப்பங்கள் நிறைவேறும். புது வீடு கட்டி, கிரகப்பிரவேசம் செய்வீர்கள். வெளிநாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பிதுர்வழிச் சொத்துகளைப் பெறுவதில் இருந்த சிக்கல்கள் விலகும். வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். தந்தையின் ஆரோக்கியம் மேம்படும். மாணவ மாணவியர் தங்கள் தனித் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆய்வகங்களில் பரிசோதனையில் ஈடுபடும்போது கவனமாக இருக்கவும்.

வியாபாரத்தில் போட்டிகள் இருக்கத்தான் செய்யும். வியாபாரம் ஒரு நேரம்போல் மறு நேரம் இருக்காது. வேலையாட்கள் அடிக்கடி விடுப்பில் செல்வார்கள். அதனால் வேலைச்சுமை அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். தரமான பொருள்களை விற்பதன் மூலம் வாடிக்கையாளர்களைக் கவருவீர்கள்.

**கேதுவின் பலன்கள்:** உங்கள் ராசிக்கு 7 இல் கேது அமர்வதால், ஏமாற்றம் மற்றும் குழப்பங்களில் இருந்து மீள்வீர்கள். மனதில் தைரியம் பிறக்கும். பிரச்னைகளில் இருந்து விடுபடுவீர்கள். முடிந்தவரை சகிப்புத் தன்மையுடன் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. புது வாகனம் வாங்குவீர்கள். பிரபலங்களின் தொடர்பைச் சரியாகப் பயன்படுத்தி முன்னேறுவீர்கள். அரசாங்க விஷயங்கள் தாமதமாக முடியும். வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல் உண்டாகும்.

எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 29.11.17 வரை உங்கள் ஜீவனாதிபதி மற்றும் பூர்வ புண்ணியாதிபதியுமான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரம் 1, 2ம் பாதம் மகர ராசியில் கேது பகவான் செல்வதால், புதிய திட்டங்கள் நிறைவேறும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உங்கள் ராசியாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரம் மகர ராசியில் 30.11.17 முதல் 6.8.18 வரை கேது பகவான் செல்வதால், உங்களின் ஆளுமைத்திறன் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். சிறிய அளவில் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். 7.8.18 முதல் 13.2.19 வரை உங்கள் தனாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் 2,3,4ம் பாதம் மகர ராசியில் கேது பகவான் செல்வதால், எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

# வரலாற்றில் இன்றைய தினம்



1802 -நியூயோர்க் மேற்கு முனையில் ஐக்கிய அமெரிக்காவின் இராணுவப் பயிற்சி அக்கடமி திறக்கப்பட்டது.

1826-ஐக்கிய அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனம் செய்த ஐம்பதாவது ஆண்டில் இரண்டாவது அரச தலைவர் ஜோன் அடம்ஸும், மூன்றாவது அரசதலைவராக தோமஸ் ஜெபர்ஸனும் உயிரிழந்தனர்.

1827-நியூயோர்க் நகரில் அடிமைத்தனம் இல்லாமல் செய்யப்பட்டது.

1837-உலகின் முதலாவது நீண்ட ரயில் பாதை பேர்மிங்காம் மற்றும் லிவர்பூல் இடையே திறந்து வைக்கப்பட்டது.

1886-பிரான்ஸ் மக்களால், அமெரிக்க மக்களுக்குச் சுதந்திரச்சிலை வழங்கப்பட்டது.

1886-நேர அட்டவணைப்படி முதலாவது கண்டங்களுக் கிடையேயான, கனடாவின் தொடருந்து பிரிட்டிஷ் கொலம்பியாவின் மொண்டி துறைமுகத்தை வந்தடைந்தது.

1903-பிலிப்பைன்ஸ்-அமெரிக்கப் போர் உத்தியோகபூர்வமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

1903-மோட்டார் கார் பந்தயத்தில் போட்டியிட்ட முதல் ஆங்கிலப் பெண் ஆனார் டொறத்தி லெவிற்.

1910-ஆபிரிக்க அமெரிக்க குத்துச் சண்டை வீரன் ஜக் ஜோன்சன் அதிபார குத்துச் சண்டைப் போட்டி ஒன்றில் ஜிம் ஜெபறிஸ் என்பவரை வெற்றி பெற்றதையடுத்து அமெரிக்காவில் இனக் கலவரம் ஏற்பட்டது.

1911-வடமேற்கு ஐக்கிய அமெரிக்காவில் வெப்பக் கதிர் வீச்சினால் பதினொரு நாள்களில் 380 பேர் உயிரிழந்தனர்.

1918-ஓட்டோமன் சுல்தான் ஆறாம் மெஹ்முட் அரசாட்சியை இழந்தார்.

1951- செக்கஸ் லோவாக்கிய நீதி மன்று ஒன்றில் அமெரிக்க ஊடகவியலாளர் வில்லியம் என் ஓரிஸ் என்பவருக்க உளவு பார்த்த குற்றத்துக்காக பத்து ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

1951-வில்லியம் சொக்லி என்பவரால் ட்ரான்சிஸ்டர் கண்டு பிடிக்கப்பட்டது.

1976-பலஸ்தீன ஆயுததாரிகளால் கடத்தப்பட்டு உகண்டா என்டபே விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏயர் பிரான்ஸ் விமானப் பயணக் கைதிகளில் 4 பயணிகள் மற்றும் விமானிகள் தவிர்ந்த 102 பேர் இஸ்ரேலிய கமாண்டோ படைகளால் காப்பாற்றப்பட்டனர்.

1994- ருவாண்டா தலைநகர் கிஹலி ருவாண்டா தேசபக்த முன்னணியினரால் கைப்பற்றப்பட்டதையடுத்து நகரில் இனப்படுகொலை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

## நாளை

**ஆனி - 21**

புதன்கிழமை -05.07.2017

திதி:துவாதசி பி.இ. 04.37 வரை

நட்சத்திரம்: விசாகம் கா.07.55 வரை

சுபநேரம்:04.27-05.57 வரை

ராகுகாலம்:11.57-01.27 வரை

# குடாநாட்டில் அதிகரித்து வரும் நூதனமான திருட்டுச் சம்பவங்கள்

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக நுதனத்திருட்டுக்கள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்தத் திருட்டுக்கள் மக்களின் கண்முன்னாலேயே இடம்பெறுவதுதான் அதிசயமாக உள்ளது. யாழ். நகரப்பகுதியில் கதிரைகளைக் கொள்வனவு செய்த பெண் ஒருவர் அதைச் சாவகச்சேரியில் கொண்டுசென்று இறக்கிவிட்டுத் தனது வீட்டுக்கு கொண்டு செல்வதற்காகக் காத்திருந்த போது, வடி ரக வாகனத்தில் வந்தவர்கள் அந்தக் கதிரைகளை வாகனத்தில் ஏற்றினார்கள், அந்த பெண் "கதிரைகளை ஏன் வாகனத்தில் ஏற்றுகிறீர்கள்?'' என்று கேட்ட போது, அவர்கள் "நீங்கள் கேட்கும் விலைக்கு கதிரைகளைத் தரமுடியாதம்மா வேறு யாரிடமாவது வாங்குங்கள்'' என்று கூறிவிட்டு கதிரைகளை கொண்டு சென்றுவிட்டார்கள். அந்த பகுதியில் நின்றவர்கள் குறித்த பெண் அந்த வாகனத்தில் வந்தவர்களிடம் கதிரையை விலைபேசியிருக்கின்றார் அந்தப் பெண் கேட்ட விலைக்குக் கதிரையைக் கொடுக்காது சென்றுவிட்டார்கள் என நினைத்தார்களாம். பின்னர் தான் அவர்கள் திருடிச்செல்கின்றார்கள் என்று தெரிந்தது.

இதே போன்று வேலணைப் பகுதியிலும் நூதனமான முறையில் மாடுகள் மக்களுக்கு முன்னாலேயே கொண்டு செல்லப்பட்டு இறைச்சியாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அண்மையில் வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதாக ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது, அந்தத் தீர்மான்த்தின் படி அங்கு கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்படுகின்றன. இதைப் பயன்படுத்திய மற்றுமொரு கும்பல் மக்களுக்கு முன்னாலேயே மாடுகளை ஏற்றிச் செல்கின்றனர், அனுமதிப் பத்திரத்தோடு கட்டாக்காலி கால் நடைகளைப் பிடிக்கின்றோம் என்று கூறி அந்தக் கும்பல் மக்களின் வளர்ப்பு மாடுகள் பலவற்றைப் பிடித்துள்ளார்கள். ஏன் எமது மாடுகளைப் பிடிக்கின்றீர்கள்? எனக் கேட்ட போது பிரதேச சபையால் வழங்கப்பட்ட அடையாள அட்டையைக் காட்டியுள்ளார்கள். மக்கள் பால் கறந்து விட்டு மேய்வதற்காக அவிழ்த்து விட்ட மாடுகளையும் இவர்கள் பிடித்துச் சென்றுள்ளனர். மோட்டார் சைக்கிளில் பெரிய கயிறுகளோடு வந்தும் மாடுகள் பிடிக்கப்படுகின்றன.




இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகள் நான்கு கால்களும் கட்டப்பட்டு வடிரக வாகனத்தில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. ஒரு தொகுதி மாடுகள் அங்குள்ள ஒரு காணியில் கொண்டு சென்று அடைத்து வைக்கப்பட்டன. வாகனத்தில் ஏற்றாமல் நின்ற மிகுதியான மாடுகளைக் கால்களைக் கட்டிய நிலையில் மறைவான இடத்தில் போட்டு விட்டுச் சென்று விட்டார்கள்.

காலையில் மாடுகள் இருந்த இடத்துக்குச் சென்ற கேரதீவு மக்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். மாடுகள் கிடந்த இடத்தில் மாட்டுக் கால்களும் குடல்களும், குருதியும் காணப்பட்டன. இது தொடர்பாக அவர்கள் கிராம அலுவலகர், பொலிஸார், பிரதேச செயலர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர். பசுக்களின் மூலம் பால் கறந்து வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்யும் மக்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு எவர் பதில் கூறுவார்கள்? ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் விழிப்புக் குழுக்கள் எங்கே? என்ற கேள்விகள் எழுகின்றன. இப்படிப்பட்ட நூதனத்திருட்டுக்கள் முறியடிக்கப்படவேண்டும். மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். மக்களின் வயிற்றில் அடிப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுத் தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும். இது தான் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடோக்கு என்ன் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 4 | 5 | 6 | 7 | 9 | 3 | 1 |
| 6 | 7 | 1 | 9 | 3 | 8 | 4 | 5 | 2 |
| 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 6 | 8 | 7 |
| 2 | 6 | 9 | 7 | 8 | 5 | 3 | 1 | 4 |
| 4 | 1 | 8 | 2 | 9 | 3 | 7 | 6 | 5 |
| 7 | 3 | 5 | 1 | 4 | 6 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 6 | 3 | 2 | 4 | 1 | 7 | 8 |
| 1 | 8 | 7 | 6 | 5 | 9 | 2 | 4 | 3 |
| 3 | 4 | 2 | 8 | 7 | 1 | 5 | 9 | 6 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 4 | 9 | | 5 |
| | 1 | | | 9 | | | | |
| | 2 | | 8 | 3 | | | | |
| | 8 | | | | | 3 | | 2 |
| | | 6 | 3 | | 7 | 1 | | |
| 7 | | 1 | | | | | 6 | |
| | | | | 7 | 3 | | 5 | |
| | | | | 8 | | | 9 | |
| 3 | | 4 | 5 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிக்கோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## ஹொங்கொங் கலைஞரிடம் நயன்தாரா சண்டைப்பயிற்சி






இமைக்கா நொடிகள் திரைப்படத்துக்காக நயன்தாராவுக்கு ஹொங்கொங் கலைஞர் ஒருவர் சண்டைப் பயிற்சி வழங்கவுள்ளார்.

நயன்தாரா நடிப்பில் பெரும் எதிர்பார்ப்புடன் உருவாகிவரும் 'இமைக்கா நொடிகள்' திரைப்படத்தின் மீது திரையுலகின் பார்வை குவிந்துள்ளது. இந்தத் திரைப்படத்தில் இடம்பெறவுள்ள சைக்கிள் சண்டைக் காட்சிக்காக இயக்குநர் அஜய்ஞானமுத்து, ஹொங்கொங்கில் இருந்து உண்மையான சைக்கிள் சண்டைக் கலைஞரான லீ ஹான் யூ என்பவரை வரவழைத்துள்ளார். அதர்வா மற்றும் உள்ளூர் சண்டை நடிகர்களுக்கும் லீ ஹான் யு பயிற்சி அளித்து வருகிறார்.

இந்தச் சண்டைக் காட்சிகள் பெங்களூரில் படமாக்கப்பட்டு வருகின்றன.

இமைக்கா நொடிகள் திரைப்படம் இந்த வருடம் இறுதிப் பகுதியில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சிறிய முயற்சியும் அதிக நன்மை தரும். விலகிச் சென்ற உறவினரும் அன்புடன் நெருங்குவர். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பெண்களுக்கு தேவை தாராள செலவில் நிறைவேறும்.

**இடபம்:** நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மிதுனம்:** வழக்கத்திற்கு மாறான திடீர் பணி குறுக்கிடலாம். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் சீராக இருக்கும்.

**கடகம்:** முக்கிய பணிகளை பிறர் பொறுப்பில் தர வேண்டாம். எதிர்பார்ப்பு ஓரளவு நிறைவேறும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு அவசியம். வாகனத்தில் மித வேகம் பின்பற்றுவது நல்லது.

**சிங்கம்:** பேச்சு, செயலில் நேர்மையைப் பின்பற்றுவீர்கள். பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் விற்பனை உயர்வால் ஆதாயம் அதிகரிக்கும்.

**கன்னி:** சிலர் உங்களிடம் கொடுத்த வாக்குறுதியை மீறி நடப்பர். பொறுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற விடாமுயற்சி தேவை. பயணத்தில் கூடுதல் கவனம் வேண்டும்.

**துலாம்:** கடந்த கால உழைப்பின் பலனை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து இருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை பெற யோகம் உண்டு.

**விருச்சிகம்:** சுய கவுரவம் நிலைநாட்டுவதில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். வருமானம் சீராக இருக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.

**தனுசு:** குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பெண்களுக்கு விருந்து, விழாவில் கலந்துகொள்ள அழைப்பு வரும்.

**மகரம்:** பெருந்தன்மையுடன் எதிரியையும் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கும்பம்:** சொந்தப் பணிகளில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற்ற தாமதமாகும். இலாபம் சுமாராக இருக்கும். உடல்நிலை திருப்தியளிக்கும்.

**மீனம்:** யாருக்கும் தகுதி மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். முக்கிய செலவுக்கு கடன் பெற நேரிடலாம். சிலருக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

கொய்யால எத்தனை தட்டை மாத்துறது இப்ப உடைங்கடா பாப்போம்....



நல்லாப் பாரு...



அந்த மஞ்சள் நிற பாவாடை போட்ட பிள்ளையத்தான் நீ துரத்தனும் நான் காப்பாத்துற மாதிரி நடிக்கனும்...

ஒரு வயசு பொண்ணு நின்மதியா கடைக்குப் போக முடியல... எப்படி பாக்கிறான் பாரு... குறு... குறுன்னு...



காதலித்து வெற்றி பெற்றவனுக்குத்தான் தெரியும்...



வெற்றி எவ்வளவு கொடுமையானது என்று...

வாலு
வாழ்க்கையில் காயப்படுத்தும் விடயங்களே கற்றுக் கொடுக்கவும் செய்கின்றன...


ஆண்களுக்கு அன்பை வெளிக்காட்டத் தெரியாமல் இருப்பதும் பிரச்சினையே...
பெண்கள் அன்பை அதிகமாக வெளிக்காட்டிக் கொண்டிருப்பதும் பிரச்சினையே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானையும், எறும்பும்

யானை ஒன்று காட்டுக்குள் சுதந்திரமாக உலாவித் திரிந்தது. அப்போது அதன் முன்னால் எறும்புப் படை ஒன்று வரிசையாகப் போய்க் கொண்டிருப்பதை யானை கண்டது. "ஐயோ பாவம் எவ்வளவு சின்னப் பிராணிகள். இவைகளுக்கு இந்த சின்ன உடம்புக்குள் கண், காது, மூக்கு என்று அத்தனை உறுப்புக்களும் இருக்க முடியுமா? அல்லது அவற்றில் ஒன்றோ பலதோ இல்லாத ஊனப் பிறவிகளா? இவை" என தன்னுடன் கூட வந்த யானையிடம் ஏளனமாக பேசிக் கொண்டது பெரிய யானை. இந்த ஏளன வார்த்தைகள் எறும்புகளின் காதுகளில் விழாமல் இல்லை. யானையோ தன் பெரிய கால்களால் பல எறும்புகளை மிதத்து. இதனால் பல எறும்புகள் மாண்டு போயின. யானைக்கு தான் மிருகங்களில் பெரியவன் என்ற மமதை.

மற்றொரு நாள், அதே யானை தன் துணையுடன் ஒரு மரத்தின் கீழ் இளைப்பாறியது. பின்னர் இரண்டும் எழுந்து நடக்கத் தொடங்கின. அப்போதும் எறும்புகளின் நிரை எதிரே குறுக்கிட்டது. "இதோ பார் இந்த எறுப்புகளுக்கு வேறு வேலையே இல்லைப் போலும். எப்போதுமே அணி வகுத்துக் கொண்டு உணவு தேடச் செல்கின்றனவாம். சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது. இவைகளுக்கு வயிறு என்ற ஒன்று எங்கே இருக்கிறது எனத் தெரியவில்லை. எங்களது வயிறு இவ்வளவு பெரிதாக இருக்கிறதே! எமக்குத்தான் பசியும் இருக்கும். உணவுத் தேவையும் இருக்கும். இவை அற்ப பிராணிகள் எப்போதும் உணவு தேடிக் கொண்டே இருக்கின்றனவே இந்த அற்ப உயிர்களை அந்த இறைவன் ஏன் தான் படைத்து வைத்தானோ? தெரியவில்லை" என மீண்டும் ஏளனம் பேசி படி நடந்தன.



திடீரென்று யானையின் காதுக்குள் 'சுளீர்" என்று வலித்தது. யானை சுளகு (முறம்) போன்ற தனது காதுகளை வேகமாக ஆட்டி ஆட்டிப் பார்த்தது. வலி குறையவே இல்லை. காதுக்குள் ஒரே குடைச்சலாக இருந்தது. அப்போது காதுக்குள் இருந்து ஒரு குரல் கேட்டது. யானை "யாரது" என்று மிரண்டது. காதுக்குள் இருந்து குரல் வருவதை அது எதிர்பார்க்கவேயில்லை. "நான் தான் எறும்பு பேசுகிறேன். நான் ஒரு மிக மிகச் சிறிய அற்ப பிராணி. ஆனால் இவ்வளவு பெரிய உன்னையும் என்னால் அலற வைக்க முடியுமே "என்றது எறும்பு. "பேசாமல் வெளியில் வந்து விடு. வலிதாங்க முடியவில்லை! உன்னை ஏளனம் செய்த என்னை மன்னித்து விடு" என்று கெஞ்சியது யானை காதினுள் வேதனை தாங்க முடியாது.

"யானையே தோற்றத்தை வைத்து எவரையும் மதிப்பிடாதே! பார்த்தாயா மிகப் பெரிய உடம்பை வைத்திருக்கும் உன்னால் மிகச் சிறிய உயிரான நான் கொடுக்கும் குடைச்சலையும், துன்பத்தையும் தாங்க முடியவில்லையே! சின்ன உயிர்களுக்கும் பெரிய உயிர்களுக்கும் உலகில் என்ன கடமையுள்ளது என்பது படைத்த இறைவனுக்குத் தான் தெரியும். நீ உன்பாட்டில் உன் வேலையைப் பார். நான் என்பாட்டில் என் வேலையைப் பார்ககிறேன் உனக்கு புத்தி தெளிய வேண்டும் என்பதற்காகவே உன் காதில் புகுந்தேன். மற்றப்படி உனக்கும் எனக்கும் ஒரு விரோதமும் கிடையாது" என்று கூறி யானையின் காதிலிருந்து வெளியேறியது எறும்பு.

**எவரையும் அவரின் வெளித் தோற்றத்தை வைத்து மதிப்பிடக் கூடாது.**
**எவரையும் ஏளனம் செய்யவும் கூடாது.**

## நான் பார்வையிட்ட புத்தகக் கண்காட்சி

- கண்காட்சிகள் பல துறைகளிலும் நடத்தப்படுகின்றன.
- கைத்தொழில் கண்காட்சி கல்வித்துறைக் கண்காட்சிகள் இப்படி பல கண்காட்சிகள் நடாத்தப்படுகின்றன.
- எனக்கு புத்தகக் கண்காட்சி பார்ப்பதில் விருப்பம் அதிகம்.
- கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த ஆண்டு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி நடைபெற்றது.
- நான் காலை ஒன்பது மணிக்கு முன்னரே மண்டபத்தை அடைந்து விட்டேன்.
- அங்கே என்னைப் போன்ற மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் பெருமளவில் திரண்டிருந்தனர்.



- என் தந்தையின் உதவியுடன் காலை 9.30 மணிக்கு மண்டபத்தின் உள்ளே நுழைந்தேன்.
- மண்டபத்தின் பல பகுதிகளிலும் பல லட்சக் கணக்கான நூல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டி ருந்தன.
- பாடசாலை மாணவர்களுக்கான நூல்களே பெருமளவில் காணப்பட்டன.
- அவற்றைச் சுற்றிப் பார்ப்பதே எமக்கு முதல் வேலையாக இருந்தது.
- நண்பகல் பன்னிரண்டு மணி வரை பல வகையான நூல்களைப் பார்வையிட்டோம்.
- 316 நூல் விற்பனைக் கூடங்களும் அங்கிருந்தன.
- இவற்றில் எனக்குத் தேவையான நூல்களைத் தந்தையின் உதவியுடன் தெரிவு செய்து வாங்கிக் கொண்டேன்.
- இந்தக் கண்காட்சியில் இலங்கையிலுள்ள புத்தக வெளியீட்டாளர்கள் மட்டுமன்றி பிற நாட்டவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.
- இந்தக் கண்காட்சியை இலங்கைக் கல்வி அமைச்சே நடத்தியது.
- இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டதன் மூலம் எத்தகைய நூல்கள் பதிப்பாகி உள்ளன என்ற விடயங்களைத் தெரிந்து கொண்டேன்.
- எமக்குத் தேவைப்படும் நூல்களை எங்கு பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறிந்து கொண்டேன்.
- இத்தகைய புத்தக கண்காட்சிகள் கொழும்பில் மட்டுமல்ல இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் நடைபெற வேண்டும். ஏனெனில் எல்லா மாண வராலும் கொழும்பு சென்று இவற்றைப் பார்க்க முடியாது.
- ஆதலால் எல்லா மாவட்டங்களிலும் காலத்துக்கு காலம் புத்தகக் கண்காட்சிகள் நடைபெறுமாயின் எல்லோரும் கண்டுகளிக்க வாய்ப்புக் கிடைக்கும்.

## சிந்தனைப் புதிர்




ஆசிரியர் ஒரு நாள் மாணவர்களை மிருகக் காட்சிச்சாலைக்கு அழைத்துச் சென்றார். மாணவர்கள் எல்லோரும் அங்கிருந்த விதம் விதமான பறவைகள் விலங்குகள் எல்லாவற்றையும் கண்டு குதூகலித்துக் கொண்டிருக்க, ஒரு மாணவன் மட்டும் பறவைகள் வில்ங்குகளின் தலைகளையும் கால்களையும் கணக்கிட்டுக் கொண்டிருப்பதை ஆசிரியர் கவனித்தார். மிருகக்காட்சி சாலைக்கு வெளியே வந்த பின் ஆசிரியர் அந்த மாணவனிடம் "அங்கு நீ என்ன பார்த்தாய்?" என்று கேட்டார். மாணவனோ, 50 தலைகளையும் 130 கால்களையும் பார்த்தேன்" என்றான். உடனே இதனைக் கேட்டு மாணவர் எல்லோரும் சிரித்தனர். ஆனால் ஆசிரியர் அதனை வைத்துக் கொண்டுமாணவர்களின் மூளைக்கு வேலை கொடுத்தார். 50 தலைகள் 130 கால்கள் என்றால் இந்தக் மிருகக் காட்சிச் சாலையில் உள்ள மிருகங்கள் எத்தனை? பறவைகள் எத்தனை? விடை கூறுங்கள் என்றார்.

**விடைகள்** ------------------------------

இரண்டு நண்பர்கள் புறப்படும் பொழுது அவரவரிடம் உள்ள பணத்தை ஒப்பிட்டு பார்த்தனர். முதல் நண்பர் "எனக்கு நீ நூறு ரூபா கொடுத்தால் உன்னைப் போல நான் இரு மடங்கு பணம் உள்ளவனாவேன்" என்றான். மற்றவன் "இவ்வளவு தானா? நீ எனக்கு பத்து ரூபாய் கொடுத்தால் நான் உன்னைப் போல ஆறு மடங்கு பணமுள்ளவனாகி விடுவேன்" என்றான். அப்படியானால் நண்பர்கள் இருவரும் தனித்தனியே வைத்திருந்த பணத் தொகை எவ்வளவு?

**விடைகள்** ------------------------------

## புள்ளிகளை இணைத்து உருவத்தை முழுமை செய்வோம்



## செவிலித் தாய்மார் (வளர்ப்புத்தாய்கள்)

அமெரிக்காவில் மான் ஒன்று ஒரே நேரத்தில் மூன்று குட்டிகள் ஈன்றது. இவற்றில் ஒரு குட்டி வளர்ச்சி குறைந்து குட்டையாக இருந்தது. அந்தக் குட்டியை ஐயோவா மாநிலத்தைச் சேர்ந்த கேல் பிரடகெக் என்பவர் தன் வீட்டுக்கு எடுத்து வந்து வளர்க்கிறார். 'கெல்சி' என்று பெயரிட்ட அந்த மான் குட்டிக்கு அவர் வளர்க்கும் நாய், பால் கொடுத்து தனது குட்டியைப் போல பாசம் காட்டி பராமரிக்கிறது. 'கொஞ்சி விளையாடுகிறது.



நாமக்கல் மீன்னாம் பள்ளியைச் சேர்ந்த கிங்கிளி கோவிந்தராஜ் ஆடு, மாடுகளை வளர்த்து வருகிறார். அவரின் ஆடு ஒன்று மூன்று குட்டிகளை ஈன்றது. தாய் ஆட்டுக்கு என்ன கோபமோ இரண்டு குட்டிகளுக்கு மட்டும் பால் ஊட்டும். மூன்றாவது குட்டியைப் புறக்கணித்து விடும். வீட்டுக்காரர் வேறு வழியின்றி அந்தக் குட்டிக்கு புட்டிப்பால் கொடுக்க ஆரம்பித்தார். அதே நேரம் அவர் வளர்த்த பசு ஒன்று கன்று ஈன்றது. இதையடுத்து அந்தப் பசு மாட்டிடம், தாயால் புறக்கணிக்கப்பட்ட ஆட்டுக் குட்டி பால் குடிக்க முயன்றது. முதலில் அதற்கு மறுத்த பசுமாடு, பால் வடியும் முகம் கொண்ட ஆட்டுக் குட்டியைப் பார்த்ததும் மனம் இரங்கிப் போனது. கன்றுக் குட்டி பால் குடிக்கும் போது, ஆட்டுக்குட்டியும் பசுவின் மடியில் பால் குடிக்கத் தொடங்கியது. ஆட்டுக்குட்டி பசுவினால் தத்தெடுக்கப்பட்ட பிள்ளையோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றிருந்தனர். அங்கு மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது. குறித்த போராட்டத்தில் ராஜபக்சவுடன் அவரது மகன் நாமல் ராஜபக்ஸவும் கலந்து கொண்டார். வாசுதேவ நாணயக்கார, தினேஸ் குணவர்தன, மகிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, ஜீ.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும எனக் கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். (த)

## மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்" இவ்வாறு வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கான 2017ஆம் ஆண்டுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்களை வழங்கும் ஆரம்ப நிகழ்வு முதற்கட்டமாக மன்னார் மாவட்டத்தில் நேற்றுத் திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சின் உப அலுவலகத்தில் நடைபெற்றது. திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடங்களில் இந்த வாழ்வாதார உதவித்திட்டங்களில் பயன்பெற்ற பயனாளிகள் பற்றிய மீளாய்வுத் தொடர் நடவடிக்கை கடந்த வருட இறுதியில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டது. அதன் பெறுபேறு மகிழ்ச்சிகரமானதாக உள்ளது. திட்டங்களை சரியான முறையில் பயன்படுத்துபவர்கள் அதிக வருவாயைப் பெறுவதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்தத் திட்டத்தைக் குழப்புவதற்கு அல்லது நிறுத்துவதற்கு பலர் முன்னிற்கின்றார்கள். இதுவரை காலமும் கொழும்பு அரசிடம் இருந்து எதுவித நிதியும் போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு பயன்படுத்துமாறு அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த விடயத்தை அனைவரும் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும். இந்த வேலைத்திட்டமானது பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் எனது தற்துணிவால் 2014ஆம் ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத்திட்டத்தில் எனது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு அங்கமாக இந்த விடயத்துக்கு முக்கிய பங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

பல கிராமங்களுக்குச் சென்று மக்களை சந்தித்த வேளையில் எமது இனத்துக்காக பல தியாகங்களை செய்து மறுவாழ்வு பெற்று வந்தவர்களும், தமது பிள்ளைகளை மாவீரர்களாக விதைத்த பெற்றோரும் படும் நெருக்கடிகளை மனதில் இருத்தி அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் வந்தது. எனவே நான் இதனை ஆரம்பித்தேன்.

எவ்வாறான தடைகள்வரினும் நான் இதனை நிறுத்தப்போவதில்லை. கடந்த வருடங்களிலும் சரி தற்போதும் இந்தத் திட்டங்கள் அனைத்தும் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளுக்கும், நிதி பிரமாணங்களுக்கும் அமைவாகவே பயன்படுத்தப்படுகின்றன. இதனை குழப்பவேண்டுமென செயற்பட்டு வரும் சில புல்லுருவிகளை மக்கள் இனங்கண்டு கொள்ளவேண்டும்.

கடந்த வரவு செலவுத்திட்டத்தின்போது இந்த வேலைத்திட்டதுக்கு நிதிபோதாமல் இருக்கின்றது எனவும் மாகாண சபைக்கு வரவேண்டிய மாகாண ஆளுநரிடம் உள்ள ஏறக்குறைய 140 மில்லியன் ரூபா நிதியைப் பெற்றுத் தாருங்கள் என நான் கேட்டுக்கொண்டேன். எனினும் அப்போது பலர் மௌனிகளாக இருந்துவிட்டு போராளிகள், மாவீரர் குடும்பங்களுக்கு நிதி ஒதுக்க விருப்பம் தெரிவிக்காதவர்கள் தற்போது தமிழ்த்தேசியம் பேசிக்கொண்டு நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர் - என்றார். (வ-21)


### வீடு விற்பனைக்கு

யாழ். நகரை அண்மித்த பகுதியில் வீடு விற்பனைக்கு உண்டு.
(தரகர்கள் தேவையில்லை)
தொடர்புகளுக்கு.
077 199 8747,076 991 0303

### பதவி வெற்றிடம்

பலகம்பனிகளின் முகவர் நிறுவனமாகிய எமது நிறுவனத்தின் யாழ்மாவட்ட விரிவாக்கலின் ஒருபடியாக எமது நிறுவனத்துக்கு பின்வரும் வெற்றிடம் உடனடியாகக் காணப்படுகின்றது.

1. அலுவலக உத்தியோகத்தர் (ஆங்கிலம்,Computer கட்டா யமானது)
2. விற்பனைப் பிரதிநிதி (மிகக்குறைந்த கல்வியறிவுG.C.E ,O/L போதும்) குறிப்பு :- முன் அனுபவம் விரும்பத்தக்கது. சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும் வாரநாள்களில் 9-11 (am)

62/33,பழையதபாற்கந்தோர், யாழ்ப்பாணம்.

078 500 0580


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12.04.1955 — இறப்பு 15.07.2016



### கந்தையா கிருஷ்ணர்

திதி - ஏகாதசி (04.07.2017)

பண்பின் இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவமாய் எமக்கு
நல்வழி காட்டியாய் வாழ்ந்து
எம்மை விட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் பாச நினைவுகள் என்றும்
எம் மனதைவிட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மீசாலை கிழக்கு, மீசாலை. — குடும்பத்தினர்.

## வருஷாப்திக அழைப்பு

கொக்குவில் கிழக்கு சோமசுந்தரஜயரின் புத்திரியும் அராலி ஞானியார் ஆலய முன்னாள் பிரதமகுருக்கள் சிவசுப்ரமணியசர்மாவின் மனைவியுமாகிய ஞானசௌந்தரியம்மாவின்

### ஓராண்டு சிரார்த்தம்



சென்ற துர்முகி வருடம் ஆனி31 ஆம் நாள் (16.07.2016) சனிக்கிழமை பூர்வபக்க ஏகாதசித் திதியில் இறைபதம் அடைந்த எமதுகுடும்பத் தலைவி

அமரர்

### ஞானசௌந்தரியம்மா சிவசுப்ரமணியசர்மா

அவர்களின் வருஷாப்திகம் நிகழும் ஏவிளம்பி வருஷம் ஆனிமாதம் 20 ஆம் நாள் (04.07.2017) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்துநடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானியார் கோவிலடி,
அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. — பிள்ளைகள்.

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பூத்தது 09 . 06 . 1938



உதிர்ந்தது 05 . 06 . 2017

கடந்த 05.06.2017 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### அமரர் நித்தியலட்சுமி குணபாலசிங்கம்


அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு சகல வகையிலும் உதவி புரிந்தவர்களிற்கும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் அளித்தவர்களிற்கும் மேலும் பல வழிகளிலும் உதவிகளைப் புரிந்து எமது துயரில் தோள்கொடுத்தவர்களிற்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (05.07.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

958/31, கே.கே.எஸ். வீதி,
தலையாழி, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்
021 222 0830,
077 784 8424

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 31.07.1929

மறைவு 07.04.2003

### பொன்னையா தங்கராசா

பிறப்பிடம் - தெல்லிப்பழை,
வசிப்பிடம் - சுதுமலை

நேசத்துடனும் அன்பும் பாசத்துடனும்
ஒரு கூட்டுக் கிளியாக எமை வளர்த்து ஆளாக்கி
நேர்வழியில் வாழவைத்த எம் குடும்ப சூரியன்
எம் அன்புத் தெய்வத்தை எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகிறோம்.

அண்ணாமலை வீதி, சுதுமலை. — குடும்பத்தினர், (குருபரன்)

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் கல்வி வலயத்தின்அருணோதயாக் கல்லூரியில் சங்கீத ஆசிரியையாக பணியாற்றி இயற்கை எய்திய ஆசிரியை

### திருமதி செல்வராணி செல்வராஜா (செல்வி ரீச்சர்)

கடந்த 30.06.2017 மரணமடைந்ததை இட்டு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர்
அண்மையில் ஓய்வுபெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் (அழகியல்)
வலிகாம கல்வி வலய இசையாசிரியர்கள்

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரி சீற்றா பிரான்சிஸ்



முல்லைத்தீவை பிறப்பிடமாகக் கொண்டவரும், திருச்சிலுவை துறவற சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி சீற்றா பிரான்சிஸ் (Sr.Zita Francis) 02.07.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

இவரின் ஆன்ம சாந்திக்கான இரங்கல் திருப்பலி கடற்கரை வீதியில் அமைந்துள்ள திருச் சிலுவை துறவற சபை சிற்றாலயத்தில் இன்று (04.07.2017) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி கிளேயா சுவானி.
மாகாணத் தலைவி

### திருமதி மகேஷ்வரி குமாரசாமி



மட்டக்களப்பு, அன்னமலையைப் பிறப்பிடமாகவும், யாழ்.நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஷ்வரி குமாரசாமி அவர்கள் 02.07.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அமராவதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரோஜினிதேவி, ரஞ்சிதாதேவி, விஜயராணி, பாஸ்கரன், பாலச்சந்திரன், பாலமோகன், நாகஜோதி, பாலசிறி, பாலகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், லட்சுமி, காலஞ்சென்ற அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மருமக்களின் அன்பு மாமியாரும், பேரப்பிள்ளைகளின் அன்புப் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் அன்புப் பூட்டியும், கொள்ளுப்பேரப்பிள்ளைகளின் அன்பு கொள்ளுப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2017) புதன்கிழமை 534-19-34 Palum Sainanvaithai, 1st Lane, Kirisen Road, Thalupathai, Negombo என்னும் முகவரியில் நடைபெற்றுப் பின்னர் பிற்பகல் 3.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணிவரை பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
671/1, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தா.கிருஸ்ணசாமிப் பத்தர் குடும்பத்தினர்.

077 641 8596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 671
சீட்டிழுப்பு திகதி 03.07.2017 திங்கட்கிழமை
C 25 32 72 73
சுப்பர் ஜக்பொட்
ரூ. 50,992, 448/=
வெல்லப்படவில்லை
13 47 63 65
பச்சை நிறடிக்கட்டுகள் 06.07.2017 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1377
சீட்டிழுப்பு திகதி 2017.07.03
06 27 38 49 D 46 57 61 63
ரூ. 14,413,044/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2898 திகதி 03.07.2017
01 22 36 44 M 40 69, 645,532/-
04 05 52 53
ஊதா நிற டிக்கட்டுகள் 2017.07.05 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## மரண அறிவித்தல்

### கந்தையா செல்லத்துரை



இலகடி, கோப்பாய் வடக்கைப் பிறப்பிட மாகவும், இராசவீதி, நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லத்துரை நேற்று (03.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கந்தையா - சுந்தரம் தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்புமருமகனும் ராங்கநாதன், ரகுநாதன், ரஞ்சநாதன், பவானி, பார்வதனி (பிரதேச செயலகம், சங்கானை), பாலநந்தினி, பாலகுமாரினி (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பகீரதி, யசோதா, பிரதீபா, செந்தில்நாதன், வரதராசன், பாலச்சந்திரன், பிரகாஷ் (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் விஷ்ணுகாந்த், நர்த்தனா, ரக்சாயினி, சாருகா, ஹரிணி, துவாரகா, யாதவன், சுஜீவன், நிர்விகா, ஆர்த்திகா, கபீசன், டர்சன், கபீர்த்தனா, சுலக்சன், ரதினிகா, கரிசிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2017.07.04) செவ்வாய்க் கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 1.30 மணிக்கு கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**இராச வீதி, நீர்வேலி மேற்கு.** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### லில்லிமலர் ஜோசெப்



தோற்றம் 1946.08.30 மறைவு 2017.07.03

புதுவீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட லில்லிமலர் ஜோசெப் நேற்று (03.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஜோசெப் (தியாகு) வின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான முத்துராசா - பூமணி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நாகநாதி - அருளம்மா தம்பதியரின் அன்புமருமகளும் நேசமலர் காலஞ்சென்றவர்களான அன்ரன் ஜீவமலர் மற்றும் றவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் விஜி, பாப்பா, சூட்டி, ஜெகன், நிலா, றொசாந்தன் ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (2017.07.04) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் பி.ப. 3 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 12 . 1953



மறைவு 03 . 07 . 2017

### முத்தையா பரஞ்சோதி

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், மண்கும்பானை வாழ்விடமாகவும் இல.86, பாலவிநாயகர் வீதி, தவசிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா பரஞ்சோதி காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற முத்தையா - மகேஸ்வரி தம்பதியரின் மூத்தபுதல்வனும் மண்கும்பானைச்சேர்ந்த காலஞ்சென்ற நடராசா - மகேஸ்வரிதம்பதியரின் அன்பு மருமகனும் இராசலட்சுமியின் கணவரும் சதீஸ் (சுவிஸ்), கௌசிகன், நகுலன் (லண்டன்), றுக்ஷன் ஆகியோரின் தந்தையும் ஜெகசோதி, அருட்சோதி (கனடா), சிவசோதி, பஞ்சசோதி (பிரான்ஸ்), தவசோதி, ஞானசோதி, நவசோதி (பிரான்ஸ்), திருச்சோதி, பத்மசோதி, குணசோதி (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் சாந்தினி, ஜெயந்தி (கனடா), புஸ்பராணி, ரஞ்சினி (பிரான்ஸ்), கலைஅழகன், சசிகலா, தயாசுகி (பிரான்ஸ்), விஜி, முகுந்தன், சிவநேசன் (கனடா), தவலக்ஷ்மி (சுவிஸ்) காலஞ்சென்ற தர்மரத்தினம், சற்குணதேவி (லண்டன்), யோகராசா (லண்டன்) காலஞ்சென்ற சிவயோகராசா ஆகியோரின் மைத்துனரும் குமரேசு (சுவிஸ்) வின் உடன்பிறவாச்சகோதரனும் பவளாம்பிகை, விஜயரத்தினம் (லண்டன்) காலஞ்சென்ற ஸ்ரீகலா ஆகியோரின் சகலனும் செல்வரூபி, பிரியா ஆகியோரின் அன்பு மாமனும் ஜிந்து, ஜரிசன், டிலஸ்னா, ரித்தி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**077 8525 318 (சிவம்).** தகவல்:
**077 5122 759** **குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



## பாலசுப்பிரமணியம் மதியழகன்

தர்மகர்த்தா, வேலணை வடக்கு, இலந்தை வனம் சித்தி விநாயகர் ஆலயம்

**மதி!**
**பலர் வாயிலும்**
**இவன் நாமம்தான் துதி.**
**இலந்தை வனத்து பதிக்கும்**
**இவன்தான் கதி.**
**கறை படியாத மனம்**
**குறை காணாத குணம்**
**நிறைந்த உள்ளம் நிமிர்ந்த நடை**
**இறைவா...! இவனுக்கேன் இவ்விதி?**
**ஊரோடு வாழ்ந்த ஊர்க்குருவி**
**உயரப் பறந்ததோ உயிர்உருவி**
**மண்ணோடு வாழ்ந்த மண்புழு**
**மலையேறி மடிந்ததே - இது விதி**
**பாதிகூட வாழவில்லை - அதற்குள்**
**ஊதிவிட்டா போனாய் உயிரை**
**மாதமொன்றும் ஆகவில்லையே - ஆசை**
**மகளைக் கரைசேர்த்து**
**பாதகம் செய்தறியாப் பாவியே - நீ**
**போன திசை நோக்கித் துடிக்குதெம் ஆவியே**
**யாரைத்தான் பார்த்து இனியுன்**
**பேரைச் சொல்லி அழைப்பது?**
**மதி - உனக்கு நீயே நிகர்!**
**உனையிழந்ததே தீராத் துயர்!**
**அடைக உன் ஆத்மா சாந்தி!**



### இதயம் உருக அஞ்சலிப்பவர்கள்

**புதிய நதியா நகைமாடம்**
**இல - 73, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**கந்தவேலன் ரேடர்ஸ்**
**இல - 110, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பாலவிநாயகர் மோட்டேர்ஸ்**
**இல - 8, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**- வேலணையூர் சுரேஷ், கல்வியங்காடு -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

அத்துடன் 15 சதவீதம் தொடக்கம் 20 சதவீதம் வரையிலேயே பௌதீக ரீதியிலான முன்னேற்றத்தையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வடக்கு மாகாண சபையின் அமைச்சகங்கள் மற்றும் திணைக்களங்களின், 2017 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரையிலான நிதி முன்னேற்ற அறிக்கை மற்றும் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரையிலான பௌதீக முன்னேற்ற அறிக்கை' தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டது.

வடக்கு மாகாண பிரதித் தலைமைச் செயலாளர் திட்டமிடல் அலுவலகத்தின் தகவல் அலுவலர் பி.ஜோன்சன் பதில் வழங்கியுள்ளார். அந்தப் பதிலில், 2017ஆம் ஆண்டின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையின் கீழ் 551.2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. மே மாதம் 31 ஆம் திகதி வரையில் 52.6 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. திணைக்களங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்களில் ஏறத்தாழ 30 சதவீதம் வரையான பௌதீக முன்னேற்றத்தை அவதானிக்க முடிகின்றது.

2017ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் ஆயிரத்து 657.18 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. செயற்றிட்டங்களுக்கான அனுமதி 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதியில் கிடைக்கப் பெற்றது. மே மாதம் 31ஆம் திகதி வரையில் 50.81 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. சகல திணைக்களங்களும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் 15 சதவீதம் தொடக்கம் 20 சதவீதம் வரையிலான பௌதீக முன்னேற்றத்தையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது என்று பதில் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் 52.6 மில்லியன் ரூபா மே மாதம் 31 ஆம் திகதி வரையில் செலவு செய்யப்பட்டுள்ளதாக தகவலுக்கான உரிமைச் சட்டப் பதிலில் வழங்கப்பட்டுள்போதிலும், வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தில் 54.04 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்று மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையில் 50.81 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக வழங்கப்பட்டுள்ள பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் இணையத்தளத்தில் 68.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## ஐ.நா...

னரால் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் ஐ.நா. தலைமையகத்துக்கு முன்னால் குறித்த தரப்பினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் மற்றும் குடும்ப உறவினர்களை மீட்டுத் தருமாறு வலியுறுத்திக் கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவினர்கள் கடந்த 114 நாள்களுக்கு மேலாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற விடயமும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த தகவல்கள் இல்லை மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் ஆலோசனைகளைப் பெறாமல், காணாமற்போனோர் பணியகத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு குறித்த மனு மூலமாக ஐ.நா செயலாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கு)

## மயிலிட்டித்துறை...

தங்களின் சந்தோசங்களை வெளிப்படுத்தினர். காணி விடுவிக்கப்பட்டதுமே தமது பூர்வீக ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்தினர். மயிலிட்டித்துறைமுகத்தில் நின்று படங்களையும் எடுத்துக் கொண்டனர்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி மயிலிட்டி மக்கள் இடம்பெயர்ந்தனர். நலன்புரி நிலையங்கள், உறவினர், நண்பர் வீடுகள், வாடகை வீடுகள் என்று நிம்மதியற்ற வாழ்க்கையைக் கடந்த 27 ஆண்டுகளாகக் கழித்துக் கொண்டிருந்தனர்.

மயிலிட்டித்துறைமுகம் விடுவிக்கப்படவே மாட்டாது என்றும், வலி.கிழக்கு அக்கரையில் மாற்றுக் காணி வழங்கலாம் என்றும் கடந்த ஆட்சித் தரப்புக்கள் தொடர்ச்சியாகக் கூறிவந்தன. மக்கள் தமது காணி மீட்புக்காகப் பல்வேறு போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்திருந்தனர். நீண்டகாலப் போராட்டத்தின் பின்னர், மயிலிட்டி மக்களுக்குப் பொருளாதார வளம் கொழிக்கும் மயிலிட்டித்துறைமுகம் மற்றும் அதனோடு இணைந்த 54.6 ஏக்கர் நிலப்பரப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தக் காணி விடுவிப்பின் ஊடாக 187 குடும்பங்கள் சொந்த மண்ணில் குடியமர்வதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மக்களின் காணியை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு, மயிலிட்டித் துறைமுகப் பகுதியில் நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி, காணி விடுவிப்புக்கான பத்திரத்தை மாவட்டச் செயலரிடம் வழங்கினார்.

தமது சொந்த மண்ணை ஆசையாய் பார்வையிட வந்த மக்கள், துறைமுகப் பகுதி அதனோடு இணைந்துள்ள ஏனைய பிரதேசங்களில் கூடிக் கூடி நின்று பேசினர். தமது கடந்த கால நினைவுகளை இனிமையான தருணங்களை மீட்டெடுத்துப் பகிர்ந்து கொண்டனர். ஒளிப்படங்களையும் எடுத்தனர். நேற்றைய தினமே மயிலிட்டித்துறைமுகத்திலிருந்து மீன்பிடி நடவடிக்கைக்கும் படகுகள் சென்றன.

மயிலிட்டித்துறைமுகத்துக்கு அருகிலிருந்த ஆலயத்துக்குக் கடந்த காலங்களில், பாதுகாப்புத் தரப்பினரிடம் அனுமதி பெற்று மக்கள் வந்திருந்தனர். அந்த ஆலயங்கள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதால், அவற்றைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையை நேற்று உடனடியாகவே முன்னெடுத்திருந்தனர்.

மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த பின்னர் பிறந்த தமது பிள்ளைகளுக்கு, தமது பூர்வீக நிலங்களைப் பெற்றோர் அடையாளம் காண்பித்தனர். அவர்களும் தமது மூதாதையரின் நிலங்களை ஆர்வத்துடன் பார்த்ததை அவதானிக்க முடிந்தது. (த-5)

## விடுவிக்கப்படாது...

கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணி விடுவிப்பானது ஒரு படி மட்டுமே.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மயிலிட்டித்துறைமுகம் மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1990ஆம் ஆண்டு இந்த மக்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தனர். 2015ஆம் ஆண்டு நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படும் வரையில், மயிலிட்டித் துறைமுகம் விடுவிக்கப்பட மாட்டாது என்றுதான் கூறப்பட்டது. ஆனால் இன்று ஓர் மாற்றத்தின் மூலம் அந்தத் துறைமுகம் விடுவிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் இந்தத் துறைமுகம் எங்களுக்கு முக்கியமானது. அதன் காரணமாகவே காணி விடுவிப்புத் தொடர்பான எல்லாப் பேச்சுக்களின்போதும் இந்தத் துறைமுகத்தின் விடுவிப்புப்பற்றி நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

நாம் இந்த அரசுக்கு ஆதரவு வழங்கும்போது எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை. ஆனால் காணி விடுவிப்புக்கான உத்தரவாதம், மைத்திரிபால சிறிசேனவால் எழுத்துமூலம் வழங்கப்பட்டது. இன்றைய காணி விடுவிப்பு ஒரு படி மட்டுமே. எஞ்சிய காணிகளும் விடுவிக்கப்படவேண்டும். இந்த மக்கள் இங்கு வந்து செல்வதற்காக பொன்னாலை பருத்தித்துறை வீதியில், பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள வீதியையும் விடுவிக்க வேண்டும். இதனையும் பாதுகாப்புத் தரப்பினர் கரிசனைக்கு எடுத்து விடுவிக்கவேண்டும் என்றார். இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மற்றும் இராணுவத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி ஆகியோர் உரையாற்றினர். (த-5-10)

## கடந்த...

அச்சுறுத்தல் விளைவிக்காத மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற நாம் தயாராக இருக்கின்றோம். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மயிலிட்டித்துறைமுகம் மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. மயிலிட்டித்துறை முகத்துக்கு அருகில் உள்ள ஆலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட பந்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய இராணுவத் தளபதி,

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவின் சிந்தனைக்கு அமைவாக, இடம்பெயர்ந்துள்ள மக்களை அவர்களது சொந்த நிலங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். நல்லிணக்கத்தை வலுப்படுத்தவே மக்களை அவர்கள் வாழ்ந்த நிலத்தில் குடியமர்த்துகின்றோம். பல காணிகளை விடுவித்திருக்கின்றோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களும் நாங்களும் கடந்த காலத்தில் விரக்தியான சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்தோம். அவ்வாறான நிலமை இனிமேல் வேண்டாம். அந்த நிலமைக்குச் செல்லவும் கூடாது. நாங்கள் தாய் நாட்டுக்குச் சேவையாற்றவேண்டும்.

மக்களின் சுதந்திர வாழ்வுக்கு நடமாட்டத்துக்கு உகந்த சூழலை உருவாக்கிக் கொடுப்போம். மக்களின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு பொதுமக்களுக்குத் தேவையான உதவிகளை தொடர்ந்தும் செய்வோம் - என்றார். (த-5)

## மருத்துவர்கள்...

நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அந்தச் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமந்த ஆனந்த இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகப் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பல தரப்புகள் சந்தித்து பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன. சைட்டம் மருத்துவக் கல்லூரியை அரசுடமையாக்குவது தொடர்பான சட்ட மூலமும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தநிலையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொடர் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று அறிவித்துள்ளது. (ற-ஐ-10)

## ரூ.24 லட்சத்...

பணியாற்றிய பணியாளர் ஒருவரிடம் வழங்கப்பட்ட பணமே வங்கியில் வைப்பிலிடப்படாததோடு அந்த நபரையும் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 30 ஆம் திகதி குறித்த பணியாளரிடம் ஓர் வங்கியின் 24 லட்சம் ரூபா பெறுமதியான காசோலையைக் கொடுத்தனுப்பி காசோலைக்குரிய பணத்தைப் பெற்று மற்றொரு வங்கியில் வைப்புச் செய்துவருமாறு கூறி மோட்டார் சைக்கிளில் அனுப்பியுள்ளார்.

அவ்வாறு சென்ற பணியாளர் காசோலையைக் கொடுத்துப் பணம் பெற்றுள்ளார். ஆனால் அந்த வங்கிக்கு அருகில் உள்ள - பணம் வைப்பிலிடப்படவேண்டிய வங்கியில் பணம் வைப்பிலிடவில்லை.

வங்கிக்குச் சென்றவர் நீண்ட நேரமாகியும் கடைக்குத் திரும்பாத நிலையில் கடை உரிமையாளர் தேடிச் சென்றபோது பணியாளர் பயணித்த மோட்டார் சைக்கிள் திருநெல்வேலி பனிக்கர் சாலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. தற்போது குறித்த பணியாளரும் இல்லை. 24 லட்சம் ரூபா பணமும் இல்லை. 4 நாள்களாகத் தேடியும் பணியாளரும் பணமும கிடைக்காத நிலையில் வர்த்தக நிலைய உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றார். எனினும் பொலிஸார் குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்ய மறுத்துவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (4-101)

## தனிநாட்டை...

கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரை முடித்த கையோடு மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு அபிவிருத்திக்கு சிறப்புக் கவனம் செலுத்தியது. அபிவிருத்திச் செயற்பாடுகள் அசுர வேகத்தில் இடம்பெற்றன. இதனால் பல்துறைகளிலும் நாடு வளர்ச்சி கண்டது. ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம்தான் என்ன? தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், சுகாதாரம் என முக்கியதுறைகள் யாவும் அச்சுறுத்தலையும், சவால்களையும் எதிர்கொண்டுள்ளன.

இந்தியா, நோர்வே மற்றும் தமிழ்ப் பிரிவினைவாதிகளின் தேவைகளை நிறைவுசெய்யும் நோக்கிலேயே புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பின் ஊடாக பௌத்த மதத்துக்கு பின்னடைவு ஏற்படும் அபாயம் இருக்கின்றது. குறிப்பாக 1815 ஆம் ஆண்டு கலகத்தில்கூட பௌத்த மதம் இந்தளவு கொச்சைப்படுத்தப்படவில்லை.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மட்டுமே பகிரவேண்டியுள்ளது. இந்த இரு அதிகாரங்களையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களே கோருகின்றன. தனிநாடொன்றை உருவாக்கும் நோக்கிலேயே இவை கேட்கப்படுகின்றன.

ஐ.நா. சாசனத்தின்படி தனிநாடொன்று உதயமாக வேண்டுமானால் அடிப்படையாக இரண்டு காரணிகள் தேவை. ஒன்று ஆள்புல எல்லை ஒன்று இருக்க வேண்டும். இரண்டா வதாக அங்கே மனித உரிமை மீறல்கள், ஆள்கடத்தல், காணாமற்போதல் போன்ற நிகழ்வுகள் நடந்திருக்க வேண்டும். அப்படியானால் தனி நாடு ஒன்றை ஏற்படுத்த முடியும். இவை இரண்டையும் மேற்கொள்ள மு... ஆள்புல எல்லைக்காக காணி அதிகா... வழங்கப்படவுள்ளது. அடுத்ததாக இரா... வச் சிப்பாய்களை குற்றவாளிகளாக்கி ம... உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும், மனி... கடத்தல் மற்றும் காணாமற்போ தல் நிக... கள் இடம்பெற்றதாகவும் காட்ட முயற்சி... கின்றனர். அதனூடாக ஏதாவது ஒரு நா... முன்வந்து ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றி தனிநாட்டைப் பெற்றுக் கொடுக்கும் தந்திரம் ஒன்று அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இது வடக்கு, கிழக்கு மக்களைத் திருப்திப்படுத்தும் ஒரு விடயமாகும்.

அத்துடன் காணாமற்போனவர்கள் பற்றி ஆராய விசாரணைக்குழு அமைக்கப்படவுள்ளது. அப்படி அமைக்கப்பட்டால் நாட்டுக்காக தியாகம் செய்த பல்வேறு பாதுகாப்புப் படையினரைக் பொய்க்குற்றச் சாட்டில் கைதுசெய்யலாம். எமது தாய்நாட்டைக் காப்பாற்றி போர் வீரர்களுக்கும் புலன் ஆய்வுகளை மேற்கொண்ட இராணுவப் புலனாய்வுத்துறைக்கும் செய்யும் கைமாறு இதுவா? எனக் கேட்க விரும்புகின்றேன்.

பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு தற்போது உருவாகியுள்ள உலகப் பயங்கரவாதம் காரணமாக அந்த நாடுகள் மனித உரிமைகளைத் தள்ளி வைத்துவிட்டு தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை அளித்துள்ளன. ஆனால், நாமோ எமது தேசிய பாதுகாப்பைப் பின் தள்ளிவிட்டு மனித உரிமைகளுக்கே முன்னுரிமை வழங்கி வருகின்றோம் -என்றார். (வ)

## டெங்கினால்...

சாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இசுரங்க விஜேவர்தன மற்றும் சசிகுமார் கவீஸ் என்ற மாணவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

பதுளை மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இசுரங்க விஜேவர்தன என்ற மாணவன் டெங்கு நோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்தார். பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும் சசிகுமார் கவீஸ் என்ற மாணவன் டெங்கினால் நேற்று உயிரிழந்துள்ளார்.

தற்போது, பதுளை போதனா வைத்தியசாலையில் 61 பேர் டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (கு)

## தொற்றுத்...

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

மன்னார் உள்ளிட்ட சில இடங்களில் புதிய வகை நுளம்பு இனங்காணப்பட்டது. அது மலேரியா பரப்பும் நுளம்பு என்றுகூறப்பட்டிருந்ததோடு அது தொடர்பில் எச்சரிக்கை விடப்பட்டிருந்தது.

அத தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சின் மலேரியா தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவுக் குழுவினர், மன்னாருக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு ஆய்வில் ஈடுபட்டுள்ளனர் என்று சத்தியலிங்கம் மேலும் தெரிவித்தார். (4-101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பமிலியன்ஸ் அணி கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், ஜூலை 4
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் பமிலியன்ஸ் அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஜமகா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 30:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பமிலியன்ஸ் அணி முன்னிலை வகித்தது. அந்த அணி தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி முடிவில் 54:40 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)



# சைவத்தமிழ் வித்தி. வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 13 வயது பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி மோதியது. இதில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 4
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23)

# லக்சிகா வென்றார் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடமாகாண பாடசாலைகளின் பளுதூக்கல் சங்கம் நடத்திய தொடரில் 18 வயது பெண்களுக்கான 75 கிலோ எடைப்பிரிவில் பாசையூர் சென். அன்ரனீஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயம் கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது.
சென். அன்ரனீஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.மேரி லக்சிகா தங்கப் பதக்கத்தையும், ஆர். ஜெக்ரின்ரிக்சிகா வெள்ளிப் பதக்கத்தையும், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த ரி.கம்சா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (ம-422)




# பளுதூக்கல் தொடர்; அன்ரனிஸ் சம்பியன்

வடமாகாண பாடசாலைகளின் பளுதூக்கல் சங்கம் நடத்திய தொடரில் பெண்கள் பிரிவில் பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயம் கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உள்ளக அரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலய அணி 61 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலய அணி 33 புள்ளிகளைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கின. (ம-23)

# அரியாலை சனசமூக நிலைய கரப்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 4
அரியாலை சனசமூக நிலையத்தின் 68ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இதுவரை முடிவடைந்த சில ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

**வொலிகிங்ஸ்-சரஸ்வதி**
கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கச்சாய் வொலிகிங்ஸ் [illegible] டுக் கழக அ[illegible]க்கும், புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கச்சாய் வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழக அணி 21:25, 25:16, 25:17 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

**வளர்மதி-கலையொளி**
புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணிக்கும், சிறுப்பிட்டி கலையொளி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 25:22, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர் செற் வெற்றிபெற்றது.

**இந்து இளைஞர்-ஐக்கியம்**
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணிக்கும், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 15:25, 25:22, 25:16 செற் கணக்கில் வெற்றி பெற்றது.

**இந்து - பளை மத்திய அணி**
சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழக அணிக்கும், பளை மத்திய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பளை மத்திய விளையாட்டுக் கழக அணி 26:10, 25:16, என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது.

**ஐக்கியம்-கலைமதி**
அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும், புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணி 25:4, 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோல்டரின் வேகத்தில் இந்தியா தவிடுபொடி



இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெறுவதற்கு அந்த அணியின் தலைவர் கோல்டர் முக்கிய காரணமாக இருந்தார். அவர் 9.4 பந்துப்பரிமாற்றங்கள் வீசி 2 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்கள் உள்ளடங்கலாக 5 இலக்குகளைக் கைப்பற்றினார். அவர் ஆட்டநாயகனாகவும் தெரிவானார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற நான்காவது ஆட்டத்தில் இந்திய அணி மிக இலகுவான இலக்கை எட்டமுடியாமல் வீழ்ந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி. ஆரம்ப வீரர்களாக லூயிஸ் மற்றும் ஹோப். பந்துவீச்சுக்கு உரிய ஆடுகளத்தில் இருவரும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது மேற்கிந்தியத் தீவுகள். அணி 57 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹோப். லூயிஸ் 35 ஓட்டங்களுடன் குல்தீப் யாதவிடம் வீழ்ந்தார். மொகமட்டை 20 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் பாண்டியா. கோல்டர், பவல், நேர்ஸ் ஆகியோரைக் கொண்ட மத்திய வரிசையைத் தகர்த்தார் உமேஸ் யாதவ். முடிவில் 9 இலக்குகளை இழந்து 189 ஓட்டங்களைச் சேர்த்தது மேற்கிந்தியத் தீவுகள்.

யாதவ், பாண்டியா இருவரும் தலா 3 இலக்குகளையும், குல்தீப் யாதவ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு, ஆரம்ப வீரர் ரகானே நிலைத்தாலும் ஏனைய வீரர்கள் சிறந்த பங்களிப்பை வழங்கவில்லை. தவான் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வெறும் 3 ஓட்டங்களுடன் கோக்லி நடையைக் கட்டினார். கோல்டர் வீசிய திடீர் மேலெழும்பல் பந்துவீச்சில் கோக்லி ஆட்டமிழந்தார். கோக்லியை வீழ்த்துவதற்கு திடீர் மேலெழும்பல் பந்துகளையும், பவுன்சர் பந்துகளையும் எதிர் அணிகள் தற்போது ஆயுதமாகப் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. டோனி, ரகானே இருவரும் சிறந்த இணைப் பாட்டத்தை வழங்கினர். 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரகானே. டோனி ஓர் முனையில் நிலைத்தாலும் தடுமாற்றம் தொடர்ந்தது. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 14 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற நிலை. முதல் பந்தில் டோனி ஆட்டமிழக்க 178 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இந்தியா. (ம)

## விம்பிள்டனை கைப்பற்றும் மிகையான நம்பிக்கை நடாலிடம்

மிகவும் பழமை வாய்ந்த ரென்னிஸ் தொடரான விம்பிள்டனைக் கைப்பற்றும் நம்பிக்கையை முன்னணி வீரரான ரபேல் நடால் வெளிப்படுத்தினார்.

"விம்பிள்டன் தொடர் நேற்று ஆரம்பமானது. இது தொடர்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே நடால் இவ்வாறு குறிப்பிட்டார்.

விம்பிள்டனைப் பொறுத்தவரை ஆரம்பச் சுற்றுக்களில் நான் வழக்கமாக தடுமாறி வந்துள்ளேன். அந்தச் சுற்றுக்களே எனக்கு மிகவும் சவாலாக அமைந்துள்ளன. எனவே ஆரம்பச் சுற்றுக்களைச் சமாளித்து அவற்றை வெற்றிகரமாகக் கடந்துவிட்டேன் என்றால் நான் சம்பியனாகும் வாய்ப்பு அதிகம் உண்டு" என நடால் மேலும் தெரிவித்தார்.

விம்பிள்டன் தொடருக்கு முன்னதாக முடிவடைந்த பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணமான பிரான்ஸ் கிண்ணத்தை நடால் கைப்பற்றினார். இதனால் விம்பிள்டனில் அவரது செயற்பாடு தொடர்பில் இயல்பாகவே பெரிய அளவில் எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் விம்பிள்டன் தொடர் நடாலுக்கு கடந்த ஐந்து வருடங்களாகச் சிறப்பாக அமையவில்லை. இவற்றில் ஒருமுறையேனும் அவர் நான்காவது சுற்றுக்கு மேல் முன்னேறியது கிடையாது. நான்கு தடவைகள், தரப்படுத்தலில் முதல் 100 இடங்களுக்குள் இல்லாத வீரரிடம் தோல்வியடைந்துள்ளார். (ம)



## டோனி மோசமான அடைவு

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் டோனி, அரைச்சதத்துக்காக அதிகளவான பந்துகளை எடுத்துக்கொண்டு மிக மோசமான அடைவு ஒன்றை நிலைநாட்டியுள்ளார். முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 189 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 50 ஓட்டங்களை எட்டுவதற்குள் முன்னணி வீரர்களை இழந்தது. இதனால் மத்திய வரிசையில் களமிறங்கிய டோனி மிகவும் நிதானித்தார். இதனால் அவர் தனது அரைச்சதத்துக்காக 108 பந்துகளை எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடந்த 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிக பந்துகளை எதிர்கொண்டு அரைச்சதம் கடந்த வீரராக டோனி மாறியுள்ளார். இது ஓர் மோசமான அடைவு என்று சமூக வலைத்தளங்களும் ஊடகங்களும் விமர்சிக்கின்றன. (ம)



## இன்னும் ஒரு வாரத்தில் பயிற்சியாளர் தெரிவு

### கங்குலி தகவல்

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் இன்னும் ஒரு வாரத்தில் தெரிவுசெய்யப்படுவார் என்றும் பெரும்பாலும் எதிர்வரும் 10ஆம் திகதி இது தொடர்பான அறிவிப்பு வெளிவரும் என்றும் அந்த அணியின் முன்னாள் தலைவரும் இந்திய கிரிக்கெட் சபையின் ஆலோசனைக் குழுவில் ஒருவருமான கங்குலி தெரிவித்தார்.

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த கும்ளே பதவி விலகிய பின்னர் அந்த இடத்துக்கு எவரைத் தெரிவுசெய்வது என்பது தொடர்பில் சச்சின், லக்ஸ்மன், கங்குலி ஆகியோரைக் கொண்ட தெரிவுக்குழு ஆலோசனை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆசிகாவுக்குத் தங்கம்

வடமாகாண பாடசாலைகள் பளுதூக்கல் சங்கம் நடத்திய பளுதூக்கல் தொடரில் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 63 கிலோ எடைப் பிரிவில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த வி.ஆசிகா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

வி.ஆசிகா 140 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த பி.ரஜீபா 56 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் பூநகரி வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.நிரோஜினி 51 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# போர்த்துக்கல் அணிக்கு மூன்றாவது இடம்



ரஷ்யாவில் நடைபெற்ற பிபா க்ன் பெடரேசன் கால்பந்துத் தொடரில் மெக்சிக்கோவை வீழ்த்தி 3ஆவது இடத்தைத் தனதாக்கியது போர்த்துக்கல்.

போர்த்துக்கல் தனது அரையிறுதியில் சிலியிடமும், மெக்சிக்கோ தனது அரை யிறுதியில் ஜேர்மனியிடமும் தோல்வியடைந்தன. இதனால் போர்த்துக்கல் மற்றும் மெக்சிக்கோ அணிகள் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் மோதின:

ஆட்டம் ஆரம்பம் முதலே இரு அணி வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். 24ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணியின் ஆட்ரியன் சில்வா முதல் கோலைப் பதிவுசெய்தார். போர்த்துக்கலின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 54ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோ பதிலடி கொடுத்தது.

1:1 என்ற நிலையில் இரு அணிகளின் சீரான ஆதிக்கத்துடன் ஆட்டம் நகர்ந்து சென்றது. 90ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலின் பொறுப்புத் தலைவர் பெபே (அணித் தலைவர் ரொனால்டோ இந்த ஆட்டத்தில் விளையாடவில்லை) கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாவது இடத்தைத் தனதாக்கியது போர்த்துக்கல். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ஷாம்சன் அவர்களின்
SPOKEN ENGLISH
O/L, A/L எழுதியோர் இளைஞர், யுவதிகள்,பல்கலை மாணவர்கள் தொழில்புரிவோர், ஆசிரியர்கள்,வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.
எமது பேச்சுமூலமான ஆங்கிலப்பயிற்சியில் இணைய எந்தவொரு அடிப்படை ஆங்கில அறிவும் தேவையில்லை
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 08.07.2017 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
சனி, ஞாயிறு IELTS பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் - 15.07.2017
காலை 08.00 - 10.00
SAAMSON Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயில் அருகில்) யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
A/L 2017 தொழில் நுட்பப் பிரிவு மாணர்களுக்கான
விசேட செயலமர்வு

| திகதி | பாடம் |
|---|---|
| 7,8,9 | பொறியியல் தொழில் நுட்பம் உயிர்முறைமைகள் தொழில் நுட்பம் |
| 10,11 | தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் |
| 15,16,17 | I.C.T., விவசாயம், புவியியல் |

நேரம் காலை 8.30 - 2.00
குறிப்பு:
- பாடங்கள் ஒவ்வொன்றும் அலகு ரீதியாக தெளிவுபடுத்தப்படும்
- எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாளும் அதற்குரிய விடைகளும் விளக்கங்களும் வழங்கப்படும்
- எதிர்பார்க்கை செயன்முறை தொடர்பான விளக்கங்கள் இடம்பெறும்
முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்
கட்டணம் அறிவிடப்படும்
அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்
தொடர்புகளுக்கு 0772487774

## மரண அறிவித்தல்

### பொன்னையா ஐயாத்துரை



மருதங்கேணி தெற்கு, நாவலடிச் சந்தியைப்பிறப்பிடமாகவும் குடமியன் வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா ஐயாத்துரை நேற்று (03.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் பொன்னையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் கிருஷ்ணவேணி, கிருஷ்ணலீலா, கிருஷ்ணறாணி, கிருஷ்ணநிதி, கிருஷ்ணரதி, கிருஷ்ணவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2017) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் குடமியன் , வரணியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 08 . 1962



இறப்பு 03 . 07 . 2017

### செல்லத்துரை வரதரத்தினம்

யாழ். சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை வரதரத்தினம் நேற்று (03.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தினி (ஆசிரியை)யின் அன்புக் கணவரும் டிசாரத்தினத்தின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராசரத்தினம் (டென்மார்க்), சற்குணாம்பிகை, பொன்குணரத்தினம், ஹிமாலயரத்தினம் (கனடா), கிருபாரத்தினம் (ஆயுள்வேத வைத்தியர்), பத்மாம்பிகை (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Lanka Foriest, Punchi Borala, Colombo மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (04.07.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டக்குளி, கொழும்பு.
077 119 0206

தகவல்:
மனைவி, மகன்.

சாரதிகள் தேவை
நடமாடும் பாண் வாகனம் ஓடுவதற்கு நன்கு அனுபவமுள்ள சாரதிகள் தேவை.
புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி வீதி, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

நாவற்குழியில்
காணி விற்பனைக்கு
நாவற்குழியில் A32 வீதியில் இருந்து 1½ Km தூரத்தில் கடற்கரையுடனான 5 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-077 676 8080, 021 492 7778

IIS
22 வருட கால கல்வி அனுபவத்துடன் இணைந்து எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்
MBA
Master of Business Administration
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட கற்கைநெறி
- General
- Finance
- Information Technology
- Marketing
- Human Resource Management
- International Business
தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கைநெறி.
ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த கட்டணத்துடன் MBA.
வேலை செய்வோரின் வசதிக்கேற்ப நெகிழ்வான விரிவுரை நேரங்கள்.
தகைமை, நிபுணத்துவம், தொழில்துறை அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் விரிவுரைகளும் வழிகாட்டல்களும்.
உயர்கல்விக்கே உரித்தான கற்றல் சூழலும் நவீன மயப்படுத்தப்பட்ட வசதிகளுடன் கூடிய வளாகமும்.
புதிய பிரிவுகள் ஆரம்பம் : 15. 07. 2017
200, சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம்
021 222 8060 , 021 4900 900
IIS CITY CAMPUS
Hotline: 071 777 5666
info@iis.edu.lk

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கமணி சோமசுந்தரம்



பிறப்பு 10.05.1933 இறப்பு 03.07.2017

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது 27A, அம்மன் கோயில் வீதி, பண்டாரிக்குளத்தில் வசித்தவருமாகிய திருமதி தங்கமணி சோமசுந்தரம் நேற்று (03.07.2017) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சிதம்பரப்பிள்ளை - முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் யோகேஸ்வரன், மகேஸ்வரன், ஈஸ்வரன், பரமேஸ்வரன், சிவனேஸ்வரன், புவனேஸ்வரி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் மங்கையர்க்கரசி, வனிதா, தேன்மொழி, ஜெயகௌரி, வாசுதேவன் றங்கநாதன், சுபாசினி ஆகியோரின் அன்பு மாமியும் செந்தூரன், கேதீஸ்வரன் மிதுனேசன், நிரோஸ், யாபேஷ் பிரஷாந்தினி, பிரவீனா, சௌமியா, தவரூபன், கஸ்தூரி, தர்சிகா, நிரூபன், சுபனேஷ், சுகுனேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பராசக்தியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நாகலிங்கம், மகேஸ்வரி, தர்மலிங்கம், மற்றும் பரமேஸ்வரி, திலகவதி, திருஞானம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2017) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் தச்சனான்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P. 024 222 3387, 077 308 6403,
+164 7406 5929, 041 7644 58166

தகவல்:
குடும்பத்தினர்.

## சிலியை வீழ்த்தி ஜேர்மனி சம்பியன்

ரஷ்யாவில் நடைபெற்ற பன்னாட்டு கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் கிண்ணத் தொடரில் ஜேர்மனி கிண்ணம் வென்றது. இந்தத் தொடரில் தொடரை நடத்தும் ரஷ்யா, ஜேர்மனி, போர்த்துக்கல், ஆஸ்திரேலியா, சிலி, மெக்சிக்கோ, நியூசிலாந்து, கமரூன் என மொத்தம் 8 அணிகள் மோதின. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஜேர்மனியும் சிலியும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் வீரர் ஸ்டின்டில் முதல் கோலைப் பதிவு செய்தார். சிலி பதிலடி கொடுக்கத் தவறிய நிலையில் 1:0 என்று ஜேர்மனியின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்பட வில்லை. முடிவில் ஜேர்மனி அணி கிண்ணம் வென்றது. இந்தக் கிண்ணத்தை ஜேர்மனி கைப்பற்றுவது இதுவே முதல் முறை. சிலியை விட ஜேர்மனி பலமான அணி. எனவே அந்த அணியே கிண்ணம் வெல்லும் என்று கால்பந்தாட்ட உலகால் பொதுவாகக் கணிக்கப்பட்டது. அந்தக் கணிப்பு மெய்ப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.